
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්


# தினமுரசு வாரமலர்

ரூபா 30.00
பெப்ரவரி
18 - 24, 2016
பக்கம்24
முரசு 1157


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY




## சாத்தியப்படுமா நல்லாட்சிக்கு எதிரான சதி?



## கூத்தாடிகளின் கைகளில் வடக்கு மாகாணசபை





## அமெரிக்காவின் ஏகவல்லரசு ஆதிக்கம்?

ஏப்பையில் நெய் ஒழுகுதென்றால் கேட்பவனும் கேனையனா?



## தூய காதல் துளிர்த்திடாதோ?

## ௐ சர்ப்ப தோசத்திற்கு பரிகாரம்

ஒருவருடைய பிறந்த ஜாதகத்தில் லக்னம் அல்லது 2 ஆம் இடத்தில் ராகு அல்லது கேது நின்றால் அது சர்ப்பதோஷம் ஆகும். வெள்ளிக்கிழமை காலை 10.30 முதல் 12 மணிக்குள் நமது ஊரில் இருக்கும் சிவாலயத்தில் கால பைரவருக்கு பாலபிஷேகம் செய்யவேண்டும்.

புனுகு பூசவேண்டும் நாகலிங்கப்பூமாலை அவருக்கு சாத்தவேண்டும். பால் பாயாசம், பால் சாதம் இவைகளை நைவேத்தியமாகப் படைக்கவேண்டும். நமது பெயருக்கு(யாருக்கு சர்ப்பதோஷம் இருக்கிறதோ, அவர் பெயருக்கு) அர்ச்சனை செய்யவேண்டும். அதன்பிறகு, கால பைரவர் சன்னதியின் முன்பாக அமர்ந்துகொண்டு காலபைரவர் 108 போற்றி அல்லது கால பைரவர் 1008 போற்றி அல்லது காலபைரவர் அஷ்டோத்திரத்தை மனதுக்குள் ஒருமுறை ஜபிக்கவேண்டும். பிறகு நேராக நமது வீட்டிற்குச் செல்லவேண்டும்.

இப்படி தொடர்ந்து 8 வெள்ளிக்கிழமைகளுக்கு வழிபாடு செய்யவேண்டும். லக்னம் அல்லது இரண்டாமிடத்தில் ராகு அல்லது கேது இருந்து ராகு மஹாதிசை அல்லது கேது மஹாதிசை வந்தால், அந்த திசை முழுவதும் வாரம் தவறாமல் இந்த வழிபாட்டைச் செய்து வரவேண்டும். இந்த திசைமுழுவதுமே அசைவம், மது, போதைப்பொருட்களை கைவிடவேண்டும்.

ஆன்மீகம்

## உண்மையான உபவாசம்

தாய், தந்தை, மகன், மகள் இவ்வாறு உறவுகள் பல இந்த உலகில் இருந்தாலும், கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள உறவே மேலானது. அதனை இயேசு கிறிஸ்து மூலம்தான் புதுப்பிக்கமுடியும். ஆதாமினால் உறவு சீர்குலைந்தது.

ஏசாயா 58-ம் அதிகாரத்தை வாசித்து பாருங்கள், உபவாசம் என்பது எதைக் குறிக்கிறது.

ஆண்டவர் 40 நாட்கள் உண்ணாநிலையிலிருந்து தன்னையும், சுயத்தையும், அடக்கிக்கொண்டு பிறகு மக்களுக்கு பணி செய்தார். நாமும் நமது கோபங்கள், சண்டைகள், பொறாமைகள், தூஷணம், வன்மங்கள், வெறி, இச்சை, அகங்காரம் போன்ற எல்லா விதமான மனித காரியங்களையும் விடுத்து, உள்ளத்தையும் அடக்கி இந்த காலத்தில் கடவுளிடம் அருளைப் பெறுவோம்.

அப்போது தான் உயிர்த்தெழுதல் நாள் நம் வாழ்வு புது அர்த்தத்தை கொடுக்க முடியும். மகிழ்ச்சியை தரமுடியும். கடவுளுக்கும், மனிதனுக்கும், உள்ள உறவு புதுப்பிக்கப்பட முடியும். இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் வழியாக புதுப்பித்தலை கடவுள் மனிதனோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இதனை உணர்ந்து அவரது பாதங்களில் தஞ்சமடைவோம்.

## தலைவர்களின் பொறுப்புகள்!

அல்லாஹ்வின் நிழல் தவிர வேறு நிழல் இல்லாத (இயாமத்) நாளில் நீதமிகு தலைவருக்கு அல்லாஹ் நிழல் வழங்குவான். (புகாரி -முஸ்லிம்)

நல்லுதவி செய்யப்பட்ட நீதமிகு தலைவர் சுவனவாசி என ஒரு மணி மொழியில் மாநபி (ஸல்) கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

அன்னை ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்:- இயாமத் நாளில் அல்லாஹ்வின் அர்ஷின் நிழலின் பக்கம் முந்திச் செல்பவர்கள் யார் என நீங்கள் அறிவீர்களா? என தோழர்களிடம் அண்ணல் நபி (ஸல்) வினவினார்கள். அல்லாஹவும் அவனது தூதருமே நன்கறிவர் எனத் தோழர்கள் பதிலளித்தனர். அதற்கு நபியவர்கள்: அவர்களது உரிமையை வழங்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொண்டும். அவர்களிடம் உரிமையைக் கோரப்பட்டால் அதனை வழங்கியும், தங்களுக்கு ஆட்சி புரிவது (தன்னலம் பேணுவது) போன்றே மக்களுக்கு ஆட்சி புரிந்தவர்களே அவர்களாவர் எனப் பகர்ந்தார்கள். (அஹ்மது)

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

# தேன் கிண்ணம்



## சந்தேகம் வேண்டாம் காதலி

அழகு ஒரு பறவை
அது தலைமேல்
பறந்து போகலாம்
ஆனால்???
அதை நாம்
தலையில்
கூடு கட்டிவிடக் கூடாது!!!
அது போலதான்...
மலரே!!!
அழகை ரசிக்கலாம்.
ஆனால்???
இதயத்தில்
கூடு கட்டி விடக்கூடாது!!!
அப்படி என்றால்
நீதான் அழகு!!!
என் இதயத்தில்
கூடு கட்டியவள்
நீதான்.
இதை எந்த அழகு
வந்தாலும்
பிரிக்கமுடியாது!!!
அதை – நீ
புரிந்து கொள்...!

கே.வாலேந்திரன்
கொள்ளுப்பிட்டி.


## அனர்த்தம்

மேவுகடல்
மோகம் எழ
புவிமீது புரண்டோடி
தாள இசை சந்தம் இன்றி
இயற்கை படிக்கும்
அழுகுரலே சுனாமி எனும்
அனர்த்தம்.

தன்னை தீயாக்கி
ஆறறிவு மனிதனுக்கு
அறுசுவை விருந்தாக்கி
தன் இறுதிக் கண்ணீர்த்துளியையும்
நெருப்பினூடு வற்ற வைத்து
அழும் கண்ணீர் தீர்ந்துபோக
மேகமது வடிக்கும் புலம்பல்
வரட்சி என்னும்
அனர்த்தம்.

மழை மேகம் கருக்கொண்டு
மழைத்துளியது பிரசவிக்க
மனிதனில் பற்றுக்கொண்டு
வரட்சி என நீ அழுதாய்
போதுமா என் கண்ணீர் என
கொட்டித் தீர்க்கும்
மேகத்தின் தீரா
புலம்பல்
மழை வெள்ளம் எனும்
அனர்த்தம்.

புவித்தாய்க்கு குளிர்காலமோ
பெரிதாய் நடுங்குகிறாள்
குளிரிற்கு போர்வையாய்
கூட்டங்கள் சாய்ந்து விழ
மனித பாவங்களால்
பொறுக்காத புவி அன்னையின்
பெரும் புலம்பல்
புவி நடுக்கம் எனும்
அனர்த்தம்.



அனர்த்தங்கள் பலகோடி
ஆண்டாண்டு தொடர்கின்றன
அன்னையவள் சீற்றமதில்
அழிவுகள் ஆளுகின்றன
இன்னுமேன் தயக்கம் மனிதா
இன்னுலகில் நீ வாழ
இயற்கையை பேணிடு
இயல்பைப் போற்றிடு.

டினோஜா நவரட்ணராஜா,
காரைநகர்.

## உலகை தூக்கியெறி

தெருவோரம் கிடக்கின்றது மனிதம்
தேம்பி அழுகின்றது புனிதம்
என்றாலும் மனிதனின் தந்திரம்
ஓயாது இயங்கும் இயந்திரம்

உலகை சம்பாதிக்க நாடி
எங்கெல்லாமோ தினமும் ஓடி
பொய்யும், புரட்டும்கூடி
ஏமாற்றம் அடைந்து வாடி

நிறைவேறா ஆசைகள் தொடரும்
நித்தம் தேவைகள் வருடும்

இதுதான் உலகின் மாயம்
இகபரம் இரண்டும் தேயும்

விட்டுப்போவதைத் தேடி
வேதனைகளைத்தான் நாடி ஓடி
வேண்டாத ஆசைகளோ கோடி
வேண்டாம், ஓடுவோம்
படைத்தவனை நாடி

படைத்தவனை அறி
சொர்க்கமே எமது குறி
உலகை தூக்கியெறி
அது கிடக்கின்றது நாறி.

நிந்தவூர் மக்கீன் ஹாஜி

## அவளின் இரவுகள்...

நெடுநேர இரவுகள்
காதோரம் பேசிய
அலைபேசி அழைக்காமல்
அணைந்து போய்க் கிடக்கின்றது
நிர்வாணமான இரவுகளின்
நிசப்தமான படுக்கைகள்
அவளின் மனதை கூறுபோட்டு
கொண்டிருக்கின்றது.
இமை மூட விழிகள்
அலைபேசி திரையை
வெறித்துப் பார்த்தபடி.
அழைப்புக்காக ஏங்குகின்றன
மீதி இரவுகள் முதல் நாள்
குறுந்தகவல்களை
மீட்டி அவனுடன் பேசுகிறாள்
நினைவுகளின் எல்லை மீறலால்

இதயவறைகள் குருதியின்றி
வறண்டு கிடக்கின்றன
கண்ணீர் சுரப்பிகள்
விழிவெண்படலத்தின்
ஈரப்பதனை
கூட்டிக்கொண்டிருக்கின்றன.
ஓமோன்களின் இடைத்தாக்கத்தால்
உருவான நீர்த்துளிகளால்
தலையணையைத்
துவைத்துக் கொண்டிருக்கின்றாள்
விம்மல்கள் வெம்மல்களாக
மாறிக் கொண்டிருக்கின்றன.
ஆனால் அவளின் எண்ணங்கள்
ஊமையின் எண்ணங்களைப் போல்
அடங்கியிருக்கின்றன யாரிடமும்
சொல்லமுடியாது.




மதி தீ,
அளவெட்டி, யாழ்ப்பாணம்.

தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

**தினமுரசு வாரமலர்,**
**மாநகரசபை கட்டடம்,**
**3 ஆம் மாடி,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0214503262, 0774150799**




## பெப்ரவரி - 18

**ஒரு முறை வந்தால் கனவு.**
**இரு முறை வந்தால் ஆசை!**
**பல முறை வந்தால் இலட்சியம்.**

அப்துல் கலாம்

# சம்பந்தனும் சுமந்திரனும் ஈழம் குறித்து தைரியமாக பேசுவதற்கு என்ன காரணம்?

**தேசிய பாதுகாப்பில் ஏற்பட்டிருக்கும் விரிசலும் வடக்கில் தலைதூக்கியுள்ள பிரிவினைவாதமுமே இன்று சம்பந்தன் மற்றும் சுமந்திரன் என்போர் பாராளுமன்றத்தில் தமிழீழ கோரிக்கைகளை தைரியமாக கோருவதற்கு வித்திட்டுள்ளன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த சமரவீர தெரிவித்துள்ளார். அன்று தோற்கடிக்கப்பட்ட தமிழீழ கொள்கைகளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரான செயித் அல் ஹுசைன்மூலம் அடையும் முயற்சி பலமாக முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.**



தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக்காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியினால் அடைய முடியாதவற்றை நிறைவேற்றிக்கொள்ளவும், ஜோர்ஜ் புஷ் மற்றும் டேவிட் மிலிபேன் போன்றோர் நாட்டை பிளவுபடுத்தி இலங்கை இராணுவத்தை காட்டிக் கொடுக்க முயன்றதை தற்போது செயித் அல் ஹுசைன் வருகையின் மூலம் நிறைவேற்றிக்கொள்ளவுமே முற்படுகின்றது. இந்நாட்டில் இராணுவ வீரர்களின் நலன் தொடர்பில் யாரும் கண்டுகொள்வதில்லை. முப்பது வருட கால யுத்தத்தினை நிறைவுசெய்து நாட்டின் சுமூகமான வாழ்வுக்கு இவர்களே காரணமாகும். ஆனால் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் இராணுவ வீரர்களை காட்டிக் கொடுத்து சிறைக்கு அனுப்பவே முயற்சிக்கின்றது. பயங்கரவாதத்திற்கு எதிராக தங்களது உயிரையும் தியாகம் செய்யும் இராணுவ வீரர்களுக்கு நாம் பெரும் கடமைப்பட்டவர்கள். ஆகவே நாம் அவர்களை மதிக்கவேண்டும். நாட்டின் பாதுகாப்புக்கென பெரும் தியாகங்களை செய்யும் அவர்களை சிறைக்கு அனுப்பி தண்டனை வழங்கவே தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கின்றது.

## வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் கோரிக்கைக்கு முடிவில்லை

**வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் மீது குற்றச்சாட்டு**




வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் ஆசிரியரின் இடமாற்றத்தைத் ரத்துச் செய்யக்கோரி ஆர்ப் பாட்டங்கள் நடாத்தியும் அதிகார வர்க்கங்கள் அசையவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய விளையாட்டுத்துறை ஆசிரியரை அதிகாரிகள் அதிகார துஸ்பிரயோகத்தின்மூலம் இடமாற்றம் செய்துள்ளதாக தெரிவித்து மாணவர்கள் பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் பாடசாலைக்கு ஒவ்வாத சீருடை அணிந்துவருவது தொடர்பாக நடவடிக்கை எடுத்தமையாலும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் மகனது சீருடை தொடர்பாக நடவடிக்கை எடுத்தமையாலும் விளையாட்டுத்துறை ஆசிரியர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த மாணவர்கள் இவ் இடமாற்றத்தை நிறுத்தக்கோரியே தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர்.

அத்துடன், கடந்த வெள்ளிக்கிழமை தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும், இதுவரை எந்த அதிகாரிகளும் சாதமான பதிலை வழங்காமையால் தெடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர். இதன்போது, அதிகார துஸ்பிரயோகம் செய்யாதே, மகா வித்தியாலயத்தை வீழ்த்த நினைக்காதே என்ற கோசங்களை மாணவர்கள் எழுப்பியதோடு பதாதைகளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாங்கியிருந்தனர். இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா அவர்களிடம் கேட்டபோது, ஆசிரியரின் இடமாற்றம் மாகாணசபையின் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப ஒரு வழமையான நடவடிக்கை. இதில் எந்த பிரச்சினையும் இல்லை. அந்த இடமாற்றம் குறித்து அவர்கள் முறைப்படி அணுகமுடியும். உயர்தரப் பரீட்சை நெருங்கும் நிலையில் மாணவர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வது பிழையான ஒரு நடவடிக்கை. இதுதொடர்பில் உயர்தர வகுப்பு மாணவர்களின் பெற்றோருடன் சந்திப்பு ஒன்றை மேற்கொள்ள ஒழுங்குபடுத்துமாறு குறித்த பாடசாலை அதிபரிடம் தெரிவித்துள்ளேன். இது ஒரு சிலர் பாடசாலையை குழப்புவதற்காக செய்யும் செயற்பாடு எனவும் தெரிவித்தார்.

## ஈ.பி.டி.பியின் தேசிய எழுச்சி மாநாடு விரைவில்...!



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு இவ்வருட நடுப்பகுதிக்குள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் தற்போது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கிராமங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில், கிராம, பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் கட்சிக்கான ஆதரவாளர்களை மேலும் அணிதிரட்டும் அதேவேளை முதற்கட்டமாக மாவட்ட, மாகாண மட்டங்களில் மாநாடுகளை நடத்தவுள்ளதுடன் இறுதியாக மாபெரும் தேசிய எழுச்சி மாநாடொன்றையும் நடாத்த கட்சி தீர்மானித்துள்ளது. அந்தவகையில் கட்சியினதும் கட்சியின் நலன்சார்ந்து மக்களதும் ஆதரவாளர்களதும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் விமர்சனங்களையும் நாம் வரவேற்கின்றோம் என்று தெரிவித்த பசுபதி சீவரத்தினம், புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்களினதும் ஆதரவாளர்களினதும் கருத்துக்களையும் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார். இத்தேசிய மாநாடு நடைபெறும் இடம், காலம் இதுவரையில் இறுதி செய்யப்படவில்லை என்றும், அதன் விபரங்கள் உரிய காலத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் தெரியப்படுத்துவோம் என்றும் அதற்கு சகலதரப்பினரும் எமக்கு பூரண ஆதரவு நல்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்றும் தேசிய அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வட மாகாண ஆளுநராக சிங்களவர் நியமிக்கப்பட்டமை, தமிழர் ஆளப்படும் தரப்பு என்பதை பிரதிபலிக்கின்றது



### சிவாஜிலிங்கம்

வடமாகாண ஆளுநர் நியமனமானது சிங்களவர்கள் ஆளுகின்றவர்கள் என்பதையும், தமிழர்கள் ஆளப்படுபவர் கள் என்பதனையும் பிரதிபலிக்கும் வகையிலான செய்தியை வழங்குகின்றது என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்புதிய ஆளுநர் நியமனம் தொடர்பில் லங்காசிறி 24 செய்திப் பிரிவுடனான நேர்காணலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். ஆளுநர் பதவி ரத்து செய்யப்படவேண்டும் என்பதே தமது தொடர் கோரிக்கை எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் அதிகளவான தமிழர்கள் வாழ்ந்துவருகின்ற நிலையில், தமிழ்பேசும் ஒருவர் வடமாகாணத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.அத்துடன், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயின் நியமனத்திற்கு தாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும், அவர் நீதியின் அடிப்படையில் செயற்பட தவறும்பட்சத்தில் அவருக்கு எதிராக தாம் செயற்படுவதாகவும் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். ரெஜினொல்ட் குரே மாகாண சபை அனுபவமுள்ளவர் என்ற அடிப்படையில் அவர் சிறந்த முறையில் வடமாகாண செயற்பாடுகளை முன்னெடுப்பார் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## காணாமற் போனோர் தொடர்பில் அவசர சான்றிதழல்ல! நியாயமான ஆய்வுநோக்கிய தேசிய பொறிமுறையே அவசியம்!

### செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா



காணாமற் போன எமது உறவுகள் தொடர்பில் அவசரமாக சான்றிதழ்கள் வழங்குவ தென்பது எமது மக்களுக்கான நியாயமாக அமை யாது. எனவே, காணமற்போனவர்கள் தொடர்பில் நியாய மான ஆய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையிலான தேசிய பொறிமுறையே அவசியமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் அவர்கள், காணாமற்போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு, காணாமற்போனவர்களின் உறவுகளின் சாட்சியங்கள் பெறப்பட்டு உள்ளன. மேலும் பெறப்படுகின்றன. இந்த ஆணைக்குழு தொடர்பில் எமது நிலைப்பாட்டினை நாம் ஏற்கனவே முன்வைத்துள்ளோம். இங்கு முன் வைக்கப்பட்டுள்ளதும், முன்வைக்கப்படு கின்றதுமான சாட்சியங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற வகையிலான முறை யான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதை நான் கடந்த 13ஆம் திகதி நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தியுள்ளேன்.

இங்கு சாட்சியங்களை வழங்கியுள்ள ஒருசாரார், அறியாமைகள் காரணமாகவும், தூண்டப்பட்ட நிலைகளிலும், சுய தேவைகள் நிமித்தமும் சாட்சியங் களை வழங்கியுள்ளதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன. இந்த சந்தேகம் எமக்கு மட்டுமல்ல, பலருக்கும் உண்டு.

இந்த சாட்சியங்கள் முறையாக ஆராயப்பட்டதன்பின்னர், உண்மைகள் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு உண்மை என உறுதிப்படுத் தப்படுகின்ற சம்பவங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு நியாயமான பரிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கமைவாக தேசிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினமுரசு
வாரமலர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## கேப்பையில் நெய் ஒழுகுதென்றால் கேட்பவனும் கேனையனா?

வடக்கு மாகாணசபையின் விவசாய அமைச்சருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஆளும் கட்சி உறுப்பினர்கள் சுமத்தியுள்ளனர். அதில் உள்ள சரி-பிழை பற்றி இங்கு நாம் பேசவரவில்லை. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் குறைகளை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி நீதி கோரும்போது அதனை ஆராய்ந்து மக்களிற்கு தெளிவு படுத்தவேண்டியது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உங்களின் கடமையல்லவா...!

ஒன்றில் விவசாய அமைச்சர் ஐங்கரநேசனின் பக்கத்தில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி அதற்கான தீர்ப்பினை வழங்கவேண்டும். இல்லையேல் குழப்பத்தை ஏற்படுத்தும் ஆளும் கட்சி உறுப்பினர்களின் அரசியல் நாடகத்தை மக்களிற்கு அம்பலப்படுத்தவேண்டும். அதை விடுத்து "காய்த்தமரத்திற்குத்தான் கல்லெறி விழும், நாம் பனங்காட்டு நரிகள் உந்த சலசலப்பிற்கெல்லாம் அஞ்சமாட்டோம் என்று சொல்லிக்கொண்டு இருப்பது முறையல்ல." (கடந்த 10 ஆம் திகதி முழங்காவிலில் நடைபெற்ற நிகழ்வில் இவ்வாறெல்லாம் வீரவசனம் பேசியுள்ளார் எங்கள் முதல்வர் விக்னேஸ்வரன்.) பூத்துக்குலுங்கி காய்த்துக்கனியாகிய நிலையில்தானே வடமாகாணசபை நிற்கிறது. அது நீங்கள் சொல்லித் தெரியவேண்டிய தேவையில்லையே...! காய்க்காத மரத்திற்கும் கல்லெறிவார்கள் அது தெரியுமா உங்களிற்கு. ("நீ இருந்தென்ன இலாபமென்று")

வடமாகாண சபையின் வரவு - செலவுத்திட்டம் கடந்த டிசம்பர் மாதம் முன்வைக்கப்பட்டபோது விவசாய அமைச்சர் ஐங்கரநேசனிற்கெதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டன. அப்போது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அந்தக்கணமே தீர்வு வழங்கியிருந்தால், இன்று அது விஸ்வரூபம் பெற்றிருக்காது. மக்களின் பிரச்சினைகளிற்கு தீர்வுகாணும் மாகாண சபை நேரத்தை இது வீணடித்திராது. அன்று தீர்க்கப்படாத பிரச்சினை கடந்த 9ஆம் திகதி விஸ்வரூபம் பெற்றுள்ளது. தொடர்ந்துவரும் அமர்வுகளிலும் இது தீர்க்கப்படவில்லையானால் மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும். சிலரின் அலட்டல்களிற்கு பதில் சொல்லமுடியாது என விட்டுவிட இது உள்வீட்டுச் சண்டையல்ல. ஒரு மாகாணத்தின் ஆளும் கட்சி உறுப்பினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை இதற்கு முதலமைச்சர் என்கின்றரீதியில் பதில் சொல்லியே ஆகவேண்டுமல்லவா...? மாகாண சபை அமர்வில் நடைபெற்ற பிரச்சினைக்கு முழங்காவிலில் பதில்சொல்வது சிறுபிள்ளைத்தனமானது என்பதை சிறுபிள்ளையே சொல்லும்.

தமிழரின் அரசியலில் இரு வேறு தலைமைகளுக்கு எதிராக இருநம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. ஒன்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய அமிர்தலிங்கத்துக்கு எதிரானது. அடுத்தது வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிரானது. அன்று இனவாதத்தின் இருப்பினை நிலைநாட்ட உருவான பேரணை இன்று எதற்காக அனந்தி, பசுபதிப்பிள்ளை, சிவாஜிலிங்கம் உள்ளிட்ட வடமாகாண சபை உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டது என்பது மக்களிற்கு தெளிவு படுத்தவேண்டும்.


தமிழ் மக்கள் பேரவை தொடர்பான விடயத்தில் முதலமைச்சரிற்கு எதிராக கையொப்பமிட ஐங்கரநேசன் மறுத்தார் என்பதற்காக இவர்கள் இந்த விடயத்தில் வைத்துப் பழிவாங்குகின்றார்கள் என்றால் இவர்கள் கூறும் குற்றச்சாட்டுக்கு ஏன் எங்கள் விவசாய அமைச்சர் தலைநிமிர்ந்து பதில் சொல்லவில்லை...? தன்னில் தவறில்லை, இது அரசியல் பழிவாங்கல்தான் என்றால் தனக்கெதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களிற்கு மக்கள்முன் பதிலளிக்கலாம்தானே...! முதல்வரை இவர் பாதுகாக்க முதல்வர் இவரைப் பாதுகாக்க உங்களைத் தெரிவுசெய்த மக்கள் என்ன கேனயங்களா...? இதில் பலர் பல பழிவாங்கல்களிற்காக புகுந்து விளையாடுகின்றனர் என்பது எமக்குப் புரியாமலில்லை. எங்கள் கூட்டமைப்புத் தலைமைகள் தமிழ் மக்கள் பேரவையின் பழிவாங்கல்களிற்கு இதனைப் பயன்படுத்துகின்றனர். மறுபுறத்தில் எங்கள் சீ.வி.கே ஐயா செய்த கூட்டுறவுத் திருவிளையாடல்களை கணக்குரீதியாக, ஆதார பூர்வமாக முன்வைத்தமையால் அதற்கான பழிவாங்கலாகவும் இது பரிணமித்துள்ளது. இவ்வாறான அரசியல் பழிவாங்கல்கள்தான் இதற்கான அடிப்படைக்காரணம் என்றால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டில் உண்மையில்லை என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்கலாம் தானே...! அதைவிடுத்து அனைவரும் சேர்ந்து தெரிவுசெய்த மக்களை கேனயங்களாக்க ஊடகங்கள் என்றும் இடமளிக்காது என்பதே இதன் சாரமாகும்.

# சாத்தியப்படுமா? நல்லாட்சிக்கெதிரான சதி

நல்லாட்சியில் எமக்கொரு யோகம் பிறக்கும், நாம்பட்ட துன்பத்திற்கெல்லாம் ஒரு தீர்வுவரும் என்றிருந்தோம். ஆனால் நிலைமை நாளுக்கு நாள் மாறிவருகின்றது. இனவாத இடிபாட்டுக்குள் இருக்கும் நல்லாட்சியரசுக்கு பெரும்பான்மை இனத்தின் மத்தியில் தம்மைப் பலவீனப் படுத்தும் விடயங்களாக தமிழர் பக்கங்கள் மாறிவருகின்றன என்பதை உணர ஆரம்பித்து விட்டனர்.

அதாவது போர்க்குற்றத்தில் இருந்து இனப்பிரச்சினைத் தீர்வுப் பொறிமுறைவரை தமிழர்க்கு நாட்டை அரசு தாரைவார்த்துக் கொடுக்கப்போகின்றது எனும் நிலைப்பாட்டினை மகிந்த தரப்பினர் பெரும்பான்மை மக்களிடையே வியாபிக்கவிட்டுள்ளனர். இதனால் அரசினால் சிலவற்றை சொல்லமுடிகின்றதே தவிர செயற்படுத்த முடியவில்லை.

போர்க்குற்ற விசாரணையின் பாதிப்பு எனும்பெயரில் பெரும்பான்மையினரின் ஆதரவை பலமாக இழக்கநேரிடும் என்பதை உணர்ந்த நல்லாட்சியரசு சர்வதேச முன்றலில் ஒரு முகத்தையும் பெரும்பான்மை மக்களிடத்தில் வேறோர் முகத்தையும் காட்டிவருகின்றது. கைதிகளின் விடுதலையில் இருந்து அரசியலமைப்புச் சீர்திருத்தம்வரை தமிழர்க்கு நல்லாட்சியரசு சாதகமாக எதைச் செய்தது என்றால் எதுவுமேயில்லை. நல்லாட்சி, நல்லிணக்கம் எனும் எண்ணக் கருக்களை நிலைநாட்ட சில விஜயங்களையும், தமது




## வீடு வந்து சேருமா
## தமிழன் விதைத்த வேளாண்மை?

அரசிற்கு சேதாரமில்லாத சில நன்மைகளையும்செய்து வந்ததே தவிர தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் எதையும் பூர்த்திசெய்யவில்லை.

புதிய அரசியல் யாப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு இடமில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு அரசு தெரிவித்துள்ளது. 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சில அதிகார பரவலாக்கல் முறைகள் உட்புகுத்தப்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அரசாங்கம் கூறியுள்ளது. புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தொடர்பாக பேச்சுநடத்தி அந்த விடயங்களை யாப்பில் இணைத்துக்கொள்வது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தனிடம் தெரிவித்ததாக கூறப்படுகின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரசாங்கம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தும் என்றும் ஆனால் புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தின் பின்னர்தான் அந்த பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள அதிகாரப்பகிர்வு முறைகள் புதிய அரசியல் யாப்பில் சேர்க்கப்பட வேண்டுமென இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுத்துள்ளது எனவும், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள இந்தியப் பிராந்தியத்தின் பாதுகாப்பு பற்றிய ஏற்பாடுகள் தொடர்ச்சியாக பேணப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்திய மத்திய அரசு வலியுறுத்தியதாகவும் கூறப்படுகின்றது. ஆக மொத்தத்தில் இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன அயோத்திக்கு என்றுமே விடிவுவராது. என்பதுதான் சாரமாகப் போகின்றது.

நல்லாட்சியின் பலம் நாளுக்கு நாள் நலிவுறுகின்றதா? அல்லது நாட்டியம் போடுவோர்க்கப்பால் நாலு விடயத்தை உள்வாங்கி ஆட்சியின் அத்திவாரம் மேலும் புடமிடப்படுகின்றதா...? என்பதுதான் இன்றுள்ள அரசியல் பக்கங்களின் பிரதான எதிர்பார்ப்பாகும். நாட்டில் பலதுருவங்களில் பல விடயங்கள் இடம்பெறுகின்றன. மக்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய அரசுக்கு தற்போது தன்னை நிலை நிறுத்துவதே பெரும்சவாலாக உருவெடுத்துள்ளது.

மஹிந்தவின் புதிய பயணம் தொடங்கியதாகவும், அதற்கான ஆதாரமாக மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் விவகார மற்றும் மக்கள் தொடர்புக் காரியாலயம் பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இது அரசுக்கெதிரான போராட்டத்தின் முதல்படியாகவும், பல செய்திகள் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன. ஜோதிடத்தில் அதிக நம்பிக்கை கொண்ட மஹிந்த பின்புறமாகத் திரும்பி நின்று நாடாவை வெட்டியதாகவும் சில சுவாரசியமான செய்திகளும் வெளிவந்துள்ளன. இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுங்குகளை மீறிய குற்றச்சாட்டின்பேரில் 30 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதென்று ஏற்கனவே சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்துள்ளது. இந்தநிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் உள்ளாக்கப்படுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை அரசாங்கத்தின் செய்தித்தாள் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர்கள் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி கட்சித்தலைமைக்கு சவால்விடுத்துள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களாக கடமையாற்றிய பிரதேச அரசியல்வாதிகள் பத்துப் பேர் இடைநிறுத்தப்பட்டு உள்ளனர். அண்மையில்கூடிய சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. குறித்த பத்து அரசியல்வாதிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் தங்களுக்கு எதிரான கட்சியின் நடவடிக்கை குறித்து பகிரங்கமாக விமர்சித்ததுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாத்த மஹிந்த ராஜபக்ஸவுக்கு சார்பாக செயற்படுவதன் காரணமாகவே தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர். அத்துடன் மைத்திரிபால சிறிசேன இரவோடிரவாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய உடன்பாட்டை மேற்கொண்டு கட்சியை அழிப்பதற்கு முனைந்ததாகவும் அவர்கள் விமர்சித்துள்ளனர். மேலும் தங்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து விளக்கமளிக்குமாறு கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவினால் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தையும் பகிரங்கமாக தீவைத்து எரித்துள்ளனர்.

அத்துடன் மஹிந்தவின் நிலைப்பாடே தங்களின் நிலைப்பாடு என்று வலியுறுத்தியுள்ள இந்தக் குழுவினர், முடிந்தால் உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்திக் காட்டுமாறு அரசாங்கத்திற்கு சவால் விடுத்துள்ளனர்.

இவ்வாறாக பல நெருக்கீடுகளும், எதிர்ப்புக்களும் தென் இலங்கை அரசியல் களத்தில் விஸ்வரூபம்பெற்றுள்ளன. இந்த நிலையில் நல்லாட்சியரசு தமிழர்களிற்கு எதைப்பெற்றுத் தரப்போகின்றது? இணக்க வழியில் பயணிக்கும் இலங்கையின் மூன்றாவது தலைவர் எனும் தானத்தில் உள்ள தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் எதைப் பெற்றுத்தரப் போகின்றார்கள் என்பதெல்லம் எங்கள் செல்லப்பாவின் செப்படி வித்தையாகவே உள்ளது. பொறுத்திருந்து பார்ப்போம்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# டக்ளஸை இலக்கு வைத்த தற்கொலை குண்டு தாக்குதல்!

பகுதி -20-

WikiLeaks

அன்பார்ந்த நம் வாசகர்களே! ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவானந் தாவை இலக்குவைத்து தமிழீழ விடுதலை புலிகளால் 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதல் முயற்சி குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து வாஷிங்டனில் உள்ள அமெரிக்க வெளியுறவு தலைமை காரியாலயத் துக்கு அன்றைய தினம் அனுப்பப்பட்ட இரகசிய இராஜதந்திர ஆவணத்தை இப்போது பார்ப்போம்.

கொழும்பில் உள்ள பொலிஸ் நிலை யம் ஒன்றில் புலிகளின் தற்கொலை குண்டுதாரி சந்தேக நபர் ஒருவர் தற்கொலை குண்டை உடலில் வெடிக்கவைத்தார். பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வர் கொல்லப்பட்டனர். குறைந்தது 11 பேர் காயப்பட்டனர். எமது தூதரகத்துக்கு அருகில் இப்பொலிஸ் நிலையம் உள்ளது. ஆனால் அமெரிக்கர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. தூதரகத்துக்கு எவ்வித சேதமும் நேரவில்லை. தற்கொலை குண்டுதாரி தூதரகத்தை இலக்கு வைத்தார் என்பதறகு எவ்வித ஆதாரமும் கிடை யாது. தற்கொலை குண்டுதாரி யின் இலக்கு விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆவார்.

புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்த கருணாவுடன் தொடர்பில் உள்ளார் என்று அண்மைய வாரங்களில் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக தெரிவித்துள்ளார். கிழக்கில் நடந்த அண்மைய சம்பவங்களின் பின்னணியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கிழக்கில் புலிகள்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. புலிகள் இயக்க உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டு உள்ளனர். ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட கருணா குழுவினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் இன்றைய தாக்குதலை நடத்தியதாக புலிகள் உரிமை கோரவில்லை. இருப்பினும் புலிகளைத் தான் சந்தேகிக்க வேண்டி உள்ளது. இப்போது மிகப்பெரிய சந்தேகம் உள்ளது. என்ன வென்றால் இது ஒரே ஒரு தனி தாக்குதல் மாத்திரமா? அல்லது யுத்த நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர புலிகள் ஆரம்பித்து உள்ள கூட்டு தாக்குதல்களின் தொடக்கமா?

**இலக்கு தவறியது**

புலிகள் இயக்க பெண் தற்கொலை குண்டுதாரி சந்தேக நபர் மதியம் 12.15 மணியளவில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் குண்டை உடலில் வெடிக்கவைத்தார். இவர் விவசாய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, இந்து சமய விவகார, தமிழ்மொழி பாடசாலைகள் மற்றும் தொழில் பயிற்சி அமைச்சரும், ஈ.பி.டி.பி தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு அலுவலகங்களை நோக்கிப்போனார் என்று பல தரப்புகளும் உறுதிப்படுத்தின. ஆனால் அமைச்சு அலுவலக கட்டட வாசலில் உலோகங்களை அடையாளப்படுத்தி காண்பிக்கின்ற சோதனைக் கருவி இவர் முன்னிலையில் செயல் இழந்தபோது பொலிஸார் சந்தேகம் கொண்டனர். இவரை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். தேவானந்தாவின் அமைச்சு அலுவலகமும், பொலிஸ் நிலையமும் சற்று தொலைவில் உள்ளன. பொலிஸ் நிலையம் காலி வீதியில் பிரித்தானிய மற்றும் அமெரிக்க தூதரகங்களுக்கு அருகில் உள்ளது. தற்கொலை குண்டுதாரி பொலிஸ் நிலையத்துக்குள் குண்டை உடலில் வெடிக்க வைத்த போது குண்டுதாரி மாத்திரம் அன்றி 04 பொலிஸாரும் கொல்லப்பட்டனர். 05 பொலிஸார் அடங்கலாக 11 பேர் காயப்பட்டனர். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விடுதலைப் புலி களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்ட பிற்பாடு கடந்த இரு வருடங்களில் நடத்தப்பட்ட முதலாவது தற்கொலை குண்டுத் தாக்குதல் இதுவே ஆகும்.

ஆயினும் இவ்வெடிப்பு சம்பவத்தில் தூதரகத்துக்கு சேதம் நேரவில்லை. தூதரக ஊழியர்கள் காயப்படவில்லை. எமக்கு தெரிந்த வரை இதில் அமெரிக்கர்கள் எவரும் காயப்பட வில்லை அல்லது சம்பந்தப்பட வில்லை. இச்சம்பவம் குறித்த விசாரணைகளை ஸ்ரீலங்கா அதிகாரிகள் தொடர்ந்து மேற்கொள்கின்றனர். ஆனால் அமெரிக்கர்களை அல்லது வெளிநாட்டவர் களை இலக்குவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆதாரம் எதுவும் கிடையாது. ஆனால் இச்சம்பவம் குறித்து விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புக்கு செல்கின்றமையை தவிர்க்க வேண்டும் என்றும் அமெரிக்க பிரஜைகளை நாம் எச்சரித்துள்ளோம்.

**பழிக்கு பழி**

கரும்புலிகள் தினம் அனுஸ்டிக்கப்பட்ட போது கிழக்கில் கடந்த 05 ஆம் திகதி புலிகள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் களுக்கு பதிலடியாகவே கொழும்பில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இரு வேறு சம்பவங்களில் மட்டக்களப்பில் புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்டனர். புலி உறுப்பினர் ஒருவர் சுட்டு கொல்லப்பட்டார். மூன்று புலிகள் காயப்பட்டனர். காயப்பட்டவர்களில் புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் சேனாதிராஜாவும் அடங்குவார். புலிகளில் இருந்து பிரிந்த கருணாவுக்கு விசுவாசமான குழுவினரே இத்தாக்குதல்களுக்கு பொறுப்பாளிகள் என்று கூறப்படுகின்றது. ஆனால் புலி ஆதரவு தமிழ்நெட் இணையத்தளம் இத்தாக்குதல்களை இலங்கை இராணு-வம் நடத்தியதாக செய்தி பிரசுரித்தது. இச்சூட்டு சம்பவங்களை அவதானித்துக் கொண்டிருப்பதாக ஊடக அறிக்கை வெளியிட்ட ஸ்ரீலங்கா அரசாங்கம் இச்சம்பவங்கள் கிழக்கில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை குலைத்து உள்ளன என்றும் தெரிவித்துள்ளது.

இதேநேரம் புதிதாக நியமிக்கப் பட்டு உள்ள இராணுவ தளபதி கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகளை ஆராயுமாறும், புலிகளுக்கும் ஏனைய ஆயுத குழுக்களுக்கும் இடையிலான மோதல்களை தடுக்குமாறும் இவரின் படை பிரதானிக்கு உத்தரவிட்டுள்ளார். கிழக்கில் படையினரின் எண்ணிக்கையை இராணுவம் அதிகரிக்கும் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் இராணுவ பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதாக எவ்வித தீர்மானமும் எடுக்கப்பட வில்லை என்றார்.

இன்னொரு தனியான சம்பவத்தில் இராணுவத்துக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து கருணா ஆதரவு குழுவை சேர்ந்த 14 தமிழ் இளைஞர் களை பொலனறுவையில் ஹிங்குரு கொட விகாரைக்கு அருகில் கடந்த 05 ஆம் திகதி பலரக ஆயுதங்களுடன் பொலிஸார் கைது செய்தனர். யாத்திரிகர்கள் தங்கி ஓய்வெடுக்கிற இடமாக இவ்விகாரை உள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த ஜாதிக ஹெல உறுமய பிக்கு ஒருவர் இவ்விகாரையை நடத்துகின்றார். ஆனால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டவகையில் 14 நாட்கள் விளக்கமறியலில் போடப்படாமல், வழக்கத்துக்கு மாறாக நீதிவானால் பிணையில் விடுவிக்கப் பட்டனர். இவ்விளைஞர்களை விடுவிக்கச்சொல்லி குறிப்பிட்ட தமிழ் குழுக்களிடம் இருந்து பாரிய அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது என்று எமது தூதுவருக்கு நேர்வே தூதுவர் தெரிவித்தார்.

**கருணாவுடன் தொடர்பு**


டக்ளஸ் தேவானந்தாவை புலிகளின் தற்கொலை குண்டுதாரி சந்தேக நபர் ஏன் இலக்குவைத்தார்? என்பது எவருக்கும் ஆச்சரியம் கொடுக்கின்ற விடயம் அல்ல. ஏனென்றால் டக்ளஸ் நீண்ட நெடுங்காலமாக புலி எதிர்ப்பை வெளிப்படுத்தி வருபவர். புலிகளிடம் இருந்து பிரிந்த கருணாவுடன் நெருக்க மான தொடர்பில் உள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் கிழக்கில் இருந்து கொழும்புக்கு விமானத்தில் வந்த கருணாவின் அரசியல் பிரவேசத்துக்கு உதவ டக்ளஸ் தேவானந்தா முயற்சி எடுத்தார் என்று ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

கருணாவுக்கும் எமது தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பை அல்லது தொடர்பாடலை ஏற்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல சந்தர்ப்பங்களில் முயன்றார். ஆயினும் இவரின் கோரிக்கை எம்மால் அமைதியான முறையில் நிராகரிக்கப்பட்டது. இன்றைய தற்கொலை தாக்குதலு க்கு புலிகள் உரிமை கோரவில்லை. ஆயினும் இது பெரும்பாலும் புலிகளின் வேலை தான். அரசாங்கத்துக்கு எதிரான புலிகளின் நடவடிக்கைகள் அண்மைய வாரங்களில் அதிகரித்துள்ளன. கிழக்கில் புலிகள்மீதான கருணா குழுவினரின் தாக்குதல் களுக்கு அரசாங்கம் உதவி, ஒத்தாசை வழங்குகின்றது.

மேலும் கறுப்பு ஜூலையை ஊக்கப் படுத்துகின்ற பிரசார உத்தியாகவும் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இம்மாதத்தில் புலிகளின் கரும்புலிகள் தினமும், 1983 ஆம் ஆண்டு கொழும்பில் தமிழர்கள்மீது நடத்தப்பட்ட கலவரத்தின் நினைவும் அனுஸ்டிக்கப்படுகின்றன. இதே நேரம் யுத்த நிறுத்தத்தை முடிவுறுத்த அரசாங்கம் நாட்டம் காட்டுகின்றது என்று புலிகள் திரும்ப திரும்ப குற்றம் சாட்டியுள்ளனர்.


உதாரணமாக புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எழிலனின் கருத்தை இங்கு கூறலாம். புலிகள்மீது இன்னொரு யுத்தம் திணிக்கப் படுகின்ற பட்சத்தில் அதை எதிர்கொள்ள புலிகள் தயாராக உள்ளனர், ஆயினும் இதற்கு அரசாங்கமே பொறுப்பாகும் என்று எழிலன் தெரிவித்து உள்ளார். எமது கணிப்பின்படி இக்குண்டு தாக்குதல் அரசாங்கத்துக்கு விடுக்கப்பட்டு உள்ள எச்சரிக்கை ஆகும். புலிகள்மீதான கருணா குழுவின் தாக்குதல்களுக்கு அரசாங்கம் இனி மேலும் ஆதரவு வழங்கினால் புலிகள் பதில் தாக்குதல்கள் நடத்தி பழி வாங்குவார்கள் என்று எச்சரித்து உள்ளார்கள்.

**(யாத்திரை தொடரும்)**





# அரசியல் அமைப்பின் தேவையும் தெரிவும்



அப்பொழுது மக்களால் தெரிவுசெய்யப்படும் அரசியல்வாதிகள், இரு தேர்தல்களுக்கிடையிலான காலப் பிரிவின்போது மக்களுக்கு பொறுப்புக் கூறக்கூடியவர்களாக இருந்துவருவார்கள். மக்களுக்கு பதிலிறுக்கக்கூடிய வகைப் பொறுப்புடன்கூடிய ஆட்சியை ஏற்படுத்துவதற்கு பக்கச்சார்பற்ற, கருத்தொற்றுமையுடன்கூடிய ஆவணமொன்றாக ஒரு அரசியல் அமைப்பு தேவைப்படுகின்றது.

ஒரு அரசியலமைப்பை மதிப்பீடு செய்வதற்கான அளவுகோல் ஓர் அரசியலமைப்பு, அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி வரும் ஆட்களிடமிருந்து பொதுமக்களை பாதுகாத்துக் கொள்வதனையும், மக்கள் எதிர் ஆட்சியாளர்கள் என்றநிலையில் மக்களுக்கு வலுவூட்டுவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. “விடுதலை அரசியலமைப்பு” என்ற தனது முக்கியமான நூலில் பிரீட்ரிக் ஹேக் இந்த அடிப்படை குறிக்கோளை பின்வரும் விதத்தில் எடுத்துக்காட்டியிருந்தார்:

அரசியலமைப்பை உருவாக்கும் ஒரு கூட்டு என்ற முறையில் தமது பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் சட்டவாக்க சபையின் அதிகாரங்களை நிர்ணயிப்பதற்கான பிரத்தியேக உரிமையை மக்கள் கொண்டுள்ளார்கள் என்ற விடயம், அனைத்து அதிகாரங்களும் மக்களிடமிருந்தே வருகின்றன என்ற சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால், மீண்டும் மீண்டும் இடம்பெறும் தேர்தல்களில் இது பெருமளவுக்குக் குறிப்பிடப்படுவதில்லை. அந்தவகையில், நாடாளுமன்றத்திலிருந்தும், அதேபோல, அரசாங்கத்தின் ஏனைய பிரிவுகளிலிருந்தும் தோன்றக்கூடிய தான்தோன்றித்தனமான செயல்களிலிருந்து மக்களை பாதுகாத்துக் கொள்ளும் கருவியொன்றாகவே அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.

ஒரு அரசியலமைப்பு அந்தக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால், அரசியலமைப்பை உருவாக்கும் செயன்முறையில் மக்கள் முனைப்பான விதத்தில் பங்கேற்று, அதில் ஈடுபாடுகொண்டிருத்தல் வேண்டும். 1972 மற்றும் 1978 ஆகிய வருடங்களில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்களில் ஆட்சியாளருக்குச் சார்பான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குச் சார்பான பாரபட்ச நிலைகள் காணப்பட்டன. அவை அரசியலமைப்பின் மக்களுக்கு வலுவூட்டும் அம்சங்களை புறக்கணித்திருந்தன. இந்த அரசியலமைப்புக்கள் அரசாங்கத்தினால், அரசாங்கத்திற்கென உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்களாக இருந்துவந்தன. அதே தவறு 2016ஆம் ஆண்டிலும் இடம்பெறாதிருப்பதனை உறுதிப்படுத்திக்கொள்வது முக்கியமானதாகும்.



அரசியலமைப்புவாத கோட்பாடு, ஒரு அரசியல் அமைப்பின் குறிக்கோள்கள் என்னவாக இருந்து வரவேண்டுமென்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

அது சமூகத்திற்கான ஒரு அரசியல் சட்டகத்தை வழங்குதல் வேண்டும். அல்லது நாட்டின் ஆளுகைக்கான நிறுவனரீதியான ஒரு கட்டமைப்பை வழங்குதல் வேண்டும்.

அது தனிநபரின் சுதந்திரம் மற்றும் சுயாதீனம் என்பவற்றையும், சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளை “இனத்துவ மற்றும் சமயச் சிறுபான்மை சமூகங்களின் மட்டுமன்றி அனைத்து சிறுபான்மை சமூகத்தவரின் உரிமைகளை” பாதுகாத்தல் வேண்டும்.

சமூகம் ஆளப்படவேண்டிய விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக அது இருந்துவருதல் வேண்டும்.

ஒரு அரசியலமைப்பு இந்த 3 குறிக்கோள்களையும் எவ்வாறு சாதித்துக் கொள்கின்றது என்ற விடயத்தின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகின்றது. இலங்கையில் அரசியலமைப்பு சீர்த்திருத்தம் தொடர்பாக இடம்பெற்று வரும் விவாதம் முழுவதுமாக முதலாவது குறிக்கோளின் மீதே கவனம் செலுத்திவந்துள்ளது. அதாவது, நிறைவேற்று அதிகாரம்கொண்ட அமைப்பு ஜனாதிபதியாக இருந்து வரவேண்டுமா அல்லது நாடாளுமன்றமாக இருந்து வரவேண்டுமா என்ற விடயத்திலேயே அது கவனம் செலுத்தியுள்ளது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் முறை, ஆகக்கூடிய வாக்குகளை பெறுபவர் வெற்றியீட்டும் முறையை கொண்டிருக்கவேண்டுமா அல்லது விகிதாசார முறையை கொண்டிருக்கவேண்டுமா போன்ற விடயங்களே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. இவை முக்கியமான பிரச்சினைகளாக இருந்து வரும் அதேவேளையில், ஏனைய இரு குறிக்கோள்களும் முக்கியமானவை என்ற விடயத்தை நாங்கள் அங்கீகரிப்பது அவசியமாகும்.

[தேவையும் தெரிவும் தொடரும்]




# முதுமையிலும் புதுவாழ்வு கண்ட மண்டேலா!!

நீண்டகாலத்திற்கு பிறகு சந்தித்ததால் இருவருக்கும் பேச்சு வராமல் இருவரது கண்களிலிருந்தும் கண்ணீர்தான் வெளிவந்தது. ஜோங்கிந்தாபாவை காலத்தின் கோலம் மாற்றியிருந்தது. அவரது கம்பீரமான நடை, உற்சாகமான பேச்சு, கலகலப்பான சிரிப்பு, மிடுக்கான பார்வை ஒன்றுமேயில்லாமல் அவரது முகம் களையிழந்து சோகமே உருவாக காட்சியளித்தார். நடையிலும் தள்ளாட்டம் தென்பட்டது. தலையிலே நிரம்பியிருந்த வெள்ளை மயிர்கள் அவரது முதுமையின் அடையாளச் சின்னமாக காணப்பட்டது. மண்டேலாவுக்கு அவரை பார்த்தவுடனேயே இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் வலியெடுத்து இருசொட்டு கண்ணீர் கன்னத்தில் வடிகாலமைத்து கழுத்துவரை கோடிட்டு நின்றது. கண்களை துடைத்தவாறே “அப்பா என்னை மன்னித்துவிடுங்கள் நான் செய்தது மாபெரும் தவறுதான்.

உங்களை நேருக்கு நேர் எதிர்க்க தைரியமில்லாமல் கோழைத்தனமாக ஊரைவிட்டே ஓடி வந்துவிட்டேன்” என்று கெஞ்சிக்கேட்டான். அவரோ விரக்தியும் கவலையும் ததும்பிய முகத்துடன் “பழையதை பேசி என் ஆத்திரத்தை கிளப்பாதே. நான் அது பற்றி பேசவும் கேட்கவும் இங்கே வரவில்லை. நீங்கள் இருவரும் செய்த நம்பிக்கை துரோகத்தால் நான் மனம் நொடிந்து நோயாளி ஆகிவிட்டேன். உங்களை வளர்த்த பாவத்திற்கு நல்ல பரிசு கொடுத்துவிட்டீர்கள். சரிபோனது போகட்டும். நீ இப்போது எங்கே இருக்கிறாய்? என்ன செய்கிறாய்? ஜஸ்டிஸ் எங்கே இருக்கிறான்?” என்று கேள்விக்கணைகளை தொடுத்தார். மண்டேலா அதற்கு “ஜஸ்டிஸ் சுரங்க நிர்வாகத்திலே தான் பணிபுரிகின்றான். நான் அலெக்சாண்ட்ரியாவிலுள்ள ஒரு அலுவலகத்தில் பணிபுரிந்துகொண்டே சட்டப்படிப்பையும் முடித்து தற்போது பி.ஏ. பட்டதாரியாகிவிட்டேன். எனக்கும் உங்களை பார்க்க வேண்டும் என்று மனது அடிக்கடி அங்கலாய்க்கும். ஆனால் எந்த முகத்தை வைத்துக்கொண்டு உங்கள் முன் நிற்பேன் என்ற நினைப்பு அதைத் தடுத்துவிடும்.

அவ்வளவு நிகழ்ந்த பின்பும் உங்களை நேருக்கு நேர் சந்திக்கும் திராணியற்ற கோழை நான். நான் பாவி அப்பா. என்னை நீங்கள் மன்னிக்காவிட்டால் கடவுள்கூட என்னை மன்னிக்கமாட்டான்” என்று மன்றாடினான். அவரோ அவன் பேசியதை அசட்டை செய்துவிட்டு, பேச்சை திசை மாற்றினார். “ஜஸ்டிஸ் அங்கே நல்லபடியாக வேலை செய்கிறானா? நானோ, இன்றோ, நாளையோ என்று என்னுயிரை கையில் பிடித்துவைத்திருக்கிறேன். ஊரில் எனக்கு பிறகு என் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அலுவலக நிர்வாகத்தையும் கவனிக்கவும் பராமரிக்கவும் அவனை எவ்வாறாவது சம்மதிக்க வைத்து என்னுடன் நீதான் அனுப்பி வைக்கவேண்டும். அதுவே எனது இறுதி ஆசை.

நீ எனக்கு நன்றிக்கடனாக இதை கண்டிப்பாக செய்தே ஆகவேண்டும்” என்று உறுதியாக கூறினார். அதற்கு மண்டேலா “கண்டிப்பாக அவனை உங்களுடன் அனுப்பிவைக்க என்னாலான உதவிகளை செய்வேன்” என்று கூறி சிசுலுவும் மண்டேலாவும் ஜோங்கிந்தாபாவை தாங்கள் தங்கியிருக்கும் இருப்பிடத்திற்கு சென்றார்கள். கோரும் வந்து ஜோங்கிந்தாபாவை சந்தித்து உரையாடினான்.

மண்டேலா தொலைபேசியூடாக ஜஸ்டிஸ்டன் தொடர்புகொண்டு தந்தை வந்திருக்கும் செய்தியைக் கூறினான். அச்செய்தி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒருகணம் வியந்து மறுகணம் நெகிழ்ந்து “நாளைக் காலையிலேயே நான் அங்கே இருப்பேன். அவர் எப்படி இருக்கிறார்? நன்றாக இருக்கிறாரா? அவருக்குத் தேவையானவற்றை செய்து கொடு” என்று உணர்ச்சி வசப்பட்டவனாகக் கூறினான். ஜோங்கிந்தாபா அவரது அருமை மகன் ஜஸ்டிஸின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதா?!

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

அடுத்த நாள் பொழுது புலர்ந்தது. ஜஸ்டிஸ் அருமைத் தந்தையை பார்க்கும் ஆவல் ததும்ப மண்டேலாவின் இருப்பிடம்தேடி ஓடோடி வந்தான். ஜோங்கிந்தாபா அவனை கண்டதும் ஆரத்தழுவி கட்டியணைத்து கண்ணீர் சிந்தினார். ஜஸ்டிஸ் தந்தையின் தளர்ந்து தள்ளாடிய நடையையும் வாடி வதங்கிய வதனத்தையும் கண்டு பதறி “அப்பா உங்கள் உடம்புக்கென்ன? இப்படி மெலிந்து போய்விட்டீர்களே?” என்று கண்ணீரினூடாகவே தட்டுத் தடுமாறி கேட்க, “மகனே கலங்காதே. காலத்தின் கோலமிது. முதுமை எனக்குத் தந்த பரிசு இது. உங்கள் இருவரையும் பிரிந்து நான் நோயாளியாகிவிட்டேன்” என்றதும் ஜஸ்டிஸின் கண்கள் குளமாகின. “அப்பா நான் செய்த துரோகத்தை மன்னித்துக்கொள்ளுங்கள்” என்றதும் மண்டேலா அவர்களது பேச்சில் குறுக்கிட்டான்.

(தொடரும்)

# அமெரிக்காவின் ஏக வல்லரசு ஆதிக்கம்!

**அமெரிக்கா காலடி எடுத்து வைத்த நாள் முதல் எரியத் தொடங்கிய தீச்சுவாலை இன்னும் அணையவில்லை. அமெரிக்காவின் வதை முகாம் அபுகிரேப் எனுமிடத்தில் பக்தாத்தின் நுழை வாயில் அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களுக்கு சாட்சியமாக விளங்குகின்றது**



அமெரிக்காவும் நேசநாடுகளும் தொடர்ச்சியாக ஈராக் அரசுக்கும் விசேடமாக ஜனாதிபதி சதாம் ஹூசேனுக்கும் எதிராக ஏகவல்லரசு ஆதிக்க மனப்பான்மையிலும் ஐ.நா. தீர்மானம் என்கின்ற பலம் பொருந்திய அஸ்திரத்துடனும் ஈராக் நாட்டுக்கு எதிரான பொருளாதாரத் தடையை இறுக்கமாக்கின. மக்கள் அவலத்துக்குள்ளாகினார்கள். சிறுவர், குழந்தைகள் போசாக்கின்மை யாலும், மருந்து தட்டுப்பாடுகளினாலும் பெரும் பாதிப்புக்குள்ளாகினார்கள். ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு முகவர் அமைப்பான யுனிசெப் ஈராக்கிய சிறுவர்கள், குழந்தைகள் தொடர்பான எத்தனையோ அறிக்கைகளை ஆராய்ந்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் ஒருதலைப் பட்சமான unilateral ஏகவல்லரசு ஆதிக்கம் ஈராக் நாட்டினது சிதைவுக்கும் சதாம் ஹூசேனின் மரணத்துக்கும் காரணமென்பது அரசியல் அவதானிகளால் மறுக்க முடியாத விடயமாகும். பங்குனி 2003 இல் அமெரிக்கப் படைகள் ஈராக் எல்லைக்குள் புகுந்தன. புகுவதற்கு முன்னரே சதாமை ஒரு இடிஅமீன் பாத்திரமாக மேற்கத்தையே ஊடகங்கள் சித்தரித்தன. சர்வதேச அரசியல் அரங்கிலும் சதாம் நாசகார ஆயுதங்களை வைத்து ஏனைய நாடுகளை அழிக்கக்கூடிய வல்லமையுடன் இருப்பதாகவும் நாசகார ஆயுதங்களை அழிக்க வேண்டும் என்ற உரத்த கோசத்தை முன்வைத்து ஈராக்கினுள் அத்துமீறிபுகுவதற்கான சூழ்நிலையை உருவாக்கினார். பங்குனி, 2003 இல் ஈராக்கிற்குள் புகுந்த அமெரிக்க, நேசபடைகள் குறுகிய காலத்துள் முழு நாட்டையும் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். சதாமின் அரசில் முக்கிய பதவிகளை வகிந்த இராணுவ அரசியல் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர், கொல்லப்பட்டனர். சதாம் கைது செய்யப்பட்டார். 'மானிடத்திற்கு எதிரான குற்றம்' செய்தார் என விசாரணைக்கு உட்படுத்தி மரணதண்டனை விதிக்கப்பட்டார். தூக்கிலிடப்பட்டார். 2006 இல் சதாம் தூக்கிலிடப்பட்டார்.

ஈராக் நாட்டை அமெரிக்காவும் கூட்டுப்படைகளும் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன. ஈராக் நாட்டை ஆளுவதற்கு கூட்டு இடைக்கால அதிகாரசபையை நிறுவியது. இதன் பிரதம நிர்வாகி யாக அமெரிக்கர் ஒருவர் நியமிக்கப்பட்டார். காலனித்துவ ஆட்சிக்காலத்தின்போது காலனி-களை நிர்வகிக்கப் பிரித்தானிய சாம்ராஜ்ஜியம் ஆளுநர்கள் நியமித்தமைக்கு ஒப்பானது. தமது முதன்மை கடமையாக பிரதம நிர்வாகி பாத் கட்சியினையும் சதாமின் ஆட்சியில் பதவி வகித்தவர் களையும் தூக்கி வெளியில் போட்டார். 2003, ஆவணி புரட்டாதி யில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்ச்சிகள் முளைவிடத் தொடங்கின.

தம்மை ஜிகாத் எனக் கூறிக் கொண்ட குழுக்களும் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல் களில் இறங்கின. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் சியா முஸ்லிம் பிரிவினர்க்கு ஆதரவு காட்டியமையால் சுனி பிரிவினரும் குழுக்களை அமைத்துப் போராடினர். இவர்களின் தலைவராக சக்காவி செயற்பட்டார். இதன்காரணமாக சியா - சுனி பிரிவினருக்கிடையே வன்முறைகள் வெடித்தன. சியா பிரிவினரும் அமெரிக்கப்படைகளுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டனர். சியா, சுனி தமக்கிடையில் மோதல் களில் ஈடுபட்டனர். அதே-நேரம் அமெரிக்க படைகளுக்கு எதிராகவும் போரிட்டனர். சுன-ியின் ஜிகாத் குழு 2004 இல் ஈராக் அல்கைதா இயக்கமாக உருவெடுத்தது. இவர்கள் அமெரிக்க கூட்டுப்படைகளை மட்டுமல்ல, பொதுமக்கள் குறிப்பாக சியா முஸ்லிம்கள் கல்விமான்களையும் கொலை செய்தனர்.

அமெரிக்க கூட்டுப்படைகள் ஈராக்கிற்குள் புகுந்தபின்னர் முதலாவது தேர்தல் தை, 2005 இல் நடைபெற்றது. புதிய அரசியலமைப்பு ஏற்கப்பட்டது. மார்கழி, 2005 இல் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இருப்பினும் அமெரிக்கக் கூட்டுப்படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் சர்வ சாதாரணமாக தொடர்ந்தன. 2007 இல் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் உள்ளூர் ஈராக்கிய படையினருக்கு பயிற்சி அளிப்பதில் முன்னுரிமை வழங்கி ஈராக்கில் இருந்து படிப்படியாக அமெரிக்கப் படையினரை குறைப்பதாக அறிவித்தார். மே, 2007 இல் ஈராக்கிய பாராளுமன்றம் அமெரிக்கா முற்றாக வெளியேறுவதற்கு காலஅட்டவணையை வெளிப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. அமெரிக்க கூட்டுப்படைகளான பிரிட்டன், டென்மார்க் ஆகிய நாடுகள் படைக்கு குறைப்பை ஆரம்பித்தன.

அமெரிக்க கூட்டுப்படைகளுடனான மோதல்கள் தொடர்ந்தன. புதிதாக பயிற்றுவிக்கப்பட்ட ஈராக்கிய படையினர் போராளிக்குழுக்களுக்கு எதிராகப் போரிட்டனர். 30.06.2009 இல் ஈராக்கின் பிரதான நகரங்களில் இருந்து வெளியேறுமாறு கோரும் ஒப்பந்தத்தில் ஈராக், அமெரிக்க தரப்பினர் கைச்சாதிட்டனர். இதன் பிரகாரம் 31.12.2011 இல் அமெரிக்கா பூரணமாக வெளியேற வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. 18.12.2011 இல் அமெரிக்கப் படைகள் முற்றாக வெளியேறின. அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்னரும் ஈராக்கிய அரசுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்தது. ஈராக்கில் அரசியல் ஸ்திரம் தளர்ந்தது.

எகிப்து, டுனிசியா போன்ற நாடு களில் வெடித்த 'அரபு வசந்தம்', ஆர்ப்பாட்டங்கள், ஈராக்கிற்குள்ளும் பரவியது. சுனி முஸ்லிம் பிரிவினரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஈராக் தேசிய முன்னணி, சுனி மக்கள் ஓரங்கட்டுப்படுத்துவதாக தெரிவித்து பாராளுமன்றத்தை பகிஸ்கரித்தது. 2012, 2013 காலப்பகுதியில் சிரியாவில் நிகழ்ந்த வன்முறைகள் போராட்டங்கள் ஈராக்கிய போராட்டக்குழுக்களை மேலும் உற்சாகப்படுத்தியது.


ஈராக்கில் உள்நாட்டுப்போர் தொடர்ந்தது. ISIS என்னும் புதிய குழு அமைக்கப்பட்டது. ஏராளமான சுனி பிரிவினர் இதில் இணைந்தனர். இவர்கள் சில பிரதான நகரங்களைக் கைப்பற்றின. 2014 ஆம் ஆண்டு ISIS பிரிவினருக்கு வெற்றிகள் கிட்டியது. பிரதம மந்திரி அல்மலாகி இராஜினாமாச் செய்தார். முதல் தடவையாக அமெரிக்க ஈரானிய, சிரிய வேறு சில நாடுகளும் இணைந்து ISIS க்கு எதிராக விமானத் தாக்குதல்களை நிகழ்த்தின. ISIS இன் புதிய தலைவராக அபூபக்கர் அல் பக்தாதி தெரிவு செய்யப்பட்டார்.


ISIS-க்கு எதிரான தாக்குதல் களில் அமெரிக்காவுடன் இங்கிலாந்து அவுஸ்திரேலியா படையினரும் ஈடுபட்டனர். ISIS படையின் பிரதான ஈராக்கிய நகரங்களைக் கைப்பற்றுவதும் ஈராக் படைகள் ஈரானிய ஆதரவு படைகள் மீளக் கைப்பற்றுவதுமாக சிவில் யுத்தம் 1914 - 1915களில் நடைபெற்றது. பெரும்பாலான நகரங்கள் ஈராக் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. ஆனால் சியா, சுனி மோதல்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. ISIS சிவிலியன்களை வகை தொகையின்றி கொலை செய்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா காலடி எடுத்து வைத்த நாள் முதல் எரியத் தொடங்கிய தீச்சுவாலை இன்னும் அணையவில்லை. அமெரிக்காவின் வதைமுகாம் அபுகிரேப் எனுமிடத்தில் பக்தாத்தின் நுழைவாயிலில் அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களுக்கு சாட்சியமாக விளங்குகின்றது எனக் குற்றம் amnesty international சாட்டியுள்ளது. பூகோள அரசியல் முறைமையில் வல்லான் வகுத்ததே சட்டம் என்கின்ற நிலையே நீடிக்கின்றது.

**தேவ தர்மா**

# கூத்தாடிகளின் கைகளில் வடக்கு மாகாண சபை!





இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடந்தது. 37 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் முப்பது உறுப்பினர் பதவிகளை வென்று, வெற்றி எக்காளத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையைப் பொறுப்பேற்ற போது தமிழர்கள் பலரும் மகிழ்ந்து தான் போனார்கள். அந்த மகிழ்ச்சிக்கு மத்தியிலும் சிலருக்குப் பயம் கலந்த கவலை ஒன்றும் இருக்கவே செய்தது.

ஒரு சபை செவ்வனே செயற்பட வேண்டும் என்றால் தவறுகளைச் சுட்டிக்காட்டித் தட்டிக்கேட்க ஒரு பலமான எதிரணியும் அவசியம் என்ற கவலையே அது. எதிர்க்கட்சித் தரப்பு உறுப்பினர்கள் எழுவருள் ஒருவரான, அத்தரப்பின் தலைவர் சி.தவராஜாவே தனித்து நின்று அந்தப் பணியை இன்றுவரை ஓரளவுக்குக் காத்திரமாகச் செய்துவருகின்றார். அவரைத் தனித்து விடுவது சரியில்லை என்ற ஆதங்கம் போலும் ஆளும் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இப்போது.

அதனால்தான் ஆளும் கட்சித் தரப்பாக இருந்து எதுவுமே செய்யாத தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள், இப்போது தமது ஆளும் தரப்பை உடைத்துப் பலவீனமாக்கும் எதிரணித் தரப்பு வேலையையும் தாங்களே பொறுப்பெடுத்துக் கொண்டுவிட்டார்கள். அதாவது தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப்போடும் கைங்கரியம்தான் அது.

எமது நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான தமிழ்த் தலைமைகளுக்கும் தென்னிலங்கைத் தலைமைகளுக்கும் இடையில் ஒரு பொருத்தப்பாடு இருக்கின்றது. ஆட்சியை - அதிகாரத்தை கூட ஓர் எதிர்மறை அரசியல் நகர்வுப் போக்குத்தான். ஆக்கபூர்வமான அரசியல் செல்நெறி - நேர்வழியான பண்பியல்பு எங்களுக்கு அறவே கிடையாது. அதனால் தான் தமிழ்த் தலைமைகள் கைப்பற்றிய அதிகாரப் பதவிகள் எதனாலும் ஆக்கபூர்வமான எதனையுமே செய்ய முடியவில்லை, சாதிக்க இயவில்லை.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய உள்ளூராட்சி அமைப்புக்கள் அனைத் தும் செயற்றினில் படுதோல்வியையே கண்டுள்ளன. எப்போதுமே குறைசொல்லி அதிகாரத் தரப்புமீது குற்றம் கண்டு பிடித்து - அரசியல் பிழைப்பு நடத்திவந்த அந்தத் தலைமைகளினால் அதிகாரம்மிக்க பதவிகளைப் பொறுப்பேற்றும் சற்றும் ஆக்கபூர்வமாக எதுவுமே செய்ய முடியவில்லை.

ஆனால், மறுபுறமாக, கடந்த இரண்டு தசாப்தங்களாகத் தென்னிலங்கை அரசியல் தலைமைகளுடன் இணைந்து எதிர்மறை அரசியலுக்கு மாற்றாக நேர்வழி அரசியல் செய்யப் புகுந்த - ஈ.பி.டி.பி இது விடயத்தில் ஆக்கபூர்வமாக ஏதோ செய்திருக்கின்றது என்றே கூறவேண்டும். அக்கட்சியினால் வெல்லப்பட்ட யாழ்ப்பாண மாநகரசபையும், தீவகத்தின் மூன்று உள்ளூராட்சி சபைகளும் குறிப்பிடத்தக்களவு பயனை பெறுபேறை சாதிப்பதில் வெற்றி கண்டிருக்கின்றன என்பது மிகையல்ல.

ஆனால், தமிழ்க் கூட்டமைப்பு கைப்பற்றிய இருபதுக்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளில் எதுவுமே சரிவர இயங்கவில்லை. எல்லாவற்றிலும் ஒரே குத்துவெட்டு, குளறுபடி, குள்ளத் தனம், குழப்பமே மிச்சம்.

அதே கதிதான் அதோ கதிதான். தமிழ்க் கூட்டமைப்பு கைப்பற்றிய முன்வைக்கும் சுமந்திரனும், கூட்டமைப்பைக் கூத்தமைப்பாக மாற்றுவதற்கு அவருடன் சேர்ந்து துணைபோகும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவும்தான் என்பதும் மறைக்கக்கூடியதல்ல.

கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் நிற்பதற்கு தகுதியுள்ளவர்களுக்கு இடம்கொடுக்காமல், தனக்குத் தலையாட்டி, பந்தம் பிடிப்போருக்கு மட்டுமே இடமளித்து கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகளையும் மாகாண சபையையும் கோமாளிகள் கூத்தடிக்கும் அமைப்புகளாக மாற்றுவதற்குப் பிரதான கர்த்தாவாக இருந்தவர் இந்த மாவை தான். வடக்கு மாகாண சபை தனக்குரிய பணிகள் எதனையுமே இதுவரை நிறைவு செய்யவே இல்லை.

இரண்டரை ஆண்டுகளாகியும் போதிய நியதிச் சட்டங்கள் உரியமுறையில் கொண்டு வரப்படவுமில்லை. நிறைவேற்றப்படவுமில்லை. சபைக் கூட்டங்களில் விவாதிக்கப்படுபவையும், நிறைவேற்றப்படும் தீர்மானங்களும் சபையின் பணிகள் தொடர்பானவை அல்ல. சபையின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களே பெரும்பாலும் பேசப்பட்டு, நேரம் வீணடிக்கப்படுகின்றது. அவையும்கூட குறைசொல்லி பிலாக்கணம் வைக்கும் காதைகள்தான். சர்வதேச யுத்தக் குற்றப்பிரேரணை பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக்குதல், மன்னார் ஊடாக இந்தியாவுக்கு ரயில் மார்க்கப் பயணம் என்று தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களும், மாற்றாரைக் குறிவைத்துத் தாக்கும் அரசியல் பிரசாரங்களும் தான் அங்கு அரங்கேறுகின்றன. ஆக்கபூர்வமான அரசியல் திட்டங்கள், நடவடிக்கைகள் ஈ.பி.டி.பியையும் திட்டி அரசியல் அறிக்கைகளை விடுவதும் தங்களின் ஆதரவுத் தளத்தைத் தக்கவைத்து, அடுத்த தேர்தலிலும் தங்களின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்தப் போதுமானவை என்ற முழு நம்பிக்கையில் இவர்கள்.

இப்படி பயனற்ற, லாயக்கற்ற, இலக்கற்ற, கூட்டாகப் பரிணமித்து நிற்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை.

இந்தச் சீத்துவத்தை தம்பட்டம் அடித்து நிற்கின்றது கடந்தவாரம் நடைபெற்ற அந்தச் சபையின் அமர்வு.

ஊழல் அமைச்சர்கள் பற்றிய பட்டியலில் முன்னணியில் அடிபடும் பெயர் ஐங்கரநேசனுடையதுதான். சூழலியலாளர் எனத் தம்மைக்காட்டிக் கொள்ளும் ஐங்கரநேசன் அரசியல் சூழலுக்கு ஏற்பவும் தன்னை மாற்றிக் கொள்ளக் கூடியவர். ஆரம்பத்தில் ரெலோ இயக்கத்தில் இருந்தவர். பல இரகசிய நாசவேலைகளுடன் சம்பந்தப்பட்டவர் எனச் சந்தேகிக்கப் பட்டவர். விடுதலைப் புலிகள் ரெலோவைத் தடைசெய்தபோது இவரையும்விட்டு வைக்கவில்லை. இருட்டறையில் நீண்டகாலம் "சுகவாசம்" செய்து வாங்கிக் கட்டியவர். வெளியே வந்ததும் நிலைமையைப் புரிந்துகொண்டு புலிகள் பக்கம் நிறம் மாற்றிக்கொண்டார். புலி களின் உறுப்பினராகவும் மாறினார். மகிழன் என்றபெயரில் புலிப்போராளி யாகவும் செயற்பட்டார் பிழைக்கத் தெரிந்த இந்தப் பிரகிருதி. ஆனால் இவருக்கும் பக்கத்து நாட்டு உளவுத் துறைக்கும் ஏதோ தொடர்பிருப்பதாகப் புலிகளுக்குப் பொறிதட்டியதும் இவர் உஷாரானார். யுத்தம் தீவிரமடையத் தொடங்கிய அக்காலகட்டத்தில் வன்னியிலிருந்து புலிகளுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு, அந்தப் பக்கத்து நாட்டுக்கே கம்பி நீட்டினார். அந்த நாட்டு உயர்தரப்பே இவரைப் பல ஆண்டுகள் அங்குவைத்துப் பராமரித்தது வரதராஜப் பெருமாளைப்போல.

யுத்தம் முடிந்ததும் மீண்டும் தாயகம் திரும்பி தம் கைவரிசையை ஆரம்பித்தார். இம்முறை சிக்கியது ஈ.பி.ஆர்.எல்.எவ். அக்கட்சியின் சுரேஷ் பிரேமச்சந்திரனைக் கைக்குள் போட்டுக்கொண்டு கட்சி முக்கியஸ்தர் ஆனார்.

நாடாளுமன்றத் தேர்தலிலும் மாகாண-சபைத் தேர்தலிலும் புலிவாடை உடை யவர்களுக்கு இடம்கொடுக்கவே கூடாது என்று பக்கத்து நாட்டு உளவுத்துறை கூட்டமைப்புத் தலைமைக்குக் காட்டமாக எழுதாத உத்தரவு போட்டபோதும் அதில் இவருக்கு மட்டும் விதிவிலக்கு வழங்கப்பட்டது. ஏனென்றால் தங்கள் மறைமுக முகவராகத்தான் இவர் புலிகளுக்குள் ஊடுருவியிருந்தார் என்ற யதார்த்தத்தால்.

நாடாளுமன்றத் தேர்தலில் தோற்று அடங்கியிருந்த இவர் மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு ஆதரவு சூறாவளி யாக அடித்ததால், சூறாவளியில் அள்ளப்பட்ட அம்மியாக ஒருவாறு கரைசேர்ந்தார். அவ்வளவுதான். தம் கைவரிசையை மீண்டும் காட்டத் தொடங்கினார். இறுதியில் தமக்கு அரசியல் புகலிடம் கொடுத்த ஈ.பி.ஆர். எல்.எவ்வுக்கும் ஆப்புவைத்தார். அரசியல் கத்துக்குட்டியான முதலமைச்சரைக் கையில் போட்டுக்கொண்டு தமது தகிடுதத்தங்களை ஆரம்பித்தார்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

பதவியை பிடிப்பதற்கு தென்னிலங்கை தலைவர்களைப் பொறுத்தவரை இனவாதமே ஒரே வழி மார்க்கம்.

அதேபோல, தமிழ்த் தலைவர்களைப் பொறுத்தவரை குறைசொல்வது மட்டுமே "எதிர்மறை அரசியல் நடத்துவது மட்டுமே" ஒரே பண்பியல்பு. அதனைத் தான் இப்போது தெற்கிலும் வடக்கிலும் நாம் மீண்டும் சந்திக்கின்றோம்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத் தென்னிலங்கையில் இப்போது இனவாதம் மீண்டும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியிருப்பது அபாய எச்சரிக்கையை எழுப்பியிருக்கின்றது. அதேபோல, வடக்கிலும் தங்களது எதிர்மறை அரசியல் என்ற பரவணிப் பழக்கத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக வெளிப்படுத்திக் காட்டிவருகின்றது.

நன்றி - வசிட்டன்

இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் தென்னிலங்கை அரசியல் தலைமையை குறைசொல்லி, குறை சொல்லியே அரசியல் பிழைப்பு நடத்தி வந்தன நமது அரசியல் தலைமைகள். பதவிகளைக் கைப்பற்றுவதற்கும் தேர்தல்களில் வெல்லுவதற்கும் தென்னிலங்கையைக் கரித்துக்கொட்டி பிலாக்கணம் பாடுவதை மட்டுமே தந்திரமாக - தந்திரோபாயமாக கைக்கொண்டு வந்தன நமது தலைமைகள்.

ஜனநாயக வழிப்போராட்டங்கள் மட்டும் அல்ல, ஆயுத வழிப்போராட்டம் வடக்கு மாகாண சபைக்கும் என்பதுதான் வேதனைதரும் உண்மை. இதனையே, கூட்டமைப்பின் சுமந்திரன் எம்.பியும் சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரங்களை சரிவரப் பயன்படுத்த வில்லை. அந்தத் தகைமை அவர்களிடம் இல்லை எனப் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அதிகாரங்கள் எங்கள் கைகளுக்குக் கிடைக்கின்ற போது நாம் அதனை எப்படிப் பாவிக்கின்றோம் என்பது தொடர்பில் பல விமர்சனங்கள் இப்போது எழுகின்றன. "நீங்கள் ஆட்சி அதிகாரங்களைக் கேட்கின்றீர்கள். ஆனால் அதனைக் கையாளக்கூடிய தகைமை இப்போது உங்கள் சமூகத்திலே இல்லை" என்று வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் எங்களிடம் சொல்கின்றார்கள். அதிகாரங்கள் உங்கள் கைகளில் கிடைத்தும் அதனைப் பாவிக்க முடியாமல் இருக்கின்றீர்கள் என்ற பெரிய குற்றச்சாட்டு எங்கள்மீது வந்து கொண்டிருக்கின்றது." இப்படிக் கூறியிருக்கின்றார் சுமந்திரன்.

அவர் இந்தக் கருத்தைப் பகிரங்கமாக வெளியிட்டதன் உள்நோக்கம் வேறு. மாகாண சபைக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி, முதல்வர் விக்கினேஸ்வரன் அணியைச் செயலிழக்க வைக்கும் திட்டத்தின் ஓர் அங்கமே இக்கருத்து வெளிப்பாடு. ஆனால் அந்தக் கருத்தில் உண்மை இருப்பது மறுக்கக் கூடியதல்ல. இந்நிலைமை தோன்றுவதற்குக் காரணமானவர்கள் இக்குற்றச்சாட்டை சபையில் இடம்பெறுவது குறைவிலும் குறைவு. சபைக்குரிய நிதிகூட, உரிய முறையில் செலவிடப்படாமல் திரும்பும் அளவுக்கு நிர்வாகத் திறனின்மை.

இவையெல்லாம் போதாது என்று ஆளும் கட்சியினரே பிரிந்து நின்று, எதிரணியாக ஒருவருக்கு ஒருவர் சேறு அள்ளிவீசும் குள்ளத்தனங்களும் அங்கு சர்வசாதாரணமாகிவிட்டது.

**கையாலாகத்தனத்தில் முதலமைச்சர்**

ஊழல் பேர்வழிகளாகவும், நிர்வாகத் திறனற்றவர்களாகவும் அமைச்சர்கள். நடுநிலைப் பொறுப்பு என்ற தவிசாளருக்கு உரித்தான பண்பியல்பை அடியோடு துறந்துவிட்டு குள்ளநரித்தன அரசியல் விஷமத்தனங்களைத் தூண்டிவிட்டு, குழப்பங்களுக்கு சூத்திரதாரியாக விளங்கும் சபைத் தலைவர்.

கொழும்பிலிருந்து "ரிமோல்ட் கொண்ட்ரோலில்" காய்நகர்த்தும் "சாம் - சுமோ" கூட்டணியின் ஏவல் நாய்களாக சில உறுப்பினர்கள். (அவர்கள் சொற்படி நடந்தால் வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும், ஏனைய தேர்தல்களிலும் முக்கிய பதவிகள் நிச்சயம் என்ற நம்பிக்கையில் இந்த ஏவல் பிசாசுகள் காரியமாற்றுகின்றன என்பது ஊரறிந்த உண்மை.)

நமக்கென்ன எது நடந்தாலும் எந்தப் பக்கமும் சேராமல், யாரையும் வையாமல் இருப்பதன்மூலம் தங்களின் பெயரைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற தீராத நம்பிக்கையில் இன்னொரு சாரார். (விளையாட்டு விழாக்கள், திறப்பு விழாக்கள் என்பவற்றில் தலையைக் காட்டிப் படத்தைப் பத்திரிகையில் போடுவதும், தென்னிலங்கையையும்

# ஜப்பானின் தேசிய கலைத்திட்டத்தின் பாங்கு

திருமதி T. இராகுலன் (ஆசிரியர்)
மே/மா ஹொரண எல்லகந்த
தமிழ் மகா வித்தியாலயம்

ஜப்பானின் தேசிய மட்டத்தில் வடிவமைக்கப்பட்ட கலைத்திட்டமானது சமமான அடிப்படைக் கல்வி, கட்டாயப் பாடசாலை முறைமை என்பவற்றால் மாணவர்களைச் சமமாக நடத்த வாய்ப்பளிக்கின்றது. பாடசாலைகளிடையே நிதி வளப் பங்கீட்டில் சமத்துவம் பேண வழி வகுக்கின்றது. விசேட தேவைகள் கொண்ட மாணவர் தொடர்பில் கவனம் செலுத்தவும் சற்று முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு தரம் 01 முதல் 09 வரையான பாடசாலைக் கல்வி இலவசமானது. கட்டாயமானதுமாகும். இங்கு பாடசாலை ஆண்ட ஏப்ரல் 01 தொடக்கம் அடுத்து வரும் வருடம் மார்ச் 31 வரையானதாக உள்ளது. விடுமுறைகளுடன்கூடிய பாட-சாலைகளை அங்குள்ள பாடசாலைகள் கொண்டுள்ளன. வார நாட்களில் ஐந்து முழு நாட்களும் சனிக்கிழமைகளில் நாள் பாடசாலையும் இடம்பெறும். ஆண்டொன்றில் சட்டப்படி 210 நாட்கள் ஆகக் குறைந்தது பாடசாலை இடம்பெற வேண்டமெனினும் உள்ளூர் பாடசாலைச் சபைகள், பாடசாலை விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், பாடசாலை உட்கருத்தையும், ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதற்கான கல்விசாரா நோக்குடைய வைபவங்கள் என்பவற்றுக்கான மேலும் 30 நாட்களைச் சேர்த்துக் கொள்கின்றன. கற்பித்தல் செயற்பாடுகளின் நிமித்தம் ஒரு வருடத்திற்கு ஒதுக்கப்படும் நாட்கள் 195 ஆகும்.

ஜப்பானில் காணப்படும் கட்டாயப் பாடசாலை முறையானது அனைத்து மாணவர்களையும் பாடசாலை நூல்களைக் கற்கும் ஆற்றலுடையோராக உருவாக்குகின்றது. அத்தோடு பிரயத்தனம், விடாமுயற்சி, சுயவொழுக்கம், கல்விசார் ஆற்றல் என்பவற்றை மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்கின்றது. இவை மாத்திரமன்றி கல்வி வெற்றியை உறுதிசெய்தல் என்பவற்றுக்கான கற்கை நடத்தைசார் பழக்கவழக்கங்கள் என்பனவும் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் ஆரம்பநிலையிலும் இரண்டாம் நிலையின் கீழ்மட்டத்திலும் கற்றலின்போது குழுக்களாக்கப்பட்டாலும் அவர்களின் ஆற்றல்கள் தனியாள் வேறுபாடுகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டே போதனை வழங்கப்படுகின்றது.

கட்டாயப் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்குப் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பாடசாலைச் சபைகளும், அதிபர்களும் ஒவ்வொரு மூன்றாண்டிற்கு ஒரு முறை கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்களில் இருந்து தெரிவை மேற்கொள்கின்றனர். அல்லது கல்வி அமைச்சு பிரசுரிக்கும் நூல்களின் பட்டியலில் உள்ள பாடநூல்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. பாடநூல்களுக்கான செலவினங்கள் கல்வி அமைச்சு ஏற்றுக் கொண்டு அரச, மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு வழங்குகின்றன. பாடநூல்கள் மாணவர்களின் உடைமையாகின்றது.

அநேகமான எல்லாப் பாடசாலைகளும் மாணவர் உடலாரோக்கியம் தொடர்பாகச் சிறந்த நிலையை அடைவதற்கான முறையைக் கொண்டுள்ளன. ஜப்பானிய பாடசாலைகளின் கல்விசார்ந்த மற்றும் விளையாட்டு வசதிகள் சிறப்பாகவுள்ளன. ஏறக்குறைய எல்லா ஆரம்பப் பாடசாலைகளும் வெளியக விளையாட்டரங்குகளையும், 90வீதமானவை தேகப் பயிற்சிக் கூடங்களையும் 75 வீதமானவை வெளியக நீச்சல் தடாகங்களையும் கொண்டுள்ளன.

ஜப்பானில் முன் பிள்ளைபராயக் கல்வி வீடுகளில் ஆரம்பிக்கின்றது. முன்பிள்ளைப் பராய மாணவர்களுக்கு வினைத்திறனுடன் கல்வியூட்ட இவர்களது தாய்மார்களை இலக்காகக் கொண்டும், பெற்றோரும் அதிகளவான புத்தகங்களும், தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்படுகின்றன. அநேகமான வீட்டுப் பயிற்சிப் போதிப்புப் பழக்கவழக்கங்கள், சரியான சமூகநடத்தைகள், நாடகம், வாய்மொழி மற்றும் எண்சார் திறன்கள் போன்றன இங்கு பிரபல்யமானவை. முன் பிள்ளைப்பராயக் கல்விக்கு இங்கு பெற்றோர் கூடிய பொறுப்பேற்கின்றனர். முன்பிள்ளைப் பராயப் பிள்ளைகளுக்கு வீட்டிலிருந்து முறைசார் பாடசாலைகளுக்கான பயிற்சிக்குரிய சூழலை வழங்கி குழு சார்ந்த பாடசாலை வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்குமான பொருத்தப்பாட்டை ஏற்படுத்துகின்றனர்.

முன்பள்ளிகளில் பணியாற்றும் கனிஸ்ட கல்லூரிப் பட்டதாரிகளாக மிகுந்து காணப்படுவோர் இளம்பெண்களே, கல்வி அமைச்சின் மேற்பார்வை இடம்பெறினும் அது அதிகாரரீதியான கல்விமுறையின் அங்கமாக விளங்கவில்லை. 58வீதம் தனியார் முன்பள்ளிகளாகவும் 77வீதம் மாணவர்களை சேர்த்துக் கொள்பவையாகவும் விளங்குகின்றன. அடுத்து அரசின் தொழிலமைச்சினால் பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் முன்பள்ளிக் கல்வியை வழங்குபவையாகக் காணப்படுகின்றன. மனிதத் தொடர்புகள், சூழல், தொழில்சார்ந்த சொற்கள், உணர்வு வெளிப்பாடு போன்ற பரப்புக்களில் கல்வியமைச்சின் முன்பள்ளிகளுக்கான கற்கைநெறி இந்நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆரம்பப் பாடசாலை வயதுப் பிள்ளைகளில் 99 வீதத்திற்கும் அதிகமானோர் பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர்.



அனைத்துப் பிள்ளைகளும் ஆறு வயதில் அனுமதியைப் பெற்றுப் பிள்ளையின் வாழ்வில் மிக முக்கியமான நிகழ்வாக விளங்கும் பாடசாலை கல்வியைத் தொடருகின்றனர்.

தனியார் பாடசாலைகளில் 1வீதத்திற்கும் குறைவானவர்களில் மதியவுணவு மற்றும் விநியோகங்கள் தொடர்பான பாடசாலைச் செலவினங்களைப் பெற்றோர்கள் பொறுப்பேற்கின்றனர். மேலதிக புத்தகங்கள், தனிப்பட்ட பாடங்கள் போன்ற பாடசாலை சாராத கல்விச் செலவினங்களும் பல குடும்பங்களுக்கு உண்டு. 1980களில் சராசரியாக 1314 US டொலராக இச்செலவினம் காணப்பட்டது. தனியார் ஆரம்ப பாடசாலைகளில் இதைவிட கணிசமான அளவு இது அதிகமாகும்.

ஒரு வகுப்பில் சராசரியாக 31 மாணவர்கள் இருப்பினும் அதைவிடக் கூடுதலாக அனுமதிக்கும் இடமுண்டு. கல்வி சார்ந்ததும், ஒழுக்கம் சார்ந்ததுமான சென்முறைகளில் சிறுகுழுக்களாக மாணவர்களை ஒழுங்கமைக்கப்படுவர். மாணவத் தலைவர்கள்மூலம் வகுப்பறை, பாடசாலை என்பவற்றின் பௌதீக தோற்றப்பாட்டைப் பேணும் பொறுப்பு ஊக்குவிக்கப்படும்வகையில் மாணவர்களுக்குப் பொறுப்பளிக்கப்படுகின்றன.

ஒழுக்கக் கல்வி விசேட செயற்பாடுகள் உள்ளடங்கலான கல்விசார், கல்வி சாராப் பாங்குகளின் பரந்த வகைப் பாடங்களின் தொகுப்பாக இக்கற்கை நெறிகள் தொகுக்கப்பட்டுள்ளன. விசேட செயற்பாடுகள் என்பன ஒரு வார காலத்திற்குப் பட்டியலிடப்பட்டு வகுப்பு நடவடிக்கைகளுக்கு ஒப்படைக்கப்படும். ஒழுக்க விருத்தி, குழு முயற்சியின் முக்கியத்துவம், ஒத்துழைப்பு என்பவற்றை வலியுறுத்தும் பாடசாலைச் செயற்பாடுகளுக்கும் வைபவங்களுக்கும் தயார்ப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறந்த கல்விசார் பாடவிதானமானது ஜப்பானிய மொழி, சமூகக் கல்வி, எண்கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களையும் கல்விசாரா பாடவிதானமானது கலை, கைவினை, சங்கீதம், உடற்கல்வி, ஒழுக்கக்கல்வி என்பவற்றையும் போதிக்கும் நிலை காணப்படுகின்றது.

ஆரம்பக் கல்வியானது ஆசிரியர்கள் ஒரு வகுப்பறையின் அநேகமான நடவடிக்கைகளை மேற்கொள்வர். ஆசிரியர்கள் சிறந்த தயார்நிலையில் காணப்படுவார்கள். 60 வீதம்வரை பெண் ஆசிரியர்களும், அநேகமான அதிபர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆண்களாகவும் காணப்படுகின்றனர். ஆசிரியர்களுக்குப் போதுமான அளவு கற்பித்தல் உபகரணங்களைக் கற்புல சாதனங்கள் கிடைக்கின்றன. ஜப்பானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பாடசாலைப் பிரிவினால் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளைக் கிட்டத்தட்ட அனைத்துப் பாடசாலைகளும் பயன்படுத்தக்கூடிய மிகச்சிறந்த வானொலி தொலைக்காட்சி வசதிகள் அங்கு காணப்படுகின்றன. ஒலிபரப்புத் துறையுடன் கணினிப் பாவனையும் வகுப்பறைகளில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஜப்பானிய ஆரம்பக் கல்வியானது ஜப்பானிலும், வெளிநாடுகளிலும் மிகச் சிறந்த கல்விமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வாழ்க்கை நீடித்த கல்விக்கான நேர் மனப்பாங்கினை வடிவமைப்பதாக ஜப்பானிய ஆரம்பப் பாடசாலைக் கல்வி அமையப் பெற்றுள்ளதைக் காணலாம்.

ஜப்பானிய இடைநிலைப் பாடசாலைகள் 07 - 09 வரையான தரங்களையுடைய 12 வயது முதல் 15 வயது வரையான மாணவர்களைக் கொண்ட கல்விசார் கற்கைகளில் கூடுதலாகக் குவியப் படுத்தப்பட்ட வகையினவாகும். முறைசார் கல்வியமைப்பின்கீழ் கீழ்மட்ட இரண்டாம்நிலை பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்வோர் வேலை வாய்ப்பைத் தேடமுடியும். 1980 வரை 4 வீதத்திற்கும் குறைவானோர் அவ்வாறு சென்றுள்ளனர்.

1980களில் ஆரம்பப் பாடசாலை போன்றே கீழ்மட்ட இரண்டாம் நிலைப் பிரிவிலும் அநேகமானவை பொதுப் பாடசாலைகளாகவும் 5வீதம் தனியாருடையதாகவும் இருந்தன. தனியார் பாடசாலைச் செலவினம் பொதுப் பாடசாலைகளிலும் 4 மடங்கு அதிகமானது. (தனியார் - 3989 டொலர், பொது - 934 டொலர்)

1988களில் பாடசாலைகளின் ஆசிரிய ஆளணியில் 2/3 பங்கினர் ஆண்களாகவும் தலைமை வகிக்கும் அதிபர்களில் 99வீதம் ஆண்களாகவும் இருந்தனர். 4 ஆண்டுகள் கல்லூரிக் கற்கையை முடித்த பட்டத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களில் 80வீதம் பட்டதாரிகளாவர். வகுப்பறைக்கான சராசரி மாணவர் தொகை 38 ஆகும். ஒவ்வொரு வகுப்பறைக்கும் வீட்டுச் சூழலை ஒத்த அறை ஒன்று ஒப்படைக்கப்படுவதால் ஆலோசனை வழங்குபவராகவும், ஆசிரியரின் பணி இரட்டிப்பாகின்றது. ஆரம்பப் பிரிவு மாணவர்களைப் போல் அல்லாது இப்பிரிவினர் வெவ்வேறு பாடங்களுக்கு வெவ்வேறு ஆசிரியர்களைக் கொண்டிருப்பர். ஒவ்வொரு 50 நிமிடங்களுக்கும் ஒருமுறை ஆசிரியர் வேறொரு வகுப்பினுள் பிரவேசிப்பார்.

விரிவுரை முறைப் போதனையோடு ஆசிரியர்கள் வானொலி, தொலைக் காட்சி போன்ற ஊடகங்களைப் பயன்படுத்துவதுடன் சில ஆய்வுகூட வேலைகளையும் மேற்கொள்கின்றனர். வகுப்பறை ஒழுங்கமைப்பு இப்போதும் சிறு குழுக்கள் சார்ந்து காணப்படுகின்றது. இப்பாடசாலை மட்ட மாணவர்கள் நாளாந்தக் கடமைகளிலும் ஏற்கத்தக்க நடத்தை வெளிப்பாடுகளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜப்பானிய மொழி, கணிதப் பாடம் போன்ற ஆரம்பப் பிரிவு பாடவிதானத்துடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் ஆங்கிலம் போன்ற ஏனைய மொழிப் பாடங்களையும் இப்பிரிவில் ஆரம்பிக்கின்றது. கீழ்மட்ட இரண்டாம்நிலைப் பாடவிதானம் ஜப்பானிய மொழி சமூகக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், நுண்கலை, சுகாதாரம், உடற்கல்வி போன்ற பாடங்களைக் கொண்டது. ஒழுக்கவியலையும், அதுதொடர்பான விசேட செயற்பாடுகளும் கவனயீர்ப்பைப் பெறுகின்றன. கைத்தொழில் சார் கலைகளிலும் மாணவர்கள் தமது ஆற்றல் வெளிப்படுத்தல்களைக் காட்டவேண்டும். மாணவர் பாடசாலை நேரத்திலும், அதற்குப் பிற்பாடும் பல்வேறு கழகக் கூட்டங்களிலும் பங்கேற்கின்றனர். அங்கு நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு இருப்பதால் மாணவர்கள் பாடசாலைகளை விரும்புவதாகக் கூறுகின்றனர்.

1989இல் இப்பாட விதானம் மறு சீரமைக்கப்பட்டு 1992-1993 பாடசாலை ஆண்டில் பின்பற்றப்பட்டது. சீரமைப்பிற்கான முக்கிய நோக்கம் குடியு ரிமை பற்றிய அடிப்படை அறிவினை வழங்கலாகும். அதன்படி ஜப்பானிய வரலாறு, பண்பாடு என்பவற்றிற்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத்துத் தாம் ஒரு தேச மக்கள் என்பதை விளங்கிக் கொண்டு உலகின் ஏனைய தேச மக்களுடனான உறவுகளையும் விளங்கிக் கொள்ளவேண்டும் என்பது சீரமைப்பின் பிரதான நோக்கமாகும்.

மேல்மட்ட இரண்டாம் நிலைப் பாட-சாலைக் கல்வி ஜப்பானில் கட்டாயமாக இல்லையாயினும் 1989ல் 94வீதம் மாணவர் கீழ்மட்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்கு அனுமதிபெற்றனர். இவ்வாறு 25வீதமானவர்கள் பிரத்தியேகப் பாடசாலைகளாயினும், பொதுப் பாடசாலைகளாயினும் சரி, பிரத்தியேகப் பாடசாலைகளாயினும் இம்மட்டத்தில் கல்வி இலவசமாக வழங்கப்படுவதில்லை. ஒரு பிள்ளைக்கான கல்விக்கு குடும்பமொன்றிலிருந்து வருடாந்தம் 2142 டொலர் செலவிடப்படுகின்றதாக கல்வி அமைச்சினால் கணக்கிடப்பட்டிருக்கின்றது. பிரத்தியேகப் பாடசாலைமட்டத்தில் இது ஒரு மடங்காக உள்ளது. அனைத்துப் பொது மற்றும் தனியார் மேல்மட்ட இரண்டாம்நிலைப் பாடசாலைகளும் அவற்றின் பெறுபேறுகளுக்கு அமைவாக பட்டதாரிகளை வெற்றிகரமாக நாட்டின் மதிப்புமிக்க பல்கலைக்கழகங்களுக்கு வழங்குகின்றன. 1980களில் தனியார் மேல்மட்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகள் படிநிலை வரிசையில் உயர்ந்த மட்டத்தைப் பிடித்திருந்தன. இதனால் மாணவர்கள் பரீட்சைகளைச் சிறப்பாகச் செய்வதற்கான கணிசமான அழுத்தம் இருந்தது.

[தொடர்ச்சி ௨௨ஆம் பக்கம்]



# காதலோ! காதல்!

# காவல் நெஞ்சமெனும் கன்னி மாடம்

இராமனிடம் கருத்து ஒருமித்து விட்டாள் அவள். அவன் நினை வாகவே தவிப்புக் கொண்டிருந்தாள். அப்படி அவள் இருந்தநிலையில் தான் ஒருவன் வில்லை வளைத்து விட்ட செய்தி வந்துசேர்கிறது. இந்தக் கூட்டத்தில், அவளைப்போன்ற இளம்பெண் யாருடைய உள்ளமும், குழப்பத்தில் மூழ்கிவிடுவது இயற்கையே ஆகும். இந்தக் குழப்பம்தான், அவன் இராமன் என்று முடிவு செய்துகொண்ட இடத்தும், அவளிடம் இடம்பெற்றிருக்கிறது. இருந்தாலும் அவள் மனம் எந்தத் திக்கில் சென்றது என்பதைக் கம்பன் எடுத்துக்காட்டுகிறான்.

நீலமாலை சொல்லிய அடையாளங் களிலிருந்து வில்லை வளைத்தவன் நேற்றுத்தான் கண்டவன்தான் என்று அவள் உறுதி செய்துகொண்ட போதிலும், அவன் நேற்றுக் கண்டவனாக இல்லாவிட்டால்

**– காத்தார் –**

தன்னுடைய உயிரையேவிட்டு விடுவேன் என்ற முடிவுக்கும் வருகிறாள். காரணம் என்னவென்றால், தன் தந்தை வாக்குப்படி சிவதனுசை வளைப்பவன் யாராக இருந்தாலும் திருமணம் செய்துகொள்ளவேண்டும். சிவதனுசை வளைப்பவன் ஒருவனாகவும் தன் மனதை கொள்ளை கொண்டவன் இன்னொரு வனாகவும் இருந்துவிட்டால் ஒருவனை மனதில் வைத்துக்கொண்டு வேறொரு வனை மணந்து வாழமுடியாது. ஆகவேதான் தன் மனத்தில் இந்த எண்ணத்தை அவள் வளர்த்துக் கொள்கிறாள். இதைத்தான் கவிஞன்,

" 'சொல்லிய குறியின், அத்,
தோன்றலே அவன்,
அல்லனேல், இறப்பென்' என்று
அகத்துள் உள்ளினாள்"

என்று கூறுகிறான்.

இது, ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், அவர்கள் எந்தளவுக்குத் தங்களுடைய உள்ளக் கிளர்ச்சியை ஒரு முதல்படுத்தி வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதை விளக்கும்.

இதே கருத்தினை விளக்கும் இன்னொரு பாட்டு கவித்தொகையில் இடம்பெற்றிருக்கிறது. காதலனுக்கும் தனக்கும் ஏற்பட்ட உறவு எப்படித் தொடங்கியது என்பதை ஒரு பெண் தன்னுடைய தோழியிடத்தில் கூறுகிறாள்.

"ஒருவன் அழகாகக் கட்டிய கண்ணி குடிக் கொண்டு, வில்லுடன் வலிமை பொருந்திய விலங்குகளின் அடித்தடத்தைத் தொடர்வான்போல, நாள்தோறும் வருவான். என்னையும் பார்த்துக் கொண்டிருப்பான். என்பால் அவன்கொண்ட காமநோயினை முகத்திலே குறிப்பால் காட்டுவானே அல்லாமல் வாய்திறந்து என்னிடத்தில் கூறமாட்டான். பல நாளும் இப்படி வந்து வந்துபோய்க்கொண்டிருந்தான். அவனுக்கும் எனக்கும் எவ்வித நெருக்கமும் இல்லை. இருந்தாலும் அவன் துன்புறுவதைக் கண்டு நானும் வருந்தியவளாக உறக்கம் இல்லாது அல்லற்பட்டேன்.

அவனோ தன் காமநோயை வெளியிட ஆற்றல் இல்லாதவனாக இருந்தான். நானோ பெண்மைக்குப் பொருந்தாது என்ற காரணத்தால் அவனை எதுவும் கேட்கவில்லை. இருந்தாலும் இவன் இப்படியே எதையும் காணாமலேயே இறந்து விடுவானோ என்று ஒருநாள் எண்ணினேன். அதனால் என் தோள்கள் மெலிந்து துயர்கண்டன. ஆகவே, துணிந்து நாணமில்லாத செயல் ஒன்றை நான் செய்தேன்."

திணைப்புலத்திலே கிளி ஓட்டிக் காவல் இருந்தேன். நம்புலத்துக்குப் பக்கத்தில் ஊசலில் ஆட ஏறி நின்றேன். அவன் வந்தான். அப்படி வந்தவனை, "ஐய! என்னைச் சிந்து ஊக்கிவிடு" என்று கேட்டுக் கொண்டேன். அவனும் 'தையலே! நன்று' என்று ஊக்கினான். பொய் யாக்கை நெகிழ்ந்ததுபோலக் காட்டி அவன் மார்பில் விழுந்தேன். உண்மை என்றே அவன் நினைத்து விட்டான். ஆகையால் விரைந்து என்னை அப்படியே அணைத்து எடுத்துக் கொண்டுவிட்டான். உண்மை அறியாதவள்போல் நானும் அவன் மார்பின் மேலேயே கிடந்தேன். பின்னர் அவன் மார்பில் கிடக்கிறோமே என்ற உண்மையை அறிந்து மயக்கம் தெளிந்தவன் போல் நான் எழுந்தால், விரைவாக 'ஓண்குழாய்! செல்க' என்றுகூறி விடும். பண்பனாக அல்லவா அவன் இருந்தான்." என்பதுதான் தலைவி யின் கூற்று. இந்தக் கருத்தினை எடுத்துக்காட்டும் பாடல்:

கயமலர் உண் கண்ணாய்!
காணோய்; ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத்,
தொடை மாண்ட
கண்ணியன் வில்லன், வரும்;
என்னை நோக்குபு,
முன்னத்திற் காட்டுதல் அல்லது,
தான் உற்ற
நோயுரைக் கல்லான் பெயரும்
மன், பன்னாளும்;
பாயல் பெறேன், படர் கூர்ந்து,
அவன் வயின்
சேயேன் மன் யானும் துயர்
உழப்பேன்; அயிடைக்
கண்ணின்று கூறுதல் ஆற்றான்,
அவனாயின்;
பெண் அன்று, உரைத்தல்,
நமக்காயின்; இன்னாதூஉம்
காணான், கழிதலும் உண்டு,
என்று ஒரு நாள் என்
தோள் நெகிழ்புற்ற துயரால்
துணிதந்து! ஓர்
நாணண் இன்மை செய்தேன்; எனல்
இனிக்கிளி யாம் கடிந்து ஓம்பும்
புனத்து அயல்,
ஊசல் ஊர்ந்து ஆட, ஒரு ஞான்று
வந்தானை,
'ஐய!' சிறிது என்னை ஊக்கி, எனக்
கூறத்,
'தையால் நன்று' என்று அவன்
ஊக்க, கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன், அவன்
மார்பில்; வாயாச்செத்து,
ஒய்யென ஆங்கே எடுத்தனன்
கொண்டான்; மேல்
மெய்யறியாதேன் போல் கிடந்தேன்
மன்; ஆயிடை
மெய்யறிந்து ஒற்றெழுவேனாயின்,
மற்று ஒய்யென,
'ஒண் குழாய்! செல்க' எனக் கூறி
விடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்"

இப்பாடல் எடுத்துக் காட்டும் நிகழ்ச்சியில் பல சிறப்புக்கள் அமைந்திருக்கின்றன.

தான் கொண்ட பெண்ணிடத்துக் காதல் கொண்டிருந்தபோதிலும், தன்னுடைய காதலை அவளிடத்து எடுத்துக் கூறுவதற்கு தயங்கிய வனாகவே அந்த இளைஞன் இருக்கிறான். அதேசமயத்தில் அந்த இளைஞனுடைய குறிப்பை அறிந்திருந்தும்கூட தன்னுடைய பெண் தன்மைக்குப் பங்கம் விளைவிக்கும் என்றுகருதி அவளும் வாய்திறந்து எதுவும் கேட்கவில்லை. இப்படி இது பல நாட்கள் நடந்து கொண்டிருந்தது. அவன் படும் துன்பம் கண்டு அவளும் உறக்கமின்றித் துன்பத்தில் தோய்கிறாள். ஆகவே இருவர், மனமும் பொருந்திவிடுகிறது. இருந்தபோதிலும் அவனுக்கு இங்கிதமும், அவளுக்கு நாணமும் குறுக்கே நிற்கின்றன.

இருந்தாலும் வெண்மையுடைய மென்மை ஆண்மையை வென்று விடுகிறது. அப்படித் தன்மேல் காதல்கொண்டு தன்னைப் பார்த்துத் துன்பத்திலே அழுந்தித் தன்னை அடையாமலே அவன் இறந்து விடுவானோ என்ற இரக்க உணர்வு அவளுக்கு ஏற்பட்டுவிடுகிறது. இந்த உணர்விலே தான் பொய்யாகத்தான் நழுவி விழுந்துவிட்டது போல் அவன் மார்பிலே விழுந்துவிடுகிறாள். உண்மையிலே அப்படி நழுவி விழுந்த பெண்ணை ஓர் ஆண் எப்படிக் காப்பாற்றுவானோ அப்படித்தான் அவன் எடுத்து அணைத்துக் கொள்கிறான். பலகாலம் காத்து இருந்ததற்கு இப்போது நல்ல சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது என்று அவன் எல்லைமீறி நடந்துகொண்டு விடவில்லை.

எவ்வளவு நேரம் அவள் மயங்கிக் கிடப்பதாக அவன் மார்பிலே கிடந்தாளோ அவ்வளவு நேரத்திற்குத் தான் அவளை அவன் அனுமதித்தான். மயக்கம் தெளிந்ததுபோல் எப்போது அவள் எழுந்தாளோ, உடனேயே, 'நீ செல்வாயாக' என்று அவன் விட்டு விடுகிறான். இருவருக்குமிடையே பலகாலமாகத் தொடர்ந்திருந்த காதல் உணர்வுக்கு இடையேகூட அவர்கள் இருவரும் எந்தளவுக்குக் கட்டுப்பாட்டு டனும், பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இப்பாட்டு நன்கு தெளிவுபடுத்துகிறது.


மயக்கம் தெளிந்த அவள் தன் மார்பில் இருந்து எழுந்தவுடனே, அதை யாராவது கண்டுவிட்டால் அவளுக்கு குறை கற்பிக்கப்படுமே என்று, வெகுவிரைவாக 'நீ செல்வாயாக' என்று கூறிவிடுகிறான். இந்த நிகழ்ச்சி இன்று நம் வாழ்விலும், நாடகமேடைகளிலும், வெள்ளித் திரையிலும் காணும் நிகழ்ச்சியே. ஆனால் சம்மந்தப்பட்ட ஆணும் பெண்ணும் நடந்து கொள்கிறவிதத்தில் தான் பாட்டு உணர்த்தும் நிகழ்ச்சி க்கும், நாம் இன்று காணும் நிகழ்ச்சிக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது. **(தொடரும்)**

வாரமொரு வாழ்வியற்

# சிந்தனை

நமது நாட்டில் அண்மைக் காலமாக நிகழும் இளைஞர், யுவதிகளுடன் பெற்றோருடனும் சமூகக் கட்டமைப்புகளுடன் தொடர்புடைய நிகழ்வுகளை நாம் எந்தக் கண்கொண்டு நோக்குவது என்பது பலருக்கும் புரியாத புதிராகவே இருக்கிறது.

அந்தவகையில், இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவங்களின் பின்னணிக் காரணிகள் மற்றும் அவற்றைக் கையாள வேண்டிய முறைமைகள் தொடர்பிலான உளவியல்ரீதியான பயனுள்ள குறிப்புகள் இங்கு முன்வைக்கப் படுகின்றன.



# கட்டிளம் பருவத்தினை கையாள்வது எப்படி?

### கட்டிளமைப் பருவம் ஒரு அறிமுகம்

◆ மனிதவாழ்வின் சிக்கல் நிறைந்த கட்டமாகக் கருதப்படும் கட்டிளமைப் பருவம், பாலியல் முதிர்ச்சி மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைதல் என்பனவற்றை ஏற்படுத்துகிறது.

◆ மிகப் பரந்த உடல் மாற்றங்கள் ஏற்படும் இப்பருவத்தில் மேலும் பல உள, சமூக, மனவெழுச்சி மாற்றங்கள் ஏற்படுகின்றன.

◆ ஆங்கிலத்தில் குறிப்பிடப் படும் Adolescence எனும் வார்த்தையானது இலத்தீன் சொல்லாகும். இதன் அர்த்தம் முதிர்ச்சி, வளர்ச்சி என்பனவாகும். இது உள, மனவெழுச்சி (Emotions) சமூக மற்றும் உடல் வளர்ச்சிகளை உள்ளடக்குகிறது.

◆ புயலும், நெருக்கீடும் (Storm & Strees) கொண்ட பருவமாகவே விருத்தி உளவியல் அறிஞர்கள் (Development Psychologist) இப்பருவத்தை நோக்குகின்றனர்.

◆ 13 வயதில் ஆரம்பிக்கப் படும் இப்பருவம் 20 அல்லது 21 வயதுவரை நீடிப்பதாகக் கருதப்படுகிறது.

◆ உடலியல் மாற்றம் மற்றும் பாலியல் முதிர்ச்சிகளால் மிகவும் தீவிரமான எதிர்ப்பாலார் மீதான கவனம், பார்வை இப்பருவத்தில் ஏற்படுகிறது.

### கட்டிளமைப் பருவத்தின் முக்கியத்துவம்

1. இப்பருவத்தினரின் அறிவும், சமூக உறவுகளும், வாழ்க்கையின் இலக்குகளும் பலவகைகளில் வளர்ச்சியுற்று நிலை நிறுத்தப் படுகின்றன.

2. ஒருவரின் (ஆண், பெண்) பிற்கால வாழ்க்கைத் தன்மையும், ஆளுமை வளர்ச்சியும் கட்டிளமைப் பருவத்திலேயே நிர்ணயிக்கப் படுகிறது.

3. தான் தனித்த பாலினத்தைச் சார்ந்தவர் என்ற உணர்வு ஏற்படல்.

4. கட்டிளமைப் பருவத்தில் ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் பாலின உணர்வு ஏற்பட்டு தன் பாலினத்தைச் சார்ந்த உடல் தோற்றம் நினைவுக்கு வருகின்றது. ஓர் ஆண் பிள்ளை, தான் உடல் பலத்தில் நிகரற்று வலிமைமிக்கதோர் இளைஞனாக உருவாகவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதற்கேற்றவகையில் உணவினையும், பயிற்சியினையும் ஏற்கவிழைகின்றான். இதனைப் போன்ற ஒரு பெண் பிள்ளை கவர்ச்சியான ஆரோக்கியமான உடற்கட்டைப் பெறுவதற்கு தோற்றத்தாலும் கவர்ச்சியாலும் ஒருவரை ஒருவர் கவரவும் ஈர்க்கவும் முனைகின்றனர்.

5. பாலின உறுப்புக்கள் நன்கு முதிர்ச்சியடைதலும், பாலினமிகு உணர்ச்சிகளை சமூக அங்கீகரிப்புக்கு உள்ளான வழியில் நிறைவேற்ற வழி இல்லாமல்போவதும் ஏற்படுகிறது.

6. பாலின உணர்ச்சி அடக்குதலால் சமூக ஒழுக்க நெறிசார்ந்த பிரச்சினை ஏற்படுத்தலும், வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பது பற்றிய சிந்தனை ஏற்படுத்தலும்.

7. பெற்றோர் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு மனவெழுச்சி சுதந்திரம்(Emotional Independence) ஐ பெறல்.

8. பெற்றோரின் கருத்துக்கள் போல் தமது கருத்துக்களும் ஏற்கப்படவேண்டும் என எதிர்பார்த்தல்.

குறிப்பு: மனவெழுச்சிசுதந்திரம் ஏற்படாதபோது பிற்காலத்தில் இவர்கள் தாங்களே துணிந்து ஒரு செயலுக்கான முடிவினை எடுப்பதற்கும் பொறுப்பேற்பதற்கும் சக்தியற்றவர்களாகிவிடுவர்.

9. பொருளாதாரத் தேவைக்கு பெற்றோரில் தங்கியிருத்தல் அவமானம் என்ற உணர்வு ஏற்படல்.

10.மேலும் கட்டிளமைப் பருவத்தில் ஓர் ஆணும், பெண்ணும் மனிதவாழ்க்கையின் பயன் மதிப்புகளையும், சிறப்புகளையும் அறிகின்றனர்.

இப்பருவத்தில்தான் இவர்கள் தாங்கள் எதிர்காலத்தில் இப்படியெல்லாம் வாழவேண்டும் எனக் கற்பனைசெய்து அக்கற்பனைக் கனவுகளை நனவாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

(தொடரும்...)

---

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 664

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | ■ | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | ■ | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | ■ | ■ | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | ■ |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

## குறுக்கெழுத்துப் போட்டி 662 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 த | 2 னு | 3 ஜா | ■ | 5 ஓ | 6 ம் |
| 7 னி | 8 த | 9 ன | 10 ம் | 11 தா | 12 ய |
| 13 ப் | ■ | 15 கி | 16 ன் | 17 ம | 18 ர |
| 19 பி | 20 ந | ■ | 22 க | 23 ல் | 24 கி |
| 25 ற | 26 வ | 27 ர் | 28 ம | ■ | ■ |
| 31 வி | 32 ம் | 33 மு | ■ | 35 ச | 36 கி |

**இடமிருந்து வலம்**

01. ஈழத்து இலக்கியப் பரப்பில் முக்கியமானவர்களில் ஒருவர்.
9.விரைவில் விண்வெளி ஓடத்திற்கு செல்லவுள்ள பிரித்தானியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழ்ப்பெண்.
13. இரவு, நலம்.
16.கட்சி, பக்கம். (திரும்பியுள்ளது)
19.சிவப்பு, சுவைகளில் ஒன்று.(குழம்பியுள்ளது)
25.ஆங்காரம் பண்ணு.
31.மங்கலவரிசி. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. வங்காளத்தின் துன்பம் எனப்படுவது.
3. லத்தீன் அமெரிக்க வலயத்தில் பரவும் ஒருவகை வைரஸ். (திரும்பியுள்ளது)
4. ஆலோசனை, தியானித்திருத்தல். (குழம்பியுள்ளது)
5. பெறுபேறு. (குழம்பியுள்ளது)
6. தீவினை. (குழம்பியுள்ளது)
14. சிறந்தது. (குழம்பியுள்ளது)
28. சர்ப்பம். (திரும்பியுள்ளது)
29. குடுமி, உச்சி. (திரும்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 29.02.2016 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 664
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.662 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. மு.அருந்தவராஜா, கல்மடு, வட்டக்கச்சி.
02. தா.அபிநயா, கடற்கரை வீதி, நீர்கொழும்பு.
03. அ.இமயவண்ணன், மடு, மன்னார்.
04. தா.நிசாந்தன், கண்டி வீதி, சாவகச்சேரி.
05. இ..செல்வி, 3ஆம் கட்டை, கிளிநொச்சி
06. ஜே.அஸ்வத், கிண்ணியா -06
07. எஸ்.ஆரனி, பேராதனை, கண்டி.
08. து.அஸ்மித், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
09. திருமதி எஸ்.தெய்வேந்திரம், கரவெட்டி, நெல்லியடி.
10. பொ.பவதாரணி, பிரதான வீதி, கதிர்காமம்.

# சினிமா ஆசையால் என்ஜினீயர் படிப்பை பாதியில் கைவிட்டேன் – ஹரிஷ் கல்யாண்


வில் அம்பு படத்தில் வெற்றியை கண்ட கதாநாயகர்களில் ஒருவரான ஹரிஸ் கல்யாண் அளித்த பேட்டி... வில் அம்பு படத்தில் நான் நடித்த அருள் என்ற கதாபாத்திரம் தற்செயலாக என் நிஜவாழ்க்கையுடன் தொடர்புடையதாக அமைந்துவிட்டது. என்ஜினீயர் ஆகவேண்டும் என்று என் அப்பா என்னை ஐ.டி.யில் சேர்த்தார்.

ஆனால் எனக்கு பிடித்தது சினிமா என்பதால் என்ஜினீயரிங் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு சினிமா தொடர்பான விஸ்வல் கம்யூனிகேஷன் படிப்பை தபால்மூலம் கற்றேன். வில் அம்பு கதாபாத்திரம் அப்படியே என் வாழ்க்கையுடன் தொடர்புடைய தாகிவிட்டது. என் அப்பா இந்த படத்திலும்கூட எனக்கு தந்தையாக நடித்திருக்கிறார். இது இன்னொரு மகிழ்ச்சி யாக அமைந்தது.

அரிது அரிது, சிந்து சமவெளி, பொறியாளன் ஆகிய படங்களை தொடர்ந்து நான்காவ தாக நடித்த வில் அம்பு வெற்றி அடைந்து பெரியளவில் பேசப்படுகிறது என்பது மிக மகிழ்ச்சி. இதனால் எனக்கு பொறுப்புகள் அதிகமாகியுள்ளது. இனிவரும் படங்களை மிக கவனமாக தேர்ந்தெடுக்கவேண்டியுள்ளது.

எனக்கு தனி ஹீரோ கதாபாத்திரம் அமைந்த படங்களில் நடிக்க விருப்பம். அக்சன், ரொமான்ஸ், சென்டிமென்ட் என்ற எல்லா அம்சங்களும் பொருந்திய வேடங்கள் கிடைத்தால் மிக மகிழ்ச்சி. இதில் எனது காதலியாக நடித்த சிருஷ்டி டாங்கே எல்லோரிடமும் நட்புடன் பழகினார். வில் அம்பு படத்தை பாராட்டும் திரையுலக நண்பர்களும், ரசிகர்களும் என்றும் கடமைபட்டுள்ளேன். என்மீது பெரிய நம்பிக்கை வைத்துள்ளார்கள். அதை காப்பாற்றும் விதமாக திரையுலகில் தொடர்வேன்.






# குடும்ப வாழ்க்கை சந்தோஷமாக இருக்கிறது

## — அசின் பேட்டி

நடிகை அசினுக்கும், தொழில் அதிபர் ராகுல் சர்மாவுக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு பிறகு முதல் தடவையாக காதலர் தினத்தையொட்டி அவர் பேட்டி அளித்தார். அசின் கூறியதாவது:-

“கஜினி படத்தில் எனக்கும் மொபைல் நிறுவன அதிபர் சஞ்சய் ராமசாமிக்கும் காதல் மலர்வது போன்று காட்சி வைத்து இருந்தனர். எனது நிஜவாழ்க்கையிலும் அது நடந்துவிட்டது. ஹவுஸ்புல் இந்தி படத்தை விளம்பரப்படுத்த நானும், அக்ஷய்குமாரும் வெளிநாடு புறப்பட்டோம். விமான நிலையத்தில், அப்போதுதான் முதல் தடவையாக ராகுல் சர்மாவை பார்த்தேன். அவரை மொபைல் நிறுவன அதிபர் என்று அக்சய்குமார் எனக்கு அறிமுகப்படுத்தினார்.

ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக்கொண்டோம். விமானத்தில் ஏறியதும் அக்ஷய்குமார் என்னிடம், நீயும், ராகுல் சர்மாவும் பொருத்தமான ஜோடிகளாக தெரிகிறீர்கள் என்று என்னிடம் கூறினார். அக்ஷ ய்குமார் மனதில் பட்டதை வெளிப்படையாக பேசி விடுவார். எனவே அவர் சொன்னதை நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

பிறகு ராகுல் சர்மா என்னுடைய போன் நம்பரை கேட்டு வாங்கிக்கொண்டார். ஒருநாள் திடீரென்று அவர் என் வீட்டுக்கு வந்தார். எனது அம்மா, அப்பாவிடம் உங்கள் மகளை திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன் என்றார். அவர் சொன்னதை கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. எனது பெற்றோரும் அதிர்ந்தார்கள். பின்னர் அவர்கள் எங்கள் மகள் விருப்பம்தான் எங்களுக்கும் என்றனர்.

திடீர் என்று அவர் திருமணம் செய்துகொள்வதாக சொன்னதால் என்னால் எந்த பதிலையும்

# விரைவில் திருநாள்

ஜீவா நடிப்பில் உருவாகியுள்ள போக்கிரி ராஜா படம் விரைவில் வெளியாகவுள்ளது. ஹன்சிகா, சிபி மற்றும் பலர் இப்படத்தில் நடித்திருக்கிறார்கள். இப்படத்தின் ஆடியோ வெளியீட்டு விழா சமீபத்தில் வெளியானது. இந்நிலையில் ஜீவா நடித்துள்ள மற்றொரு படத்தின் ரிலீஸ் திகதி குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளது.

“ஈ” படத்திற்கு பின்னர் நீண்ட இடைவெளிக்கு பிறகு ஜீவா-நயன்தாரா ஜோடி சேர்ந்து நடித்துள்ள படம் “திருநாள்”. இப்படம் வரும் ஏப்ரல் 1-ஆம் திகதி ரிலீஸ் ஆகும் என செய்திகள் வெளியாகியுள்ளது. இப்படத்தில் ஜீவா ரௌடியாக நடித்திருக்கிறார். நயன்தாரா பேபி கிளாஸ் டீச்சராக நடித்திருக்கிறார். ரௌடியாக இருந்து ஒருவன் திருந்தும் போது ஏற்படும் இன்னல்களை படமாக்கியிருக்கிறார்கள்.



சமீபத்
நிகழ்
பங்
இந்தி

கத்ரீனா
குழந்தைக
பேசினார்.
ஒவ்வொரு
பிள்ளைக
அவர்கள்
அனுமதிக்கிறார்கள். பல
அவர்களுக்கு அறிவுரை
ஆனால் பிள்ளைகள் ஒ
திறமையாக பயன்படுத்
குழந்தைகளிலும் பெ
தங்கள் குடும்பத்தை மி
நேசிக்கிறார்கள் என்றுத
காதலென்று வரும்போது
தனிப்பட்ட விஷயமாகி
காதல் யாராலும் நி
இல்லை. இருவரின் தனி
ஆனால், பெற்றோரால் ஊ
திருமணம் தெளிவாக நி
என்பதை பிள்ளைகள் அ
இந்த விஷயத்தில் பெற்
விருப்பத்துக்கு எதிரான
முடியாது எ







காதலும் கடந்து போகும்



சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற இந்தி நடிகை

# அனிருத்தின் புதிய முடிவு

பீப் பாடல் பிரச்சினை அனிருத் மனதை மிகவும் பாதிப்படைய செய்துள்ளது. இருப்பினும், தன்னுடைய இசையில் காதலர் தினத்தன்று “அவளுக்கென்ன” என்ற தனி அல்பம் ஒன்றை அனிருத் பாடி வெளியிட்டுள்ளார். இந்த பாடல் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்று வருகிறது.

இதனால், இனிவரும் காலங்களில் படத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட தனி அல்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க அனிருத் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வருடத்தில் அஜித் நடிக்கும் புதிய படம், விக்னேஷ் சிவன் இயக்கும் புதிய படம், சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகும் புதிய படம் ஆகிய 3 படங்களுக்கு மட்டுமே அனிருத் ஒப்பந்தமாகியுள்ளார்.

வரிசையாக படங்களில் ஒப்புக்கொள்ளாமல், குறிப்பிட்ட சில படங்களுக்கு மட்டுமே இசையமைக்கவும் அனிருத் திட்டமிட்டுள்ளாராம். அதற்கு பதிலாக இசை விழா மற்றும் அல்பங்களில் தனது நேரத்தை செலவிட திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அனிருத் ஏற்கெனவே பாடி வெளியிட்ட “சான்ஸே இல்ல” என்ற தனி அல்பம் பெரிய அளவில் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

கத்ரீனாகைப் பெற்றோர், குழந்தைகள் உறவு பற்றி பேசினார். அவர் கூறும்போது... ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை நேசிக்கிறார்கள். அவர்கள் விரும்பும்படி வாழ அனுமதிக்கிறார்கள். பல விசயங்களில் அவர்களுக்கு அறிவுரை வழங்குகிறார்கள். ஆனால் பிள்ளைகள் ஒவ்வொருவரும் அதை திறமையாக பயன்படுத்துவது இல்லை.

குழந்தைகளிலும் பெரும்பாலானோர் தங்கள் குடும்பத்தை மிகவும் நன்றாக நேசிக்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். காதலென்று வரும்போது அது அவர்களுடைய தனிப்பட்ட விஷயமாகிவிடுகிறது.

காதல் யாராலும் நிச்சயிக்கப்படுவது இல்லை. இருவரின் தனிப்பட்ட விருப்பம். ஆனால், பெற்றோரால் உறுதிசெய்யப்படும் திருமணம் தெளிவாக நிச்சயிக்கப்படுவது என்பதை பிள்ளைகள் அறியவேண்டும். இந்த விஷயத்தில் பெற்றோர் குழந்தைகள் விருப்பத்துக்கு எதிரானவர்கள் என்று கூற முடியாது என்றார்.

தது
பட்டி
க்கும்
முதல்
ளித்தார்.
விமான



மனிதன்




முரசுமோட்டைப் பகுதியில் வாழும் விவசாய முதலாளிகளில் சிலர் தூரத்தில் வந்துகொண்டு இருப்பதைக் கண்ட மக்களின் மனங்களில் ஒருவிதமான அச்சம் ஏற்படத் தொடங்கியது. அதனால் அவர்கள் மேற்கொண்ட காடு திருத்தும் வேலையில் சிறிது சோர்வு நிலை ஏற்படத் தொடங்கியது. இதனை உணர்ந்த செல்வா "நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் வேலையைச் செய்யுங்கோ! அவர்களோடு நான் பேசிக் கொள்வேன்" என அவர்களை உற்சாகப்படுத்தினார். செல்வாவின் பேச்சுக்குச் செவிசாய்த்து தமது வேலைகளில் அந்த மக்கள் ஈடுபட்ட போதும் அவர்களது உள்ளத்தில் எழுந்த ஏதோ ஒரு உணர்ச்சி அவர்களது வேலையின் வேகத்தை பாதித்தவண்ணம் இருந்தது. அதனால் அவர்களது முகங்களிலே திடீரென ஒரு சோர்வு நிலை ஏற்பட்டது.

ஒன்றாகக் கூடி ஒரு கூட்டுப் பலத்துடன் நிற்கும் அந்த மக்கள் விடுதலைப் புலிகளின் பக்கபலம் இருந்தும் எதற்காக அப்படி அச்சப்பட்டார்கள்? என்ற கேள்வியை எம்மோடு பேசிக்கொண்டிருந்த இளைஞர்களைப் பார்த்து நாம் கேட்டபோது அதற்கு அந்த இளைஞர்களில் ஒருவர் பதில் சொன்னார்...

அந்த விவசாய முதலாளியின் நிலத்தில் குடியிருந்து கொண்டு அவர்களது வயல்களிலேயே வேலை செய்து எமது வாழ்க்கைச் சீவியத்தை நடாத்திக் கொண்டிருக்கும் வறிய கூலி மக்களாகிய நாங்கள் எமது அன்றாடம் வாழ்வுக்கு அவர்களையே நம்பி இருக்கின்றோம். அவர்களிலேயே தங்கிநின்று எமது வாழ்வை வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். சிலவேளை அவர்கள் தமது நிலங்களைவிட்டு எம்மைத்

**தங்கன்**

துரத்தினால் நாம் என்ன செய்வது என்ற எண்ணம்தான் அவர்களது அச்சத்திற்குக் காரணமாகும்.

அதுமட்டுமல்ல, கடந்த ஐம்பது வருடங்களாக இந்த வன்னி பெருநிலப்பரப்பிலே வாழ்ந்துவரும் நாங்கள் இன்றுவரை ஒரு சின்னத்துண்டுக் காணி நிலம் கூடச் சொந்தமாக இல்லாதவர் களாகவே வாழ்ந்துவருகின்றோம். ஆனால் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து சூரியக் கதிர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வன்னிக்குவந்த மக்கள் தமக்கான நிலத்தை வன்னியில் சொந்தமாக்கி விட்டார்கள். எம்மால் அது முடியவில்லை.

1956 ஆம் ஆண்டிலும் 1977 ஆம் ஆண்டிலும் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு இங்கு வந்து குடியேறிய மலையக மக்களாகிய எங்களுக்கு இதுவரை நிலத்திற்கான உரிமையைப் பெறமுடியவில்லை. இதன்காரணமாக புலிகளின் இந்த முயற்சியில் எமது பெரும்பாலான மக்களிற்கு நம்பிக்கை ஏற்பட வில்லை. இந்த நம்பிக்கையீனமும் அவர்களது அச்சத்திற்கான காரண-மாய் இருக்கலாம் என அந்த இளைஞர்கள் கூறினார்கள்.

அவர்கள் கூறிய அந்தப் பதிலை எம்மால் நிராகரிக்க முடியவில்லை. அது நிலஉடைமைக் கலாசாரப் பண்பாட்டில்ஊறி வளர்ந்த யாழ்ப்பாணத்துக்கு மக்களின் இயல்பான மனோபாவம். ஆனால் பிரித்தானிய வெள்ளை மனிதர் களால் முதலாளித்துவப் பாணியில் உருவாக்கப்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர் பரம்பரையிடம் அந்த மனோபாவம் இருக்கமுடியாது. எனவேதான் அவர்கள் யாழ்ப்பாணத்து விவசாயிகளை விவசாய முதலாளி கள் என அழைக்கின்றார்கள். இதைப் புரிந்துகொண்ட நாம் கோரக்கன்கட்டுக் குடியிருப்பின் வரலாற்றை தொடரும்படி கோரினோம். விட்ட இடத்திலிருந்து அவர்கள் தொடர்ந்தார்கள்.

நாம் வேலை செய்யும் இடத்தை நோக்கி வந்த முரசுமோட்டை விவசாய முதலாளிகள் எம்மைப் பார்த்து நாங்கள் எல்லாம் ஒன்றாக, ஒரு தாய் பெற்ற பிள்ளைகளைப் போல் இதுவரை காலமும் வாழ்ந்தனாங்கள். இனியும் அப்படித்தான் வாழவேணும். இந்தக் காணி களெல்லாம் ஏற்கனவே அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணிகள். சில காணிகள்மத்திய வகுப்புத்திட்டத்தின்கீழ் அரசாங்கத்தால் உறுதிப்பத்திரத்துடன் வழங்கப்பட்ட



காணிகள். இவ்வாறு உறுதியுடன் வழங்கப்பட்டவர்கள் வெளிநாடு களில் நிற்கிறார்கள். போமிற்றுடன் வழங்கப்பட்ட காணித் துண்டு களிற்கான போமிற் எங்களிடம் உள்ளது. எனவே காணி திருத்தும் உங்களது முயற்சியை நீங்கள் கைவிடவேண்டுமென எம்மிடம் வினயமாக வேண்டிக்கொண்டார்கள்.

அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க பதிலை செல்வா கூறும்போது, இந்தக் காணியை நாங்கள் திட்டமிட்டவகையில் பிடிக்கேல்லை. விடுதலைப் புலிகள் இயக்கம்தான் இக்காணியை எமக்கு வழங்கினார்கள். எனவே உங்களது பிரச்சினையை நீங்கள் அவர்களுடன்தான் கதைக்க வேணும் எனத் தூரத்தில் நின்ற புலிகளால் அவ்விடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போராளியிடம் அனுப்பினார். உடனே அப்போராளி யிடம் சென்ற விவசாய முதலாளிகள் தமது முறைப்பாட்டை முன்வைத்தனர்.

அவர்களது முறைப்பாட்டைக் கேட்ட அப்போராளி அவர்களைப் பார்த்து, "ஐயா உங்களது பிரச்சினை சம்மந்தமாக நான் எந்தவொரு பதிலையும் சொல்லமுடியாது! நீங்கள் உங்களிடம் உள்ள போமிற்றையும் உறுதிகளையும் கொண்டு புலிகளின் நிர்வாக சேவைக் காரியாலயத்திற்குப் போங்கள். அங்கே காணிக் கச்சேரிக்குப் பொறுப்பானவர்கள் இருக்கின்றார்கள். உங்களிடம் இருக்கும் ஆவணங்களை அவர்களிடம் காட்டுங்கள். அவர்கள்தான் உங்கள் பிரச்சினைக்கான தீர்வை உங்களுக்குத் தருவார்கள். நிர்வாக சேவைக் காணிக்கச்சேரியில் இந்த நிலம் உங்களுக்குத்தான் சொந்தமானதெனத் தீர்ப்பு வழங்கப்பட்டால் நாங்கள் உடனடியாகவே இக்காணியை விட்டு அவர்களை வெளியேற்றி விடுவோம்" எனக்கூறி அவர்களை அனுப்பிவைத்தார்.

ஆனால் அவர்கள் நிர்வாக சேவைக் காரியாலயத்திற்குச் செல்லவில்லை. அரச அதிகாரிகள் தான் தமது சித்து விளையாட்டுக்குப் பொருத்தமானவர்கள் என்பதை தமது அனுபவத்தால் கண்டவர்கள் என்பதால் அவர்கள் நேரடியாகவே அரச அதிபரிடம் சென்று முறையிட்ட னர். அவர்களது முறைப்பாட்டைக் கேட்ட அரச அதிபர் உதவி அரசாங்க அதிபரிடம் அவர்களை அனுப்பிவைத்தார். உதவி அரசாங்க அதிபர்கள் அவர்களின் முறைப்பாட்டைக் கருத்தில் எடுத்து காடுதிருத்தும் வேலையை உடனடி யாக நிறுத்துமாறு உத்தரவிட்டார்.

இதனால் அந்த மக்கள் அந்த காணியைவிட்டு மிகுந்த மன வேதனையுடன் வெளியேறினார்கள். ஆனால் செல்வா மட்டும் தனது நம்பிக்கையை இழந்துவிடவில்லை. உடனடியாக இளஞ்செழியனுக்கு அறிவித்தார்.

விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவைப் பிரிவில் உள்ள காணிக் கச்சேரிப் பிரிவினர் இது விடயம் சம்மந்தமாக அரச அதிபருடனும் உதவி அரசாங்க அதிபருடனும் நேரில் சந்தித்து உரையாடினர்.

அந்தக் காணிக்கான உறுதியை யோ அல்லது போமிற்றையோ விவசாய முதலாளிகள் சமர்ப்பிக்கத் தவறியதாலும் மத்திய வகுப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு காணிக்கான பதிவுகள் எதுவும் உதவி அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் இல்லாததாலும் அந்தக் காணியை எமக்கே தருவதாக உதவி அரசாங்க அதிபரால் எமக்கு அறிவிக்கப்பட்டது. இந்த அறிவித்தல் எமக்குக் கிடைத்ததும் எமது திருத்த வேலை கள் மீண்டும் ஆரம்பமானது...! திருத்த வேலைகளில் பங்கு கொண்டோர் உற்சாகமாகத் தமது வேலைகளை மேற்கொண்டார்கள். ஆனால் விவசாய முதலாளிகள் தமது முயற்சியில் இருந்து பின் வாங்கிவிடவில்லை. அரச அதிபரை யும் விடுதலைப் புலிகளையும் விமர்சித்தவாறு இறுதி ஆயுதமாக தமது பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். அந்த ஆயுதம் எமது மக்களின் மனங்களைத் தாக்கத் தொடங்கியது.

"புலிகளின் ஆட்டம் சமாதானத் தோடு முடிவுக்கு வரப்போகின்றது. சிறிலங்கா அரச நிர்வாகம் இனி வரப்போகின்றது. அவ்வாறு சிறிலங்கா அரச நிர்வாகம் வந்ததும் சட்டவிரோதமாகக் குடியேறிய உங்களையெல்லாம் அந்தக் காணியைவிட்டுத் துரத்துவார்கள். அத்தோடு உங்களையெல்லாம் புலிகள் எனப் பிடிப்பார்கள். இந்தச் சட்டவிரோதக் குடியேற்றத்தால் நீங்கள் எல்லாம் அழியப் போகின்றீர்கள். உங்கள் மனைவி, பிள்ளைகள் எல்லாம் குடும்பத்தோடு நடுத்தெருவில் நிற்கப் போகின்றீர் கள் எனத் தொடர் பிரசாரத்தை எமது மக்கள் மத்தியில் மேற்கொண்டு எமது மக்களை மிரட்டினார்கள்.

(தொடரும்)

இந்த வார சிறுகதை

# கசப்பானதொரு உண்மை

கௌசல்யா ரங்கநாதன்



போட்ட பட்ஜெட்டுக்கு மேலேயே இழுத்துக்கொண்டு போய்விட்டு இருந்தது எங்கள் மகளின் கலியாணம்.

வீட்டைக் கட்டிப்பார். கலியாணத்தைப் பண்ணிப்பார்னு சும்மாவா சொன்னாங்க" என்று என் நண்பர்கள் ஆறுதல் சொன்னார்கள் எனக்கு.

"நான் அது பத்தியெல்லாம் கவலைப்படலை' என்று எப்படி அவர்களிடம் சொல்வது?

வாழ்க்கைப்பட்ட இடத்தில் பெண் வசதியாய், மனநிறைவாய் வாழ்ந்தால் அதுபோதும் என்று நினைத்துக் கொண்டிருக்கையில் என் சம்பந்தி அருகில் வந்தார்.

"கலியாணத்தை எந்தக் குறையும் வைக்காம பண்ணிட்டீங்க" என்று புன்முறுவலுடன் சொன்னார்.

"அது என் கடமை."

"ஆனாலும்..."

"என்ன சொல்லுங்க. இன்னும் ஏதாவது நாங்க செய்யணுமா?" என்று நான் கேட்க, "என்ன சம்பந்தி இப்படி கேட்டுட்டீங்க?" என்றார்.

"தவறாயிருந்தா என்னை மன்னிச்சிடுங்க" என்றேன்.

"எங்களை என்ன ஈவிரக்கம் இல்லாதவங்கனு நினைச்சிட்டீங்களா சம்பந்தி" என்றார் கண்ணீருடன்.

"ஐயோ... நான் அப்படி சொல்லியிருக்கக் கூடாதுதான். தேவையில்லாமல் ஒருத்தர் மனசைப் புண்படுத்திட்டேன்." என்றேன்.

"மறுபடி மறுபடி ஏன் பெரிய பெரிய வார்த்தையெல்லாம். நாம் ஒண்ணுக்குள் ஒண்ணாயிட்டோம். இந்த சம்பிரதாய மன்னிப்பெல்லாம் நமக்குள்ள தேவையா?" என்றவரிடம் மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியவில்லை எனக்கு.

பிறகு அவரே தொடர்ந்தார். "இதபாருங்க நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்கக்கூடாது நீங்க"

"நான் ஏன் உங்களைத் தப்பா நினைக்கிறேன்."

"எங்க ஒரே மகனுக்கு கலியாணம் பண்ண பெண் பார்த்தப்ப உங்க பெண் ஜாதகம் கிடைச்சது... பொருத்தம் அருமையா இருந்தது. பையனுக்குப் பெண்ணையும், பெண்ணுக்குப் பையனையும் பிடிச்சுது. நமக்குள்ளயும் ஒரு புரிதல் இருந்திச்சி. நாங்க எதையும் உங்க கிட்டயிருந்து எதிர்பார்க்கலைன்னு பல முறைகள் சொல்லிப் பார்த்தோம். ஆனா நீங்க கேட்கலை. எங்க பெண்ணுக்கு நாங்க என்ன செய்யணுமோ அதை செய்ய அனுமதிக்கணும். இல்லைனா எங்க மனசு புண்பட்டுப் போகும்னு நீங்க வற்புறுத்தி கேட்டதாலதான் உங்க விருப்பப்படியே செய்யுங்கனு விட்டோம் மனசேயில்லாம. நீங்க செஞ்ச எந்த சீர்செனத்தி பத்தியும் குற்றம், குறை சொல்லலை. மன நிறைவாதான் ஏத்துகிட்டோம். மத்தவங்க மாதிரியில்லை நாங்க. இந்தக் காலத்தில் பெண்கள், ஆண்களுக்கு சமமா நல்லா படிக்கிறாங்க. நல்ல வேலைக்குப் போய் கை நிறைய சம்பாதிக்கிறாங்க. ஆட்டோகூட ஓட்டுறாங்க. அப்பப்பா கிரேட். ஐயா நான் பெண்களை மதிக்கிறவன்" என்றவர் சற்று நிறுத்தி, ஆம் ஐ போரிங் யூ சம்பந்தி?" என்றார்.

"நோட் அட்டால். ஆனா இப்ப என்ன சொல்ல வர்ரீங்கனு என் சிற்றறிவுக்கு எட்டலை. நாங்க ஏதாவது தெரிஞ்சோ, தெரியாமலோ தவறு செஞ்சிருந்தா எங்களை மன்னிச்சிரணும். கலியாணத்தில் உங்களைச் சேர்ந்தவங்களை எங்க பக்கத்தில் யாராவது தரக்குறைவா நடத்திட்டாங்களா?"

"நோ.. நோ.. ஏன் இப்படியெல்லாம் எதை எதையோ எண்ணி மறுக்கிறீங்க."

"நாங்க எல்லாருமே பூரண திருப்தியோடதான் இருக்கோம். நான்... நான்... மனப்பூர்வமா ஒரு கேள்வியை உங்ககிட்ட கேட்கப் போறேன். கேள்வி தவறாயிருந்தா என்னை மன்னிச்சிரணும். ஆனா அக்கேள்வியின் உள்அர்த்தம் உங்களுக்கு ஒருநாள் புரியவரும்... அதனால் தயவுபண்ணி நான் கேட்கப்போற கேள்வியைத் தப்பா எண்ணக்கூடாது."

"பரவாயில்லை சொல்லுங்க. ஏன் இவ்வளவு பீடிகை? நீங்க கேட்க நினைச்ச கேள்வியை எங்கிட்ட தாராளமா கேட்கலாம்"

"குட். உங்களுக்கு உங்க ஓபிசில் ஓய்வூதியம் உண்டா?"

"கிடையாது"

"அப்ப ரிடையர்ட்மெண்டுக்குப் பிறகு நீங்களும் சம்பந்தியம்மாவும் எப்படி காலத்தை ஓட்டப் போறீங்க?" அவர் இப்படியொரு கேள்வியைக் கேட்டதும் அப்படியே நிலைகுலைந்து போனேன்.

சே... என்ன மனிதர் இவர். பிள்ளையைப் பெற்றவன். பிள்ளை கைநிறைய சம்பாதிக்கிறான். பார்த்துப் பார்த்து பிள்ளைக்கும் ஒரு கலியாணம் பண்ணியாயிற்று.

என் பெண்ணும் படித்து நல்லவேலையில் இருப்பது இவர்களுக்குப் பிளஸ் பொயிண்ட் தான்- இதனால் ஏற்பட்ட ஆணவமா?

மெதுவாய் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல இப்படியொரு கேள்வி என்னிடத்தில் அவசியமா?

எனக்கு ஓய்வூதியம் வராவிட்டால் என்ன? எனக்கு உதவி செய் என்று மகள் வீட்டிலா வந்து டேரா போடப்போகிறேன்.

நான் ஏதாவது ஏடாகூடமாய் கேட்க, அது நிச்சயம் என் பெண் வாழ்க்கையைப் பாதித்துவிடக் கூடாது.

கடவுளே இவர்களை மன்னியுங்கள். அதாவது இவர்கள் அறியாமல் செய்த பிழைகளை மன்னித்தருள்க... அதனால் மௌனம் காத்தேன். வேறு என்ன செய்வது?

அவர்களை அக்கு வேறு, ஆணிவேறாக பிய்த்திருப்பேன்.

எங்களால் முடியாத அளவுக்குப் போகும் காலகட்டத்தில் ஏதாவதொரு முதியோர் காப்பகமா கிடைக்காமல் போய்விடும்.

அப்போதும் நிச்சயமா பெண்ணைக் கொடுத்தவன் வீட்டில் வந்து ஒண்டிக்கொள்ளமாட்டோம்... மனம் இடங்கொடுக்காது.

இருந்தாலும் மனம் அமைதியின்றி தவித்தது.

ஆனால் காலம் போகும்... வார்த்தைகள் நிற்கும் என்பது முதுமொழி... அது மட்டுமா? பேசாத வார்த்தைக்கு நீ எசமான் என்றொரு கருத்தும் உண்டு...

கடவுளே எங்களை இப்படி நிர்க்கதியாய் படைத்தாய்?

படைத்தது உன்குற்றமல்லதான்.

நாங்கள் எங்கள் ஏழ்மையை வெளிச்சம்போட்டு காட்ட விரும்பவில்லை.

நாட்டில் எங்களைப்போன்றவர்கள் ஏராளம்... ஏராளம்...

ஒரு பெண்ணைக் கரையேற்றிடவே அரும்பாடு பட்டேனே, அதுவே 50, 60களில் எப்படியெல்லாம் முன்னோர் அல்லற்பட்டிருப்பார்கள் என்ற எண்ண ஓட்டம் என் மனதில் வந்துபோயிற்று.

"என்ன சம்மந்தி... யுஸீம்டு பி பெர்டர்ப்ட்" என்றார். அவர் கேள்வியின் தாக்கம் புரியாமல்...

நான் அப்போதும் பதில் சொல்லாமல் மழுப்பினேன்.

"விடுங்க... விடுங்க சம்பந்தி... திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணைம்பாங்க" என்று மேலும் சொல்லி மறுபடியும் என் மனப்புண்ணைக் கிளறிவிட்டார்.

கல்லினுள் தேரைக்கும்,கருப்பை அண்டத்துயிர்க்கும் படியளக்கிறவன் அந்தப் பரம்பொருள் இல்லையா" என்றேன் என் மனவருத்தத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமல்.

"ஆமாமாம்.. சரியாச்சொன்னீங்க. விடுங்க. பெத்த பசங்க முதுமை காலத்தில் பெற்றவர்களைக் கவனிக்காட்டி என்ன... எத்தனை, எத்தனை முதியோர் இல்லங்கள் பல்கிப்பெருகிக் கிடக்குது இன்னைக்கு. இது ஏதாவதொன்றில் அடைக்கலம் கிடைக்காமலா போயிடும் நம்மைப்போல் உள்ளவங்களுக்கு" என்றார்.

மிக மிக சிரமப்பட்டு பதிலே பேசாமல் அமர்ந்தேன் அங்கு.

பிறகும் தவிர்க்க இயலாத சந்தர்ப்பங்களில் மட்டுமே சம்மந்தி வீட்டுக்குச் சென்று பெண், மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டு ஒரு சில நொடிகளில் திரும்பிவிடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தேன். காலப்போக்கில் ஒரு நாள் திடீர் என்று உடல்நிலை சரியில்லாமல் போயிற்று எனக்கும் என் மனைவிக்கும். உதவிக்கும் ஆள் இல்லை.

பக்கத்து வீட்டு மனிதர்கள் உதவியுடன் ஒரு முதியோர் இல்லத்தில் இடம் கிடைத்தது.

காலத்தை அங்கேயே கழித்து விடுவதுதான் சாலச்சிறந்தது என்று தோன்றவே, அந்த முதியோர் இல்லம் செல்லத் தயாரானோம். எங்களது சொற்ப சாமான் செட்டுகள் எல்லாம் எடுத்துக்கொண்டு, போனிலேயே மகள், மருமகனுக்கு விபரம் சொன்னேன். அவர்களும் ஏன் இப்படியொரு முடிவு என்று எங்களைக் கேட்கவில்லை. ஊரிலும் கேட்கவேயில்லை.

ஒரு சுபயோக, சுபதினத்தில் முதியோர் இல்லத்து வாயிற் கதவைத் திறந்துகொண்டு எங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்துக்குப்போனால் அங்கு "வெல்கம் சம்பந்தி என்னைக்காவது ஒருநாள் இதுபோல இடத்துக்கு வருவீங்கனு நினைச்சேன். ஆனா இதே இல்லத்துக்கு நீங்களும் வருவீங்கனு நினைக்கல" என்றவர் குலுங்கி, குலுங்கி அழத்தொடங்கினார்.

பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னார். "நாம் பெற்ற பிள்ளையோ, பெண்ணையோ குற்றம் குறை சொல்லமுடியாது. அவசரமான உலகம்.. இதில் வயசானவங்களை வீட்டில் வச்சு பராமரிக்கணும்னு நாம் நினைக்கக்கூடாது.

யதார்த்தம் புரிஞ்சு, சின்னஞ் சிறிசுகளுக்கு இடம் கொடுத்துட்டு நாம் விலகிடணும்.. அவங்க நல்லாயிருக்கணும்னு மட்டும் பிரார்த்தனை பண்ணுவோம் என்ன" என்றார் உலகம் போகும் போக்கைப் புரிந்துகொண்டவர் போல.




# மனைவி கணவரிடம் ஒருபோதும் சொல்லக்கூடாத இரகசியங்கள்



உண்மை நல்லதுதான் செய்யும். ஆனால் திருமணமான பெண்கள், தங்கள் வாழ்க்கையில் நடந்த அனைத்து உண்மைகளையும் கணவ ரிடம் கூறினால், அது வாழ்க்கைக்கு ஆபத்தாகிவிடும். அதனால் பெண்கள் தங்கள் பழைய உண்மைகளை இரகசியமாக வைத்துக் கொள்வதுதான் நல்லது.

'கணவன் - மனைவிக்கு இடையே எந்த இரகசியமும் இருக்கக் கூடாது' என்ற தார்மீக வரம்பினை திருமணத்திற்கு பின்புதான் உருவாக்கிக் கொள்ளவேண்டும். கணவரிடம் சொல்லக்கூடாத இரகசியங்கள் என்னென்ன?

இளம் பருவக் காதல் என்பது இப்போது சகஜமாகிவிட்டது. அது பலநேரங்களில் அறியாப் பருவத்து தவறுகளாகவும் மாறிவிடுகிறது. அவைகளால் ஏற்பட்ட விளைவுகள் எதுவும் நிகழ்காலத்தை பாதிக்காமல் இருக்கவேண்டும். பெண்கள், கணவரிடம் மனந்திறந்து பேசுவதாக நினைத்துக் கொண்டு கடந்த கால கசப்புகளை எல்லாம் சொல்லிவிடக்கூடாது. அவற்றை சொல்லும்போது கணவர் மனதில் 'இது மட்டும்தானா? இதுக்கு மேலும் இருக்குமா?' என்ற கேள்விகள் மட்டுமல்ல, கற்பனைகள் நிறைந்த இன்னும் ஏராளமான கேள்விகளும் அவர் மனதில் முளைக்கத் தொடங்கிவிடும்.

ஒருவேளை பின்னால் அந்த உண்மைகள் தெரிந்துவிட்டால், 'ஏன் இதை என்னிடம் முதலிலே சொல்லவில்லை என்று கேட்பாரே! அதற்கு என்ன பதில் சொல்வது?' என்ற கோணத்தில் இப்போதே சிந்திக்காதீர்கள். எல்லா ஆண்களையும், மண வாழ்க்கை தொடங்கிவிட்ட சில காலத்திலே மனைவி களால் புரிந்துகொள்ள முடியும். அப்படி புரிந்துகொண்ட பிறகு அந்த சூழ்நிலைக்கு ஏற்ப, இரகசியங்களை சொல்லலாமா? வேண்டாமா? என்று முடிவு செய்துகொள்ளலாம்.

அவசரப்பட்டு எதையும் சொல்லிவிட வேண்டாம் என்பது தான் இதன் கருத்து. ஆரம்பத்தில் ஆண்கள் அனைவருமே மனைவிகளிடத்தில் ஏராளமான எதிர் பார்ப்புகளை வைத்திருக்கிறார்கள். அவை அனைத்தும் மிக இனிமையான-தாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க் கிறார்கள். கசப்புகளை அப்போது சொன்னால், தனது எதிர்பார்ப்புகள் அனைத்தும் சிதைந்து போய்விட்டதாக கணவர் கருதிவிடக் கூடும். அதனால் இருவருக்கும் இடையே பிணைப்பு ஏற்படுவதற்கு பதில், நெருடல் உருவாகிவிடும்.

அழகு, படிப்பு, பணம் சார்ந்த கர்வம் பெண்களிடமும் உண்டு. 'கல்லூரியிலே நான்தான் அழகு. அதனால் மாணவர் வட்டம் எப்போதும் என்னைத்தான் சுற்றிக்கொண்டிருக்கும்' என்பதுபோல் கணவரிடம் கதைவிட்டுவிடக்கூடாது. 'அத்தனை பேர் சுற்றியதால், இவள் அவர்களில் யாராவது ஒருவரிடமாவது காதல்வசப்பட்டிருக்கத்தானே செய்வாள்!' என்ற சிந்தனை அவருக்கு வந்துவிடும். 'ஒருவேளை இனியும் அப்படி யாராவது சுற்றினால் என்ன செய்வது?' என்ற கவலையும் உருவாகிவிடும்.

அதுபோல் உடன் படித்தவர்கள், உறவுக்கார இளைஞர்களை கணவ ரிடம் புகழ்ந்தும் பேசிவிடக்கூடாது. அது எப்போதாவது ஒரு கட்டத்தில் கணவருக்கு எரிச்சலை உண்டு பண்ணும். நேரடியாக அது வெளிப்படாவிட்டாலும் மறைமுக மாகவாவது வெடிக்கும். கணவரது நண்பர்களிடம், கணவரை பற்றி குறை சொல்லக்கூடாது. கணவரின் நண்பர்களை தனியாக சந்திப்பதோ, அனாவசியமாக அவர்களுடன் பேசு வதோ தவிர்க்கப்படவேண்டும்.

அதை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு அந்த நபர்கள் அந்தரங்கமாக பழக முயற்சிக்கக்கூடும். பெற்றோரின் குடும்பத்தில் சில இரகசியங்கள் இருக்கலாம். அவை இரகசியமாகவே இருந்துவிட்டு போகட்டும். அதை ஒருபோதும் வெளிப்படுத்தவோ, நியாயம் கற்பிக்கவோ முன்வராதீர்கள். வேலைபார்க்கும் பெண்கள் தங்கள் அலுவலக இரகசியங்களையும் கணவ ரிடம் வெளிப்படுத்தக்கூடாது.

மற்றவருக்கு கிடைக்கவிருக்கும் பதவி உயர்வு, மாற்றல், சம்பள உயர்வு, புதிய நியமனம், கம்பெனி ஒப்பந்தங்கள், டெண்டர் போன்ற விஷயங்களை ஆழமாக பகிர்ந்து கொள்ளவேண்டியதில்லை. அவை எல்லாம் கணவருக்கு தெரிந்து அவர் மூலம் வேறு ஒருவருக்கு தெரிந்து பின்னர் உங்கள் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு செய்தி வரும்போது அலுவலகத்தில் உங்கள் மரியாதை குறையும்.

---

**வாரமொரு சிந்தனை**

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்



# இலட்சிய வாழ்வு

இலட்சியம் என்பது பெரும் பாலும் நாட்டையும் மக்கட் சமுதாயத்தையும் மையமாகக் கொண்டுதான் அமையும். மற்ற உயர்குலத்தை மையமாகக் கொண்டு இலட்சியம் தோன்றலாம். மொழி, சமய அடிப்படையிலும் இலட்சியம் தோன்றலாம். எடுத்துக்கொண்ட இலட்சியத்தை அடைவதற் கேற்றவாறு தன்னுடைய ஆற்றலை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இலட்சியம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. கடந்தகாலத் தோல்விகளையும் துன்பங்களையும் மறத்தல், தன் முன்னே நிற்பன வற்றை நாடுதல், நிகழ்காலத்தை மதித்தல், எதிர்காலத்தை நோக்கி விரைந்து பணிசெய்தல் முதலிய குணங்கள் வேண்டும்.

பழக்கம், குணத்திற்கு அடிப்படை. குணம், இலட்சியத்தை இனம் காட்டும். எடுத்துக்கொண்ட இலட்சியத்திற்குரிய பணிகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்க! எடுத்துக்கொண்ட இலட்சியத்திற் காகப் போராடு! உயிரைக் கொடுத்துப் போராடு.

வெறும் சோற்றுப் பிண்டமாக நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட இலட்சியத்துடன் சில ஆண்டுகள் வாழ்ந்தாலேபோதும். வரலாற்றில் செய்திகளில் இடம்பெறுவது இலட்சியம் அல்ல. நீயே நாட்டின் வரலாற்றை உருவாக்கவேண்டும். அதுவே, இலட்சியம் நிறைந்த வாழ்க்கை! தெளிவான இலட்சியத்தை தேர்வுசெய்து கொள்க! அந்த இலட்சியத்திற்காகப் போராடுக! இடையூறின்றிப் போராடுங்கள்! இலட்சியமே வாழ்வென வாழ்க! வாழ்க்கை, முன்னர் கூறியபடி அறிவுசார்ந்தது. அறிவியல்சார்ந்தது. புலன்கள் அனைத்தும் அறிவை அறியவும், அறிந்த அறிவை உணர்த்தவும் கூடியன. பொறிகள் நுகர்வுச் சாதனங்கள் மட்டுமல்ல. அறிவு அடிப்படையில் செயற்படும் தொழிற்கருவிகளுமாகும். இலட்சியத்தையும், இலட்சியத்தின் அடிப்படையிலான செயலையும் ஆய்வுசெய்து இலட்சியத்தைத் தேர்வு செய்துகொள்வதே அறிவியல் பாங்கு. அன்பாக இருப்பது என்பது ஒரு குணம். பண்பு இந்த அன்புகூட சுயநலத்தின் காரணமாக அமையலாம். அத்தகைய அன்புக்குக் கூட இடைமுறிவுகள் உண்டு. ஆனால், அன்பே இலட்சிய அடிப்படையிலிருப்பின் அந்த அன்பு வளரும். பிறைநிலாப் போல வளரும். எல்லா இடர்பாடுகளையும் கடந்து வளரும். பிரிவதற்குரிய காரணங்கள் தோன்றினாலும் அக்காரணங்கள் புறக்கணிக்கப் படும். மானம் கூடப் பிறந்ததுதான். அதுவே இலட்சிய அன்பு. இத்தகைய அன்புடையோர் சிலபொழுது மரணத்திலும்கூட ஒன்றாகிவிடுவர். இந்த அன்பு, இலட்சிய அன்பு. இங்ஙனம் அன்பு இலட்சிய அன்பாக மாறவேண்டுமானால், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் இயல்பு தேவை. அறிவறிந்த நட்பும் உறவுமே இலட்சிய அன்பாக, உறவாகமுடியும். வளரமுடியும்.


எடுத்துக்கொண்ட இலட்சியத்தில் நிலையாக நின்று உழைத்திட தளர்ச்சியில்லாமல் அந்த திசையில் செல்ல அறிவு வேண்டும். இலட்சியத்தின் வழியில் நடைபெறும் பணிகளை செய்யும் காரியங்களை அறிவியல் பார்வையுடன் ஆய்வு செய்து, குறைகளை நீக்கச்செய்து கொண்டே போகவேண்டும். இலட்சிய வாழ்க்கையை விரும்புபவர்கள் தங்களுடைய சூழ்நிலைகளின் காரணமாகப் பலவீனம் அடைந்து விடக்கூடாது. சூழ்நிலைகளையும் சரிப்படுத்திக்கொண்டு அவற்றைக் கருவிகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். அறிவியல் என்பது எதையும் ஆராய்ந்து தெளிந்து முடிவுகளை எடுப்பது, விருப்பங்களின்படியும் ஆசைகளின் அடிப்படையிலும் உணர்ச்சிகளின் நிலையிலும் முடிவு எடுத்தல் கூடாது.

வாழ்வதற்கும், பலர் கூடி வாழ்வதற்கும், இந்நாடு பயனுறத் தக்கவகையில் இலட்சியத்தை தேர்வு செய்யவும், தேர்வுசெய்த இலட்சியத்தை அடையும் முயற்சி களுக்கும் அறிவு தேவை. அறிவியல் பார்வை தேவை. அறிவியல் சார்ந்த முடிவுகளும் செயல்களுமே வெற்றியைத் தரும். இலட்சியத்தைத் தேர்வுசெய்க, அறிவியல் முறையில் ஆய்வுசெய்து இலட்சியத்தைத் தேர்வு செய்க. அந்த இலட்சியத்தை அடையும் முயற்சியுடன் வாழ்க!!

(தொடரும்)




# பாப்பா முரசு



## சிறுவர் கதை

### வாரம் ஒரு திருக்குறள்

#### உட்பகை



**"உறல்முறையான் உட்பகை தோன்றின்**
**இறல்முறையான் ஏதம் பலவும் தரும்."**

உறவுமுறையோடு உட்பகை உண்டாகு மானால், அது ஒருவனுக்கு இறக்கும்வகை யான துன்பம் பலவற்றையும் கொடுக்கும்.

குறள் : 885

# புத்திசாலி

அக்பரின் அரண்மனை மணி ஓசையை யாரோ ஒருவர் ஒலித்துக் கொண்டிருந்தார். வந்தருப்பது பெரும் புலவர். அக்பர் புலவரை சகல மரியாதைகளுடன் உபசரித்தார்.

பீரபாலை பற்றி கேள்விப்பட்ட புலவர் பீரபாலை சோதிக்க விரும்பினார். இதனை அக்பரும் ஏற்றார்.



பீரபால் அரசைவக்குள் வந்தார். புலவர் பீரபாலிடம் நீ என்ன அவ்வளவு புத்திசாலியா, அதையும் பார்ப்போம். நான் விடுக்கும் சவாலில் நீ தோற்றால் அரசவையை விட்டே வெளியேறிட வேண்டும். உன் பதவியும் பறிக்கப்படும் என்றார். சவாலை பீரபாலும் ஏற்றார்.

சென்ற முறை கோட்டை தொடாமலே அருகில் கோடு வரைந்து வெற்றி கொண்டாய்.

ஆனால், இந்த முறை நான் வரையும் கோட்டை தொடாமலே அந்த கோட்டின் சுவற்றை தொடாமலே நான் வரையும் கோட்டை நீ பெரிதாக்கவேண்டும். சிறிதாக்கவும் வேண்டும் என்றார். பீரபாலும் சவாலை ஏற்றார்.

அதன்படி புலவர் சுவற்றில் ஒரு சிறிய கோட்டை வரைந்தார்.


சிறிதுநேரம் யோசித்த பீரபால், அரசே இரவுவரை காத்திருக்கவேண்டும், பிறகு நான் சிறிதாக்குகிறேன் என்றார். பீரபாலும் ஏற்றார்.

இரவான பீரபால் அரண்மனையில் எறியும் வெளிச்சங்களை அணைக்கச்சொன்னார். வெளிச்சமும் அனைக்கப்பட்டது. அரண்மனை எங்கும் காரிருள் ஒரு தீப்பந்தம் எடுத்துவரச் சொன்னார் தீப்பந்தமும் எடுத்து வரப்பட்டது.

பீரபால் தீப்பந்தத்தை கோட்டின் அருகில் கொண்டுவர வர கோட்டின் நிழல் மிகப் பெரிதானது. கோட்டின் நிழல் முன்கோடு மிகச் சிறிது போன்றானது. அதேபோல் பீரபால் தீப்பந்தத்தை கோட்டைவிட்டு விளக்கக்கோட்டின் நிழல் மிகச் சிறிதானது. சின்ன நிழல் முன்கோடு பெரிது போன்றானது.

புலவர் பீரபாலின் அறிவினை கண்டு வியந்து பாராட்டினார்.

# சீனப்பெருஞ்சுவர்!



உலக அதிசயங்களில் ஒன்று சீனப்பெருஞ்சுவர்! உண்மையில் இச்சுவற்றின் சில பகுதிகள் மட்டுமே 700 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இப்பெருஞ்சுவர் நான்கு முறை தொடர்ச்சியாகக் கட்டப்பட்டது. முதன் முறையாக கட்ட ஆரம்பித்தது 2200ஆண்டுகளுக்கு முன்!

கி.மு. 208 க்வின் சின் ஹுவாங் என்னும் அரசன் சீனாவை ஆண்டான். இவன்தான் முதன் முறையாக பெருஞ்சுவரை எழுப்பினான்.

மங்கோலியர் சீனாவைக் கைப்பற்றி ஆட்சியும் செய்தார்கள். இதைத் தடுக்கவே வடக்கு எல்லை முழுவதும் சுவர் கட்டப்பட்டது.

சின் மன்னன் கட்டியபோது சுவரின் நீளம் 5,600 கி.மீ. கிழக்கிலிருந்து மேற்காக இச்சுவர் கட்டப்பட்டது. கிழக்கே "யாலு" ஆற்றங்கரையில் தொடங்கி மேற்கே சியாயு கணவாயில் முடிந்தது. மலை சாதி மக்களும், மங்கோலியர்களும் சீனாவிற்குள் குதிரைகளில் வந்தனர். எனவே குதிரைகள் தாண்ட முடியாதபடி சுவர் உயரமாகவும் அகலமாகவும் கட்டப்பட்டது.

**பெரிய கல்லறை!**

சுவர் கட்டும் வேலையில் 3 இலட்சம் அடிமைகள் பயன்படுத்தப்பட்டார்கள். பசி, பட்டினியால் பல்லாயிரம் மக்கள் மடிந்தார்கள்! அவர்கள் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். இதனால் இப்பெருஞ்சுவருக்கு "உலகிலேயே பெரிய கல்லறை" என்னும் பட்டப்பெயர் ஏற்பட்டது. கால வெள்ளத்தில் சுவர் முழுவதும் இடிந்து விழுந்து சிதைந்தது.

கி.பி. முதல் நூற்றாண்டில் "கான்" பரம்பரை மன்னன் மீண்டும் சுவரைக் கட்டினான். இந்தச் சுவரும் பல இடங்களில் இடிந்து விழுந்தது. கிராம மக்கள் சுவரை இடித்துக் கல், மரங்களை எடுத்துப்போய் வீடு கட்டப் பயன்படுத்தினார்கள். இதனால் பாதுகாப்பு குறைந்தது.

கி.பி. 1138 முதல் 1195 வரை ஐந்து பரம்பரையினர் சீனாவை ஆண்டார்கள். இவர்கள் மீண்டும் பெருஞ்சுவரைக் கட்டினர். அப்படியும் நாட்டைப் பாதுகாக்க முடியவில்லை. மங்கோலிய மன்னன் ஒருவன் கோட்டையில் காவலுக்கு இருந்த தளபதிக்குக் கைக்கூலி கொடுத்து, படையுடன் உள்ளே நுழைந்து சீனாவையும் பிடித்துக்கொண்டான்.

1368 முதல் 1620 வரை "மிங்" பரம்பரை சீனாவை ஆண்டது. 1368இல் பட்டத்துக்கு வந்த மிங் மன்னன் 4ஆவது முறையாகப் பெருஞ்சுவரைக் கட்டினான். மங்கோலியரை வீழ்த்திவிட்டு ஆட்சிக்கு வந்தவன் இவன். எனவே மங்கோலியர்கள் மீண்டும் படையெடுக்க முடியாதபடி சுவரை வலுவாகக் கட்டினான்.

(தொடரும்...)

# அதிரடி ஐயாத்துரை



* வடக்கு பெரிய அவையின்ர 'செயலாளராய், இருந்த ஒரு 'அம்புலி மாமா' அவுட். அவற்ர பாஸ்போர்ட்டும் கறுப்புப் பட்டியலில சேர்க்கப்பட்டிருக்காம். அண்ண தன்ர 'டாக்குத்தர்' மனிசியோட 'ஐரோப்பாப் பக்கம்' ஒதுங்குவம் எண்டு பார்த்தா உவங்கள் தப்ப விடமாட்டாங்கள் போல இருக்கு. எல்லாம் 'நெல்சிப்'ன்ர புண்ணியம். இத கேள்விப்பட்ட விவசாய அமைச்சின்ர 'அம்புலிமாமா' திரும்ப 'கமம்' செய்வம் எண்டு யோசிக்கிறாராம். பெரும்பாலும் இந்த அம்புலிமாமாவும் 'கிளின் போல்ட்' எண்டு பரவலாக் கதை வருகுதுங்கோ.

* வடக்கின் 'விக்கின விநாயகன்' விரும்பியோ, விரும்பாமலோ அலரிமாளிகையில தஞ்சம் புகுந்திட்டார். 'சிங்கத்தார்' வைச்ச 'செக்கில' நல்லா மாட்டுப்பட்டுட்டார். இதில் பெரிய பகிடி என்னெண்டா இவற்ர மாகாண 'மந்திரியள் பட்டாளம்' தான் முந்தி, நீ முந்தி எண்டு 'சிங்கத்தாரக்' கட்டித்தழுவ துடிச்சவையாம். 'சிங்கத்தார்' லேசுப்பட்டவரோ? 'ரெண்டெழுத்துத் தலைவரையே' ஒரு ஆட்டு ஆட்டினவர். 'சிங்கத்தார்' 'ஜே.ஆர்' ன்ர மருமகனெல்லோ. நரிமூளையே மூளை. தப்புமா வடமாகாண சபை.?

* தேசியக் கொடி ஏற்றமாட்டன் எண்டு 'கலாபமான எம்.பி' நடனமாட உதை கொழும்பின்ர 'வீரமான எம்.பி' கையிலெடுத்திட்டார் பாருங்கோ! பார்ளிமெண்டில உதை வைச்சு 'வீரமான எம்.பி' மனிசியப் படாதபாடு படுத்திப்போட்டார். உதுக்குள்ள 'யானைகள்' சிலதும் மனிசியை உழக்கினதாத் தகவல். வாயை சரியா வைச்சிருக்கோணும் கண்டியளோ! இல்லாட்டி வாய் நாறும் பாருங்கோ!

* வடக்கின்ர பெரிய அவையின்ர ஒவ்வொரு கூட்டமும் எனி அதிரடிக் காட்சிகளைக் கொண்டிருக்கும் எண்டு கைதடிப் பக்கமாக இருந்து கதைவருதுங்க. கடந்தகூட்டத்தில முறையா அடிவாங்கினவர் 'ஐந்துகரத்தார்' அடுத்தமுறை பெரும்பாலும் 'குடிகுலராசா' அடிவாங்குவார் எண்டு பரவலாக்கதை வருகுது. இந்தப் படத்தின்ர கதை, திரைக்கதை வசனம், பாடல்கள் எல்லாம் யார் எண்டு தெரியும்தானே?

* வடக்கின்ர பழைய 'அதிகாரம்' ஓய்வெடுக்கப் போறன் எண்டு 'எஸ்கேப்' புதிய 'அதிகாரம்' வெற்றிலைக் கட்சியின்ர ஒரு பெரிய புள்ளி. மனுசன் ஆசிரியராக இருந்து இப்ப 'அதிகாரத்துக்கு' படிப்படியா வந்திருக்கு. பதவியேற்றவுடனேயே '60:40' கதை கதைக்க வெளிக்கிட்டுட்டுது. எனி வடக்கிலையும் 'அதிகாரம்' தன்ர விளையாட்டக் காட்டப் போகுதோ? உதைக் கேள்விப்பட்ட நம்ம 'காரியதரிசிமார்' எல்லாரும் அடிக்கடி 'ரொய்லட்' பக்கமா போகவேண்டியிருக்காம்.

*வீணைக்கட்சி 'தேவர்' கொண்டந்த பிரேரணை ஒண்ட 'கூத்தாடிகள்' வழிமொழிந்தவையாம். ஓகோ இதுதானா 'இணக்க அரசியல்'. தமிழரின்ர தீர்வுத்திட்டத்தோடையும் 'தேவரோட' சேர்ந்து போனா 'விடிவுகாலம்' பிறக்கும் பாருங்கோ! உவங்களாவது சேருவதாவது. உவங்கள் 'மந்திரிமார' 'வால்பிடிச்சு தந்திரமா மந்திரம்' போட்டு தங்கடை காரியத்தை முடிப்பாங்கள். என்னெண்டு கேட்கிறியளோ? 'பெற்ரோல் செட்டும், பாரும்தான்'.

* வடக்கில எத்தனை 'பனங்காட்டு நரியள்' கண்டியளோ! 'விக்கினவிநாயகன்' தானொரு பனங்காட்டு நரி எண்டுறார்.... 'விவசாயி ஐந்து கரத்தார்' தானொரு பனங்காட்டு நரியெண்டுறார். அப்ப வடக்கு ஆளும் கட்சி முழுக்க 'பனங்காட்டு நரிக்கட்சியோ?' இதுக்குள்ள நரிகளுக்கே நரிகாட்ட வெளிக்கிட்டுட்டார். நம்மட 'மொனிற்ரர் ஞானத்தார்'. வடமாகாண சபை உருப்படுமா கண்டியளோ!

* கொழும்பில ஆட்டம் ஆரம்பம். தேங்காய் உடைப்பு, பூசை, செய்வினை, சூனியம், தாயத்து, மந்திரம், மாயம், மருந்து எண்டு 'குரக்கன் சால்வை' குறூப் முதல் 'யானை' குறூப் வரை படு பிஸி. 'சிங்கத்தார்' வேற குருவாயூர் பக்கமாப் போய் மந்திரித்த தாயத்துக்களைக் கட்டிக்கொண்டு நாட்டில குதிச்சிட்டார். கன 'மட்ச்சுகள்' காத்திருக்கு. 'குரக்கன் சால்வை எதிர் திரியர்'. 'திரியர் எதிர் சிங்கத்தார்'. 'மார்ஷல் எதிர் குரக்கன் சால்வை' உது எங்க போய் முடியப்போகுதோ தெரியாது. மகாசனங்களே உது உங்களுக்குத் தேவையா?


# அரசியல் சீர்திருத்த ஆலோசனைக்கு விழிப்பும் கருத்தும் ஆரம்பம்

நல்லாட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு பொதுமக்களின் கருத்துக்களை வழங்கும்வகையில் பொதுமக்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகளும் கருத்துப்பெறும் நடவடிக்கைகளும் நாடுபூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாற்றுக்கொள்கைளுக்கான நிலையம், அரசியல் அமைப்பு மாற்றத்திற்கான பிரஜைகளின் முயற்சி அமைப்பு உட்பட பல்வேறு தன்னார்வத் தொண்டர் மற்றும் சமூக சேவை அமைப்புக்களும் சேர்ந்து பொதுமக்களை அறிவுறுத்தும் விழிப்பூட்டல் கூட்டங்களை நடத்தி வருகின்றன.

இதேவேளை உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்துடன் 20 உறுப்பினர்களைக் கொண்டதாக மற்றொரு குழுவும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுத்துமூல



சமர்ப்பணங்களைபெறுவது அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்மீதான பொதுமக்கள் யோசனைக்குழுவின் செயற்பாடாகும்.

பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து இந்த குழு அமைச்சரவைக்கு அறிக்கையொன்றினையும், சிபார்சுகளையும் தயாரித்து அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்மீதான அமைச்சரவை உபகுழுவிற்கு சமர்ப்பிக்கும்.

புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து இதுவரை இரண்டாயிரம் யோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களின் யோசனைகளை கேட்டறியும் குழு தெரிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு திருத்தம் ஒன்றினை உருவாக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதுதொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளும் நோக்கில் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தலைமையிலான குழுவினர் நாடளாவியரீதியில் பொதுமக்கள் சந்திப்புகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், "வெவ்வேறு மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட பொதுமக்கள் சந்திப்புகளின்போதும், தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும் இதுதொடர்பிலான யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மின்னஞ்சல் ஊடாக மாத்திரம் 600 யோசனைகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் தங்களின் நிரந்தர பிரச்சினைகளுக்கு தீர்வுவழங்கும் விடயங்கள் குறித்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன." என்று தெரிவித்தார்.

அதேவேளை, நிகழ்கால அரசியல் நிலைமைகள் குறித்து மக்கள் மத்தியில் காணப்படும் வெறுப்புணர்வும் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ள கருத்துகள் மற்றும் யோசனைகள் ஊடாக தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை தேசிய கொடியில் காணப்படும் வாளேந்திய சிங்கமானது, வன்முறையின் அடையாளமாக கருதப்படுவதாக குறிப்பிட்டு அதனை நீக்குமாறு மகளிர் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மன்னாரில் நடைபெற்ற புதிய அரசியல் சாசனம் தொடர்பான மக்கள் கருத்தறியும் கூட்டத்தின்போது இந்த கருத்து முன்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தேசியக் கொடியிலுள்ள சிங்கத்தின் படம் ஒரு இனத்தை மட்டுமே பிரதிபலிப்பதாகவும் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசியக்கொடியின் வடிவமைப்பு இருக்கவேண்டும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பெண்கள் நலன்கள் மற்றும் மேம்பாட்டுக்கென சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் செயற்படக்கூடிய ஆணைக் குழுவொன்றை ஏற்படுத்துவதற்கு புதிய அரசியல் சாசனத்தில் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க காத்திரமான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு திருத்தம் ஒன்றினை உருவாக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்கள் இது விடயமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0112437676, 0773868563 என்ற தொலைபேசி இலக்கங்களுடனும், 0112328780 என்ற தொலைநகல் இலக்கத்திலும் constitutionalreforms@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் www.yourconstitution.lk என்ற இணையத்தளம்மூலமும், தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தவிசாளர், அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழுச் செயலகம், விசும்பாய, ஸ்ரேபிள்ஸ் வீதி, கொழும்பு -02 என்ற முகவரியுடனும் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், இந்த அமர்வுகளில் பொதுமக்கள் எவரும் பங்குபற்றி தங்கள் யோசனைகளை முன்வைக்கலாம்.

முக்கியமாக தங்களது யோசனைகளை எழுத்துமூலமாக வழங்குவது விரும்பத்தக்கது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கிழித்தெறிந்தவரிடமே ஒட்டும் செயற்பாடுகள் கையளிப்பு

சந்திரிகா ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட தீர்வுத்திட்டத்தினை கிழித்தெறிந்த ரணில் விக்ரமசிங்ஹவிடம் புதிய தீர்வுத்திட்டம் உருவாக்கும் செயற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதே விதியின் நடவடிக்கையென மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி லயனல் குருகே தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு பொதுமக்களின் கருத்துக்களை வழங்கும்வகையில் பொதுமக்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகளை மட்டக்களப்பில் ஆரம்பித்துவைத்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில புத்திஜீவிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி லயனல் குருகே மற்றும் அரசியல் அறிஞர்களும் இதில் கலந்துகொள்கின்றனர். இங்கு தொடர்ந்து உரையாற்றிய லயனல் குருகே, இந்த நாடு சுதந்திரம்பெற்றதன் பின்னர் மூன்று அரசியலமைப்புகளின்கீழ் ஆட்சிகள் நடைபெற்றுள்ளன. ஆனால் அவற்றில் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை.

சிறுபான்மை மக்களுக்கு சிறந்த அரசியலமைப்பாக சோல்பரி ஆட்சியமைப்பினை கொள்ளமுடியும். சிறுபான்மை மக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை இல்லாமல்செய்யப்பட்டன. 1956ஆம் ஆண்டு சிங்கள மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழ்பேசும் சமூகம் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியது. இதுதொடர்பில் அன்று பிரித்தானியாவில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

அந்த வழக்கு வெற்றி பெற்றிருந்தால் இன்று இந்த நாட்டில் இன முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டிருக்காது.

1972ஆம் ஆண்டு இந்த நாட்டில் பெடரல் கட்சியின் தலைமைத்துவத்துடன் அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அது சிங்கள அரசியலமைப்பாகவே வடிவமைக்கப்பட்டிருந்தது. அந்த அரசியலமைப்பில் மதம் மற்றும் மொழி தொடர்பான விடயங்களில் ஏனைய இனத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது. அதன் பாதிப்பினை நாங்கள் இன்றுவரை அனுபவித்து வருகின்றோம்.

அதன் பின்னர் 1978ஆம்ஆண்டு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. 6ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டு சிறுபான்மை சமூகத்தினை அப்புறப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேபோன்று இலங்கை-இந்திய தீர்வுத் திட்டம்மூலம் இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு சிறந்த தீர்வு ஒன்றினை முன்வைக்கப்பட்டது. அதனை சில தமிழ் தலைவர்களும் பேரினவாதிகளும் எதிர்த்தனர். ஐ.தே. கட்சியின் ஒரு சாராரும் எதிர்த்தனர்.

எனினும் அந்த தீர்வுத்திட்டம் மூலம் மாகாணசபை முறைமையொன்று இந்த நாட்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன்மூலம் இன்று மாகாணசபை பற்றி கதைக்கப்படுகின்றது.

சந்திரிகா ஆட்சிக்காலத்தில் சிறந்த தீர்வுத்திட்டம் கொண்டுவரப்பட்ட நிலையில் அவை மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ரணில் விக்ரமசிங்ஹவின் தலைமையிலான ஐ.தே. கட்சி ஆகியோரால் கிழித்து தீயிட்டு கொழுத்தப்பட்டது.

அன்று அந்த தீர்வினை கிழித்தெறிந்த ரணில் விக்கிரமசிங்ஹவே இன்று புதிய தீர்வுத்திட்டத்தினை தயாரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதே விதியின் செயற்பாடாகும்.

இன்று ஒரு தீர்வுத்திட்டம் தொடர்பாக கதைக்கப்படுகின்றது. அது

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

தொடர்பில் அனைத்து தரப்பினரின் கருத்துகளும் பெறப்படுகின்றன. இதன் மூலம் அனைத்து தரப்பினரையும் ஒன்றுபடுத்தி ஒரு சிறந்த அரசியல் தீர்வினை முன்வைக்கமுடியும்.

கடந்த காலத்தில் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக வந்தபோது தெற்கில் பல போராட்டங்கள் பேரினவாதிகளினால் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இன்று சம்பந்தர் அவர்கள் எதிர்க்கட்சி தலைவராக வந்தபோது எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை.

மாறாக சிங்கள மக்கள் வாழ்த்து தெரிவித்தனர், தற்போதைய நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இனவாதிகளின் செயற்பாடுகளுக்கு வரவேற்புகள் வழங்கப்படுவதில்லை. அதேபோன்று தமிழ்பேசும் மக்கள் மத்தியில் உள்ள இனவாதிகளின் செயற்பாடுகளையும் தமிழ்பேசும் மக்கள் புறக்கணித்துவருகின்றனர்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக மக்களின் கருத்துகளைப் பெற்று அரசியலமைப்பினை உருவாக்குவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அனைத்து இன மக்களும் வரவேற்றுள்ளனர்.



## மருத்துவம்

எவ்வளவுதான் பணம் இருந்தாலும் குணமாக்கமுடியாத நோய்கள் என்று பல இருக்கின்றன. ஆனால் பால்வினை நோய்கள் மற்றும் எச்.ஐ.வி. நோய்களை விட, கண்டாலே அருவருக்கத்தக்க வகையில் உருவத்தை கோரமாக மாற்றி விடுகின்ற சில பயங்கரமான நோய்களும் இந்த உலகில் இருக்கின்றன. அப்பப்பா, இதற்கு செத்து விடலாம் என்று எண்ண வைக்கும். எதிரிக்குக்கூட இந்த நோய் வந்துவிடக்கூடாது என்று நினைக்க வைக்கும். உலகின் சில நாடுகளில் வழங்கப்படும் விசித்திரமான இராணுவப் பயிற்சிகள். அப்பேர்பட்ட சில பயங்கரமான வினோதமான நோய்கள் பற்றி இனி காண்போம்.



# உருவத்தை மாற்றிவிடும் கொடுமையான நோய்கள்

HIV எய்ட்ஸ் மற்றும் தொழுநோய் களை கொடூரமான நோய்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றோம். அதை யும் தாண்டி சில நோய்கள் உள்ளன அவை மிகவும் கொடூரமான வகையில் மனித உருவத்தினை அருவருக்கத்தக்க வகையில் மாற்றிவிடுகின்றன.

உலகத்தில் ஆச்சரியங்களுக்கும், அபூர்வங்களுக்கும் அளவே இல்லை. பிறந்தது முதல் மரணம் அடையும் வரைக்கும் எல்லாவற்றிலும் சில ஆபூர்வங்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. மனிதர்கள் பெரும்பாலும் இறைவனிடம் வேண்டுவது, "நோயற்ற வாழ்வு, குறைவற்ற செல்வம்."

## அருவருக்கத்தக்க சில அரிய வகை நோய்கள்!



**மரமனிதன்** Tree Man, Epidemodysplasia Verruciformis

மிகவும் அரிய நோய் வகை சார்ந்தது தான் இந்த மரமனிதன் நோய். Human Papillomavirus HPV எனும் தொற்றின்மூலம் பரவக்கூடியது இந்த நோய். இந்த நோய் கழுத்து. முகம். கால், கைகள், தோள் போன்ற உடல் பாகங்கள் எல்லாம் மரம்போல உருமாற ஆரம்பித்துவிடும்.

**ஓநாய் நோய்**

Werewolf Syndrome

இந்த நோயின் தாக்கத்தினால் உடலெங்கும் அதிகமான முடிவளரும். இதில் இரண்டு வகைகள் உண்டு. ஆவை, General Hypertrichisis மற்றும் Localised Hypertrichisis.





**நியூரோபைப்ரோமடோசிஸ்** - Neurofibromatosis

இந்த நோய்க்கு பல அறிகுறிகள் இருப்பினும்கூட, சருமத்தில் ஏற்படும் மாற்றத்தை வைத்து கண்டுபிடித்துவிடலாம். இந்த நோய் தாக்கத்தினால் உடலெங்கும் அதிகமான கட்டிகள் வளரும் என்று கூறப்படுகிறது.



**காட்டேரி நோய் -**

Prophyria/Vampire Disease

ஹெமி எனப்படும் ஓர் சிவப்பு நிறமியின் அதிக உற்பத்தியால் அசாதாரணமாக ஏற்படும் நோய் தான் இந்த Prophyria. இது ஹீமோகுளோபினில் ஏற்படும் மாற்றத்தினால் ஏற்படுகிறது. இந்த நோய் சூரிய ஒளியில் வெளியே செல்லமுடியாத அளவு சரும பாதிப்புகள் தரவல்லது.

**சிங்க முக நோய்**

(Lion Face Syndrome)

மிகவும் அரிதான இந்த நோயின் தாக்கம் ஏற்பட்டால் முகத்தின் எலும்புகள் பெரிதாகிவிடும். ஏறக்குறைய சிங்கத்தின் முகம் அளவு பெரிதாக ஆகும் என்பதால் இந்த நோய்க்கு இந்த பெயர் வந்தது. கண் மற்றும் மூக்கு பகுதிகள் கூட மூடியது போன்று தான் காட்சியளிக்கும்.



**முதிராமுதுமை**

Progeria (HGPS)

பா (Paa) படத்தில் அமிதாப்பச்சனின் கதாபாத்திரத்திற்கு ஏற்படும் நோய் தான் இது. மிகவேகமாக முதிர்ச்சி அதிகரிக்கும் நோய்.



# எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய மருத்துவக் குறிப்புகள்

83. நீங்கள் நீண்டநேரமாக தண்ணீர் குடிக்காமல் இருந்தாலும்கூட சிறுநீர் மஞ்சளாக போகும்.

84. உடலில் ஏதேனும் காயம் அல்லது நகக்கீறல் போன்றவை ஏற்பட்டால், 12 மணி நேரத்துக்குள் தடுப்பு ஊசி (டி.டி.) போடவேண்டும். தடுப்பூசி காலத்தில் இருக்கும், பத்து வயது வரையுள்ள குழந்தைகள் என்றால், இந்த ஊசி தேவையில்லை.

85. மூலம், பவுத்திரம் பாதிப்பு உள்ளவர்கள் கூச்சப்படாமல் உடனே டாக்டரைப் பார்க்கவேண்டும். நார்ச்சத்துள்ள உணவை அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டும். மலச் சிக்கல் தொடர்ந்தால், இதயத்துக்கே ஆபத்தாகிவிடும்.

**நில் - கவனி - செல்!**

86. மருத்துவமனையில் நோயாளி யின் படுக்கைக்குக் கீழே, நடைபாதை என்று கிடைத்த இடங்களில் எல்லாம் அமர்ந்து சாப்பிடுவது தவறு. அது தொற்றுக்கிருமிகளை பரஸ்பரம் உள்ளே - வெளியே எடுத்துச்செல்லும் வேலையைத்தான் செய்யும்.

87. தவிர்க்கமுடியாத சூழலைத் தவிர, மற்ற சமயங்களில் குழந்தைகள் மற்றும் முதியவர்களை நோயாளியைப் பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லக் கூடாது.

88. ஹோட்டல், ஹொஸ்டல் போன்ற இடங்களில் பயன்படுத்தப்படும் தட்டு மற்றும் டம்ளர்களை சரியாக கழுவவில்லை என்றாலும், சாலட்டில் போடப்படும் பச்சைக் காய்கறிகள், பழங்களை சுத்தமான தண்ணீரில் அலசவில்லை என்றாலும் அமீபியாசிஸ் எனும் தொற்றுக்கிருமி தாக்குதல் ஏற்படும். இதனால், சாப்பிட்டதும் மலம் கழிந்துவிடும். கவனிக்காமல் விட்டால் உடல் மெலிந்து எதிர்ப்புசக்தியை முற்றிலுமாக இழக்கநேரிடும்.


89. 'போரடிக்கிறது' என அடிக்கடி கோப்பி, டீ குடிக்கக் கிளம்பாமல் தூய்மை யான தண்ணீரைக் குடிப்பதே நல்லது.

90. ஒரே இடத்தில் உட்கார்ந்திராமல் அவ்வப்போது எழுந்து நடக்கவேண்டும். அதிகபட்சம் 45 நிமிடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக அமரவேண்டாம். லிஃப்ட் பயன்படுத்துவதை கூடுமானவரை தவிர்க்கவும்.

91. ஓடுவது நல்ல உடற்பயிற்சி. ஆனால், கறுப்பு நிற ஆடை அணிந்து கொண்டு ஓடக்கூடாது. உடலில் அதிக வெப்பம் ஈர்க்கப்பட்டு சிக்கல் உருவாகலாம். ஜிலுஜிலு குளிர் நேரமென்றால் கறுப்பே சிறப்பு.

92. கம்பியூட்டரில் வேலை பார்ப்பவர்கள் 20-20-20 பயிற்சியைப் பழகவேண்டும். இருபது நிமிடங் களுக்கு ஒருமுறை, இருபது அடி தொலைவிலுள்ள பொருளை, இருபது விநாடிகள் பார்த்து கண்ணை இலகுவாக்குவதுதான் பயிற்சி. அவ்வப்போது கண்களைக் கழுவுவதும் அவற்றுக்குப் புத்துணர்ச்சியைத் தரும்.

93. சமைக்கும்போது ஜன்னல் களைத் திறந்து வைப்பது அல்லது எக்ஸாஸ்ட் ஃபேனை ஓடவிடுவது நல்லது. சமையல் எரிவாயுவிலிருந்து வெளிப்படும் நச்சுக்களைத் தொடர்ந்து சுவாசிப்பது நுரையீரலுக்கு ஆபத்தானது.






# தேர்தல் காலங்களில் மட்டும் அடையாளம் காணப்படும் கோயில்கள்

## விளக்கு மட்டுமா சிவப்பு?

'இவன் திருடன் மட்டுமல்ல. அண்டப் புளுகனும்கூட' என்று எண்ணத் தலைப்பட்டார். காலையில் பார்த்தோம். கர்ப்பிணியாக இருந்தாள். அதற்குள் எப்படி இறந்திருக்கமுடியும். அவரது அவநம்பிக்கை உச்சத்திலிருந்தது.

கேலியாகச் சிரித்தபடி, "நான் தவறு தான் செய்துவிட்டேன். உதவுவது என்று ஆரம்பித்துவிட்டால் சில தவறான நபர்களுக்கும் உதவவேண்டிவரும் என்று பரமஹம்சர் சொன்னது சரியாகப் போய்விட்டது.

நீதிமன்றத்தில் எவ்வளவு கூழைக்கும்பிடு போட்டாய். நான் ஒரு மடையன். உனக்காகப் பரிந்துகொண்டு வந்தேன். என் நோக்கத்தையே அவமானப்படுத்திவிட்டாய்" என்றார்.

"அவனைச் சொல்லி என்ன பயன்? இந்தமாதிரி விஷயங்களில் உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள்" என்றாள் சரசு.

"சரி, சரி நீ புத்தி சொல்வதை நிறுத்து. சோற்றிலே கல் கிடந்தது என்பதற்காகச் சாப்பிடுவதை நான் நிறுத்தமாட்டேன். இது என்னுடைய சுயதர்மம். தண்ணீரில் விழுந்துவிட்ட தேளை எடுத்துவிட்ட சந்நியாசியின் கதை தெரியுமல்லவா உனக்கு? அவர் எடுக்க எடுக்க அது கொட்டிக்கொண்டே இருந்ததாம். அதனால் அவர் எடுப்பதை நிறுத்த வில்லை. காரணம் எடுப்பது அவரது சுயதர்மம், கொட்டுவது அதனது சுயதர்மம் என்று வேதநாயகம் சக்திவேலின் பக்கம் திரும்பி "நீ செய்த காரியம் என்னைவிடப் புத்தி குறைந்தவர்களெல்லாம் எனக்குப் புத்தி சொல்லும்படி ஆகிவிட்டது பார்த்தாயா?" என்றார்.

"சத்தியமாகச் சொல்லுகிறேனய்யா, அங்களாம்மன்மீது ஆணையாகச் சொல்லுகிறேன். காலையில் நீங்கள் பார்த்த என் மனைவி வீட்டுக்குப் போனதும் இடுப்பு வலிக்கிறது என்றாள். இரண்டு நாட்களாக அவள் சாப்பிட வில்லை என்பது அப்போதுதான் எனக்குத் தெரிந்தது. கொஞ்சம் மோர் வாங்கிக் கொடுத்தேன். அதில் கரைத்துக் கொடுக்கச் சோறு கிடையாது. அந்த மோரைக் குடித்த கொஞ்சநேரத்தில் ஜன்னி கண்ட மாதிரி உளறத் தொடங்கினாள். ஒரு ரிக்ஷாவில் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போனேன். அங்கு அவசர கேஸ் என்றுகூடப் பார்க்காமல், ஒரு மணி-நேரம் காக்க வைத்தார்கள். பிறகு ஒரு டாக்டர் வந்து பார்த்துவிட்டு மாத்திரை எழுதிக்கொடுத்தார். கடையில் விசாரித்தேன். அந்த மாத்திரை பதினாலு ரூபாயாம். பதினாலு ரூபாயிருந்தால் ஒரு வாரம் சாப்பிடுவோமே! யார் யாரிடமோ கெஞ்சிப் பார்த்தேன். யாரும் மனம் இரங்கவில்லை. பொலிஸ்காரர்கள் வேறு என் வீட்டிற்கு அடிக்கடி வந்து போயிருந்ததால், யாரும் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சாயங்காலம் ஜன்னி கண்ட நிலையிலேயே என் மனைவி காலமாகிவிட்டாள்! உங்கள் புண்ணியத்தாலே சாகும்போதாவது அவள் பக்கத்தில் நான் இருக்க நேர்ந்தது. ஆனால் பிணந்தூக்க கையில் காலணா இல்லை. மூன்று குழந்தைகளும் அழுதுகொண்டே யிருக்கின்றன. அவை பசியால் அழுகின்றனவா, தாய்க்காக அழுகின்றனவா என்பதும் தெரியவில்லை. கையிலே காசுமில்லை. கடன்கொடுப்பார் யாருமில்லை என்ற நிலையில்தான் இந்த முடிவுக்கு வந்தேன். அது இந்தப் புண்ணியவான் வீடாகவே இருக்கும் என்று நான் எண்ணிய தில்லை ஐயா. இந்தக் குழந்தைகள் மூன்றும் இல்லாவிட்டால், நானும் அவளோடு சேர்ந்து இறந்து போயிருப்பேன். இனி எனக்கென்ன வாழ்க்கை வேண்டிக்கிடக்கிறது?" என்று விக்கி விக்கி அழுதான் சக்திவேல்.

"குறவன்! நன்றாக நடிக்கிறான்" என்றாள் சரசு.

"என்னை நம்பச் சொல்கிறாயா? என்று கேட்டார் வேதநாயகம்.

"வேண்டுமானால் என் வீட்டிற்கு வந்து பாருங்கள்!" என்றான் சக்திவேல்.

"அப்படி என்றால், நேரே என்னிடம் விஷயத்தைச் சொல்லியிருக்கலாமல்லவா?"

"எப்படி ஜயா சொல்வது? இவ்வளவு உதவிசெய்த புண்ணியவானுக்கு மேலும் மேலும் தொல்லை கொடுக்கக் கூடாது என்று எண்ணினேன்."

"திருடுவது மட்டும் நியாயமா?"

"இதை நான் கடைசிப் பட்சமாகத்தான் முடிவு செய்தேன்."

"நீதிமன்றத்திலேகூட நான் இவ்வளவு குழப்பமடைந்ததில்லை. என்னை நீ அவ்வளவு குழப்புகிறாய்!"

"ஐயா, நான் குழப்பத்தில்தான் வாழுகிறேன். அதிலும் ஐந்து ரூபாய் குடிசையில்தான் வாழுகிறேன். எனினும் நான் கொஞ்சம் படித்தவன். என் போதாத காலம் என்னைத் துரத்திக் கொண்டுவந்ததால் இந்தக் கதிக்கு ஆளானேன். நான் ஒரு பாங்கிலே கஷியராக வேலை பார்த்தவன் ஐயா!" என்றான் அவன்.

"போதும் போதும்! கதைகளைக் கேட்டுக் கேட்டு எங்களுக்குத் தலை சுற்றுகிறது" என்றாள் சரசு.

"என் கதையைச் சொல்லக்கூடிய நிலையில் நானும் இப்பொழுது இல்லையம்மா! முழுக்கதையையும் நீங்கள் கேட்டால்தான் நான் உயிரோடிருப்பதைப் பற்றியோ நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! ஆனால் அனாதைப் பிணமாக என் மனைவி யைப் போட்டுவிட்டு வந்திருக்கிறேன். பக்கத்துக் குடிசைப் பாட்டி மட்டுமே பிணத்தின் தலைமாட்டில் உட்கார்ந்து இருக்கிறாள். கடன் கேட்கப்போவது போலத்தான் மெதுவாக நான் இங்கு வந்தேன். என் இதயத்தை உரித்துப் பார்த்தாலும் உள்ளே இருக்கும் விஷ யம் இதுதானம்மா!"

அவனைப் பார்க்கப் பார்க்க வேதநாயகத்திற்குக் கண்ணீர் வந்துவிட்டது.

கோழைமனது திருடன் அழுதாலும் அழுகிறது.

"நீ சொல்வது உண்மையா இருந்தால் உனக்காக நான் எது வேண்டுமானாலும் செய்வேன்" என்றார் வேதநாயகம்.

"வந்து பாருங்களய்யா! அந்த அலங்கோலத்தைப் பாருங்களய்யா" என்ற கதறினான் சக்திவேல்.

"இந்தாங்க, நீங்கள் ஒன்றும் போக வேண்டாம். அவனை முதலில் வெளியே போகச் சொல்லுங்கள்" என்றாள் சரசு.

"நீ பேசாமலிரு" என்று அதட்டிய போது நாயகம் இரவுநேர உடையை மாற்றிச் சாதாரண உடை அணிந்து கொண்டார்.

"நான் தனியாக இருக்கவா?" என்று கேட்டாள் சரசு.

"நீயும் வா" என்றார் வேதநாயகம்.

தூங்கிக்கொண்டிருந்த காவல் காரனை எழுப்பி, இன்னும் கொஞ்ச நேரமாவது தூங்காமலிரு" என்று கூறிவிட்டு அவரே காரை எடுத்தார்.

முன்சீட்டில் அவருக்குப் பக்கத்தில் சரசு அமர்ந்துகொண்டாள். பின் சீட்டில் சக்திவேல் அமர்ந்துகொண்டான்.

இரவு மணி மூன்று.

சாலைகளில் போக்குவரத்து இல்லை.

கார், சக்திவேல் காட்டிய வழியே தண்டையார்பேட்டை நோக்கிச் சென்றது.

சென்னை நகரம் நாகரிக உலகத்திலும் காட்டு வாழ்க்கை வாழ்வோர் ஏராளமாகக் இருக்கின்றார்கள் என்பதற்குச் சில சின்னங்கள் உண்டு. அவற்றின் பெயர் குப்பங்கள்.

தேர்தல் காலங்களில் மட்டுமே பெரிய மனிதர்களால் அடையாளங் காணப்படும் மரியாதைக்குரிய கோயில்கள்.

சாலைகளில் துயில்கொள்ளும் கழுதைகள், நாய்கள், மூலைக்குமூலை பன்றிகள், சாலை ஓரங்களில் சில மனிதர்கள். சாந்தி முகூர்த்தத்திலிருந்து பிரசவம்வரை அனைத்தையும் அங்கேயே நடத்தும் பாவப்பட்ட ஜென்மங்கள்.

வரிசையாகச் சில குடிசைகள், ஐந்தடி உடம்பை நான்கு மடிப்பாக மடித்து உள்ளே நுழையவேண்டிய வாசல்கள்.

இந்தப் புண்ணிய பூமிக்கு விஜயம் செய்வோர் தரிசிக்கவேண்டிய திருவிளையாடற்காட்சிகள்.

அப்படி ஒரு குப்பத்திற்குள்ளே வேதநாயகத்தின் கார் நுழைந்தது.

சாலையிலே படுத்திருந்த எருமை ஒன்று கம்பீரமாகத் தலையைத்தூக்கிப் பார்த்தது. அது "உங்கள் பொலிசோ, சட்டமோ எங்களை என்ன செய்ய முடியும்?" என்று கேட்பது போலிருந்தது.

ஆனால் வசதி படைத்த சில மனிதர்களைவிட அதற்குச் சொரணை அதிகமிருந்தது.

ஹரன் ஒலி எனும் அவலக்குரல் கேட்டு அது எழுந்து வழிவிட்டது.

ஒரு குடிசையின் வாசலை சக்திவேல் காட்ட, கார் அங்கே நின்றது.

சக்திவேல் இறங்கி உள்ளே போக, பின்னாலேயே வேதநாயகமும் சரசுவும் உள்ளே நுழைந்தார்கள்.

சக்திவேல் பொய் சொல்லவில்லை. அவன் மனைவி அங்கே ஒரு பூமாலைக்கும் வழியின்றிப் பள்ளி கொண்டிருந்தாள். அவள் தலைமாட்டிலே இரண்டு கண்ணும் தெரியாத ஒரு கிழவி அமர்ந்து அவள் தலையைத் தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தாள். மூன்று குழந்தைகளும் அலங்கோலமாகத் தூங்கிக்கொண்டிருந்தன.

(விளக்கு எரியும்)

# வாராந்த செய்திக்கொத்து

## சுனாமி கிராமத்தில் படையெடுக்கும் நாக பாம்புகள்



காலி, வலந்துவ மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள சுனாமி கிராமத்தில் நாக பாம்புகள் படை எடுப்பதால், மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். இந்த கிராமத்தில் உள்ள வீடுகளுக்குள் நாகபாம்புகள் அதிகளவில்வருவதாக கூறப்படுகிறது. 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர், கரையோரத்தில் வசித்துவந்த 54 குடும்பங்களுக்கு தனியார் நிறுவனம் ஒன்று இந்த கிராமத்தில் வீடுகளை கட்டிக்கொடுத்தது. 9 வருடங்களாக கிராமத்தில் வாழ்ந்துவந்த தாம், நாக பாம்புகளை கண்டதில்லை எனவும் அண்மைய காலமாக பாம்புகள் அதிகளவில்வருவதாகவும் கிராம மக்கள் கூறியுள்ளனர். கடந்த இரண்டு தினங்களில் பாம்புகளை பிடிக்கும் நபர் 5 நாகபாம்புகளை பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சி.வி. எனக்கு மாணவன்..! மனோ கணேசன் தெரிவிப்பு




வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அரசியலில் எனக்கு மாணவர். அவருக்கு நான் குரு எனத் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோகணேசன் தெரிவித்தார். கொழும்பில் தற்போது இடம்பெற்றுகொண்டிருக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## மஹிந்தவின் மனைவியையும் மூத்த மகனையும் காப்பாற்றிய மைத்திரி!



ஷிரந்தி ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோரை கைது செய்யவேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அதனை தவிர்த்தார் எனவும் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அந்த சந்தர்ப்பத்திலேயே மகிந்த ராஜபக்ச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அவசரமாக விலகினார் எனவும் அவர் கூறியுள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

## மனைவி, பிள்ளைகளை காப்பாற்றவே பதவியை துறந்தார் மஹிந்த!



தனது மனைவி மற்றும் பிள்ளைகளை காப்பாற்றுவதற்காகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தாரை வார்த்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மஹிந்தவின் நெருங்கிய உறவினருமான ஹேமால் குணசேகர இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.எவ்வாறாயினும், தம்மிடமிருந்து தலைமை பதவி பறிக்கப்பட்டதாக தெரிவிக்கும் மஹிந்த ராஜபக்ஸவின் கூற்றை தாம் முற்றாக நிராகரிப்பதாக சுட்டிக்காட்டிய அவர், மஹிந்தவின் கருத்து முற்றிலும் பொய்யானது எனவும் கூறியுள்ளார்.

## எனக்கு கொடுக்கப்படும் தண்டனை மின்சார நாற்காலியைவிட கொடுமையானது - மஹிந்த



மின்சார நாற்காலியில் இருந்து தப்பினாலும் தற்போது அதனைவிட அழுத்தங்களுக்குத் தான் உள்ளாகியிருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அளுத்கம மொரகல்ல கடற்கரையில் உடற்பயிற்சியில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி ஊடகவியலாளர்களிடம் இதனை கூறியுள்ளார். மின்சார நாற்காலிக்கு அனுப்புவதைவிட மனரீதியாக கொடுக்கப்படும் அழுத்தங்கள் போதுமானது. மின்சார நாற்காலிக்கு கொண்டு சென்றது போல்தான் இதுவும். அது ஒரு முறைதான், இது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் தண்டனை.

## சங்கக்கார ‘டக்– அவுட்’ அப்ரிடியின் அனல் பந்துவீச்சில் பெஷ்வர் ஷல்மி அணி அசத்தல் வெற்றி





பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி20 தொடரில் போட்டியில் குயூட்ட கிளாடியட்டர்ஸ் - பெஷ்வர் ஷல்மி அணிகள் மோதின. இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய குயூட்ட கிளாடியட்டர்ஸ் அணி அப்ரிடியின் சுழலில் சிக்கியது.அணித்தலைவர் ஷோட் 21 ஓட்டங்கள் எடுத்தார். சங்கக்காரா டக்- அவுட்டாக வெளியேறி ஏமாற்றம் அளித்தார். பின்னர் வந்த எலியாட் அதிரடியாக விளையாடி 29 பந்தில் 3 சிக்சர், 2 பவுண்டரி என 40 ஓட்டங்கள் குவித்தார்.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற அந்த அணி 18 ஓவரிலே 129 ஓட்டங்களுக்கு சுருண்டது. அப்ரிடி 7 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை அள்ளினார். வஹாப் ரியாஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பின்னர் 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய பெஷ்வர் ஷல்மி அணிக்கு ஹபீஸ் (36), டாவிட் மாலன் நல்ல தொடக்கம் கொடுத்தார். அடுத்துவந்த கம்ரான் அக்மல் 17 ஓட்டங்கள் எடுக்க, தொடர்ந்து சிறப்பாக ஆடிய டாவிட் மாலன் அரைச்சதம் கடந்தார்.இதனால் அந்த அணி 18.4 ஓவர்களில் 2 விக்கெட் மட்டும் இழந்து 130 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டால் வெற்றி பெற்றது. டாவிட் மாலன் 60 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். 5 விக்கெட்டுகள் அள்ளிய அப்ரிடி ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார்.

## இலங்கையின் சிறந்த விளையாட்டு நட்சத்திரமாக யாழ் பல்கலைக்கழக மாணவன்



இலங்கையின் சிறந்த விளையாட்டு நட்சத்திரமாக யாழ் பல்கலைக்கழக கால்பந்தாட்ட வீரனும் தேசிய கால்பந்தாட்ட அணியில் இடம்பிடித்துள்ளவருமான செபமாலைநாயகம் ஞானரூபன் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கை பல்கலைக்கழகங்களிலுள்ள சிறந்த விளையாட்டு வீரரை தெரிவு செய்யும்வகையில் இடம்பெற்ற இணைய வாக்கெடுப்பிலேயே சிறந்த வீரராக அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மொத்தம் 16 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களில் சிறந்த விளையாட்டு வீரனைத் தெரிவு செய்வதற்காக http://sports.moraspirit.com என்னும் இணையத்தளத்தில் இந்த வாக்கெடுப்பு நடைபெற்றது. வாக்கெடுப்பு ஆரம்பமான நாளிலிருந்து முதலிடம்வகித்த ஞானரூபன், இறுதியில் சிறந்த நட்சத்திரமாக வெற்றிபெற்றார். இளவாலையைச் சேர்ந்த ஞானரூபன், தேசிய கால்பந்தாட்ட அணியில் இருக்கும் ஒரேயொரு தமிழ் வீரன் ஆவார். இதன்போது அவர், 5481 வாக்குகளை பெற்றிருந்தனர். இவருக்கு அடுத்ததாக 3198 வாக்குகளை பெற்று, மொறட்டுவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த றக்பி வீரர் ஹேஸன் சில்வா இரண்டாமிடத்திலும், கொழும்புப் பல்கலைக்கழக நீச்சல் வீரன் சமீர சுலோச்சன விதானஹே 1609 வாக்குகளுடன் மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

## புதிய சாதனை நிலைநாட்டிய உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவன்



கிளிநொச்சி மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான அரைமரதன் ஓட்டப் போட்டியில் உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவன் இளங்கீதன் அனுஜன் புதிய சாதனை நிலைநாட்டியுள்ளார். 1 மணித்தியாலமும் 18 நிமிடங்களுமாக இருந்த சாதனையை இவர் 1 மணித்தியாலமும் 15 நிமிடங்களிலும் ஓடிமுடித்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

## முல்லைத்தீவு மாவட்ட ஊர்கடந்து ஓட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முதலிடம்

முல்லைத்தீவு மாவட்ட ஊர்கடந்து ஓட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட புலேந்திரன் ஜெனந்தன் ஆண்கள் பிரிவிலும், யோகேஸ்வரன் புவேந்தினி பெண்கள் பிரிவிலும் முதலாம் இடங்களைக் கைப்பற்றினர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கடந்த 6ஆம் திகதி காலை 7 மணியளவில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு என்.முகுந்தன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் ஆண்கள் பிரிவில் 25 வீரர்களும், பெண்கள் பிரிவில் 18 வீராங்கனைகளும் கலந்துகொண்டனர். ஆண்களுக்கான தூரமாக 12 கிலோமீற்றர் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதனை 20 வீரர்கள் ஓடிமுடித்தனர். பெண்களுக்கான தூரம் 8 கிலோமீற்றராக நிர்ணயிக்கப்பட்டது. இதனை 16 வீராங்கனைகள் ஓடிமுடித்தனர். ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட புலேந்திரன் ஜெனந்தனும், இரண்டாம் இடத்தை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட மகேஸ்வரன் குமுதனும், மூன்றாமிடத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட செங்கோல் அலெக்ஸ் என்பவரும் தமதாக்கினர்.

பெண்கள் பிரிவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட யோகேஸ்வரன் புவேந்தினி முதலாம் இடத்தையும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் சார்பாக கலந்துகொண்ட சுப்பிரமணியம் சுடர்மதி இரண்டாம் இடத்தையும் அதே பிரதேச செயலர் பிரிவின் சிவனேஸ்வரன் டிலக்சனா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். நிகழ்வுக்கு விருந்தினர்களாக மாகாணசபை பிரதித் தவிசாளர் ம.அன்ரனி ஜெகநாதன், மாகாணசபை உறுப்பினர் பு.இரவிகரன், உடற்கல்விப் பணிப்பாளர் மைக்கல் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# கூத்தாடிகளின் கைகளில் வடக்கு மாகாண சபை!

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்பின் பல மாகாணசபை உறுப்பினர்களையும், பிரமுகர்களையும் முதலமைச்சரில் இருந்து தள்ளிவைத்தமைக்கு சத்தம் சந்ததியின்றி, இவர் நடத்திய "மூட்டைப்பூச்சி" வேலைதான் காரணம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஆக, முதலமைச்சர் விக்னேஸ்வரன்மீது போர்தொடுக்க விரும்பிய கூட்டமைப்பு உள்வீட்டுத் தரப்புகள் முதலில் மாகாணசபைக்குள் முதலமைச்சருக்குப் பக்கபலமாக "அவரது பக்கத்தில் சகுனியாக" விளங்கும் ஐங்கரநேசனுக்கு ஆப்பு வைத்தால் அது முதலமைச்சருக்கு செம அடியாக இருக்கும் என்று கணக்குப் போட்டன.

பின்புலத்தில் பிள்ளையார்சுழி போட்டு காய் நகர்த்தினார் அவைத் தலைவர். கொழும்பிலிருந்து 'றிமோல்ட் கொண்ட்ரோல்' உத்தரவு வழங்குபவர்களின் முழு ஆசியும் கிட்டிற்று. மாகாண சபையின் அமர்வுக்கு முதல் நாள் இரவு யாழ்ப்பாணம் யு.எஸ்.ஹோட்டலில் விடிய விடிய சதிமந்திராலோசனை நீடித்தது.

பிறகென்ன? முதலமைச்சருக்குக் கூடத்தெரியாமல் சத்தம் சந்தடியின்றி விடயம் ஒப்பேற்றப்பட்டது. முதலில் மாகாண சபை அமர்வில் அவைத் தலைவர் வகுத்த திட்டத்தின்படி சாதாரண விடயம் ஒன்றுபோல விவகாரத்தை சபைக்குக் கொண்டுவந்தார் உறுப்பினர் லிங்கநாதன். கடைசிநேரத்தில் அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிரான ஊழல் பட்டியல்கள் குறித்து விசாரணை நடத்துமாறு முதலமைச்சரைக்கோரும் தீர்மானமாக அது நிறைவேற்றப்பட்டது.

ஏதோ வடக்கு மாகாண சபையில் அமைச்சர் ஐங்கரநேசன் மட்டுமே ஊழல் செய்தவர்போலவும் மற்றைய அமைச்சர்கள் எல்லோரும் சுத்த நேர்மையான பேர்வழிகள் என்பது போலவும் அங்கு பேசப்பட்டது.

அது முற்றிலும் மூடிமறைப்பு. எல்லா அமைச்சுகளிலிலுமே ஊழல், மோசடிகள், நிர்வாகத் திறனின்மையே கோலோச்சுகின்றது.

இது எல்லாவற்றிற்குமே பிரதான காரணம் முதலமைச்சர்தான். அவர் வடக்கு மாகாண சபையைத் திறம்பட நிர்வகிக்கும் முதலமைச்சர் பணியைத் தவிர மிச்சம் எல்லாவற்றிலும் நன்கு பணியாற்றுகின்றார். தாடியும், திருநீறும், உருத்திராட்ச மாலையும், சாமிப்போக்கும், நீதியரசர் என்ற நாமமும் அவருக்கு நல்ல கவசங்கள்.

முதலமைச்சர் என்ற முறையில் அவருக்கு பொதுமக்கள் சார்பில் எழுதப்படும் முறைப்பாடுகளுக்கு - முறையீடுகளுக்கு - குறைந்தபட்சம் அத்தகைய முறைப்பாடு கிடைத்தது என்று ஒருவரிப் பதில்கூட வருவதில்லை. நாட்டின் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினால் குறைந்த பட்சம் அந்தக் கடிதம் - மனு - கிடைத்தது என்று ஒருவரிப் பதிலாவது வரும்.

ஆனால், வடக்கு முதலமைச்சரின் நிர்வாகமோ சேடம் இழுக்கும்நிலையில்தான் இருக்கின்றது. வடக்கு மாகாண சபையில் பாதுகாப்புச் சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதில் பெரும் ஊழல்கள், முறைகேடுகள் இடம்பெற்றன. பல லட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு அதிகாரிகள் தமக்கு விரும்பிய - தகுதியற்ற - தரப்புகளுக்கு அந்தச் சேவையை ஒப்பந்தத்துக்கு வழங்கினர். பாதிக்கப்பட்ட தரப்புகள் முழு ஆதாரங்களுடன் பல தடவைகள் முதலமைச்சருக்கு முறைப்பாடு செய்தன. பதிலே கிடையாது. எந்த நடவடிக்கையும் இல்லை.

அந்தத் தரப்பினர் முழு ஆதாரங்களுடன் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராஜாவை அணுகினார். அவர் விடயங்களை நேரடியாக முதலமைச்சரிடம் எடுத்துச்சென்றார். இப்படி நடந்திருந்தால் தவறுதான் என்று ஒப்புக்கொண்ட முதலமைச்சர் அதன்பின் எந்த நடவடிக்கையும் எடுக்கவே இல்லை. பார்த்து - காத்து - இருந்த பாதிக்கப்பட்ட தரப்பினர் வேறு வழியின்றி நீதிமன்றத்தை நாடியுள்ளனர். நீதிமன்றத்தின் தீர்ப்பு எவ்வேளையிலும் வரும் நிலைமை.

வடக்கு மாகாண சபையின் உயரதிகாரிகளின் ஊழல்கள் பற்றிய விடயங்களை ஆதாரத்துடன் கொண்டு சென்றும் - அவை பற்றி அறிந்திருந்தும் - நடவடிக்கை ஏதும் எடுக்காத வடக்கு முதலமைச்சர், தமக்கு நெருக்கமான - தமது ஆதரவுத்தூணான தமது அமைச்சர் ஒருவருக்கு எதிரான ஊழல், மோசடி, நிர்வாகத் திறனின்மை போன்ற குற்றச்சாட்டுகள் குறித்து வடக்கு மாகாண சபையிலேயே ஏகமனதான தீர்மானம் முன்வைக்கப்பட்டால் தன்னும்கூட நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம்தான்.

இந்தத் தீர்மானத்துக்கு எதிராக இருபத்தினான்கு மணிநேரத்தில் அவர் வெளிப்படுத்திய பதிலடி அதனையே உறுதிப்படுத்தியது.

"காய்த்த மரத்தில்தான் கல்லெறி விழும்" என்று அமைச்சர் ஐங்கரநேசனின் சேவையையும், "இந்தப் பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது" என அமைச்சர் ஐங்கரநேசனையும் நியாயப்படுத்தி பாராட்டும்விதத்தில் முதலமைச்சர்தந்த பதில் அதனையே காட்டுகின்றது.

ஆனால், எது, எப்படியோ தனது உவமானத்தில் கூட அமைச்சர் ஐங்கரநேசனை 'நரி' எனக் குறிப்பிட்டு உண்மையை ஒப்புக்கொண்டிருக்கின்றார் முதல்வர் விக்கி.

ஆளும் தரப்பே எதிரணியாகப் பிரிந்துகொண்டு, வடக்கு மாகாண சபையில் நடத்தும் குளறுபடிகள், தகிடுதத்தங்கள் கண்டு சந்தி சிரிக்கின்றது.

வடக்கு மாகாண சபைக்கு வேட்பாளர்களை நிறுத்தும்போது தகுதிவாய்ந்தவர்களை விடுத்து, தமக்கு சலாம் போடக்கூடிய தமது ஆதரவாளர்களுக்கு மட்டும் இடம்கொடுத்த மாவை சேனாதிராஜா போன்ற மலைவிழுங்கி மகாராஜாக்கள்தான் வடக்கு மாகாண சபையின் செயல்திறனின்மை என்ற தோல்விக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்பது சரியானதே!

# ஜப்பானின் தேசிய கலைத்திட்டத்தின் பாங்கு

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)



பாடசாலை அனுமதிபெறல் என்ற அம்சம் கூடுதலாகப் பெறுபேறுகளால் தீர்மானிக்கப்பட்டது. பிரவேசம் பெறல் என்பது மாணவரது புலமைப் பட்டப் பதிவுளில் தங்கியிருக்கின்றது. அநேகமான மேல்மட்ட இரண்டாம்நிலைப் பாடசாலைகள் பொதுவான நிகழ்ச்சித்திட்ட அடிப்படையில் முழுநேரமாக உயர்கல்விக்கானதும், தொழில்நுட்ப தொழில்சார் கல்விநெறிகளையும் பட்டத்தின்பின் தொழில்வாய்ப்பை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு வழங்கின. 1980களில் இறுதியில் 70 வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் பொதுக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

முதல் வருட நிகழ்ச்சித் திட்டத்தில் மாணவர்களுக்கு கல்விசார் மற்றும் வர்த்தகப் பாடநெறிகள் ஒத்த தன்மையுடையன. அவை ஜப்பானிய மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற அடிப்படைக்கல்விசார் பாடநெறிகளை உள்ளடக்குகின்றன. இப்பாடசாலைகளில் ஆற்றல் வெளிப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொழில்சார், தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள் பல்வகை விசேடமான பாடநெறிகளை உள்ளடங்கியுள்ளன. 1989ஆம் ஆண்டின் முழுநேர தொழில்சார் நிகழ்ச்சித் திட்டங்கள் 72வீதமான மாணவர்களைக் கொண்டிருந்தது. இவற்றுள் தகவல் நிரற்படுத்தல், கப்பல் செலுத்தல், மீன்பிடி, வியாபாரத்திற்கான ஆங்கிலம், பீங்கான் வகை உற்பத்தித் தொழில் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

1989ல் மேல்மட்ட இரண்டாம் நிலைக்கலைத் திட்டம் சீரமைப்புக்குள்ளானது ஆண், பெண் இருபாலாரும் மனைப்பொருளியல் பாடநெறியைத் தெரிவுசெய்தல் இதில் குறிப்பிடத்தக்க மாற்றமாகும். குடும்ப வாழ்வின் முக்கியத்துவம் குடும்பங்களுக்கிடையில் ஒத்துழைப்பிற்கான எண்ணக்கரு, குடும்ப உறுப்பினர்களின் வெவ்வேறு வகிபங்குகளும், பொறுப்புக்களும், சமூகத்தில் குடும்பத்தின் வகிபங்கு என்பவற்றில் மாணவர்களுக்கு விழிப்புணர்வைக் கொணர்தலில் அரசு கவனம் செலுத்தியது. மாற்றமடையும் சமூகத்தில் குடும்ப உறுதிப்பாட்டைப் பேணல், குடும்பங்கள் தொடர்ச்சியாகச் சமூக உட்கட்டுமானத்தில் மிக முக்கிய பொறுப்பை ஏற்றல் என்பன குறிப்பிடத்தக்கன. மற்றுமொரு மாற்றம் பழைய சமூகக்கல்வி கற்கை நெறியானது வரலாறு, புவியியல், குடியியல் என ஆக்கப்பட்டமையாகும்.

இங்கு மேல்மட்ட இரண்டாம் நிலையில் மிக அதிகமான ஆசிரியர்கள், பட்டதாரிகள் ஆவார். இப்பாடசாலைகள் துறைகளாக ஒழுங்குபடுத்தப்பட்டன. ஆசிரியர்கள் தமது பிரதான துறைகளில் வேறுபட்ட பாடநெறிகளிலும் தனியான கவனம் செலுத்துகின்றனர். கற்பித்தலில் 20வீதம் பெண்களும் 25வீதம் பெண்கள் அதிபர்களாகவும் உள்ளனர். ஒதுக்கப்பட்ட காலத்துள் தேவையான பாடத்திட்டத்தைப் பூர்த்திசெய்யும் பிரதான நோக்கிலான கற்பித்தல் பெரும்பாலும் விரிவுரை முறையினதாகும். பொதுப் பாடசாலைகள் போன்று அணுகுமுறையும், பாடஏற்பாடுகளும் ஒருமைப்பாங்குடையன. 30 நிமிடங்களுக்கு ஒரு முறை ஆசிரியர் வேறு வகுப்பறைக்குச் செல்வர்.

இம்மட்டத்தில் பயிலும் மாணவர்கள் பாடசாலையிலும் அதற்கு வெளியிலும் பாடசாலையின் அதிகார பிரமாணங்களுக்கு மிகவும் பொறுப்பு கூறக்கூடியவர்களாவர். பாடசாலை ஒழுங்கமைப்பு நடைமுறைகள் நட்டத்தை அடிக்கடி அமுல்படுத்தி உடைகள் தொடர்பான விதிகள், தலையலங்காரம், மாணவர் ஈடுபடும் வேலைகள், ஓய்வுநேரச் செயற்பாடுகள் என்பவற்றைக் கண்காணிக்கின்றன. பாடசாலைகளே மாணவரது ஒழுக்கவீனத்துக்கு வகை கூறவேண்டும்.

மேல்மட்ட இரண்டாம் நிலையில் அதிகார மட்டத்திற்கு மாணவர்களது வன்முறை, புகைத்தல், வஸ்துக்களின் பாவனை, துன்புறுத்துகை போன்ற பிரச்சினைகள் எழுகின்றன. இடைவிலகல் 2 - 2.5வீதம் வரை உள்ளபோதும் 1987ல் 77.5 வீதமாகப் பட்டம் பெற்றோர் தொகை காணப்பட்டது. கல்வி பாகுபாடு தடைசெய்யப்பட்டிருப்பினும் வரலாற்றுரீதியாக ஒரு குழு மக்கள் பாகுபாட்டிற்குட்படுத்தப்பட்டுள்ளனர். இது 1980களில் ஓரளவு சீராக்கப்பட்டுள்ளது. அங்கவீனமான மாணவர்களுக்கான தொழில்சார் பயிற்சிகள், அவர்கள் சமூகத்தில் சுயாதீனமாகச் செயற்படுவது தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வாரமொரு காரம்




# ஒளியின்றி விழி இருந்தும் என்ன பயன்?

இறைவன் படைத்த இந்த இரு விழிகளிற்கும் உலகில் விலை மதிப்பில்லை. இருந்தும் இந்த விழிகளிற்கு ஒளிகள் இல்லையென்றால் உலகில் எந்த வெளிகளும் தெரியாது. விழிகளைப் படைத்த இறைவன் அன்று ஒளிகளைப் பற்றி சிந்திக்க வில்லையென்றால் விழியிருந்தும் குருடர்கள்தான் நாமெல்லாம். இன்றிருக்கும் இலங்கைத் தமிழர் நிலையும் இதுதான். விழி இருந்தும் ஒளியிழந்த குருடர்கள்தான் நாமெல்லாம்.

தமிழர் தரப்பில் ஒவ்வொருவருக்கும் தெளிவாகத் தெரிகின்றது அந்தவெளி. இருந்தும் இமைகளை இறுக மூடி இருட்டுக்குள் இருந்து பல கதை பேசுகின்றோம். பேசும்போதும் தெரிகிறது, நாம் இமைகளைத் திறந்தால்தான் இருள் நீங்குமென்று. இருந்தாலும் திறக்க மறுக்கின்றோம். இதுதான் எமக்குள் இருக்கும் 'ஈகோ' அது எங்கிருந்து முளைத்தது. ஏன் அது எமது இனத்திற்கே சாபமானது என்பதுதான் இன்று எமக்குத் தேவை யான அரசியல் பக்கங்கள். சீனாவின் பெரும்போகம் இந்தியாவின் சிறு போகத்தை அழிக்கின்றது என்பதும் எமக்குத் தேவையில்லை, அந்தரத்தில் ஆடும் தமிழர் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு என்ன வழி...? என்பதுதான் இன்று எமக்குத்தேவை.

அன்று ஆயுதமெடுத்தோம் அழிவைத்தவிர அதனால் எதையும் சாதிக்கமுடியவில்லை, அகிம்சை வழியில் ஐந்தம்சக் கோரிக்கையினை முன்வைத்தோம். அந்த உயிரை இழந்ததைத் தவிர அங்கு எதுவும் மிஞ்ச வில்லை, பேச்சுமேடையில் இருந்து பெரும்பான்மை இனவாதத்திற்கு ஈடாக பேரம் பேசினோம். இறுதியில் இடங்கள் பார்த்ததுதான் மிச்சமாச்சு, மாகாணசபை வேண்டும் என்று மண்டியிட்டுப் பிரசாரம் செய்தோம். கிடைத்தவுடன் மலர்ந்தது தமிழரசு என்றுகூட மார்புதட்டினோம். ஆண்டொன்று கழிந்தும்கூட அமர்வுகளைத் தவிர அங்கு எதுவும் மிஞ்சவில்லை.

இத்தனைக்கும் பின்பு எதை நீங்கள் மார்புதட்டிப் பேரம்பேசிப் பெரும்பான்மை மத்தியில் இருந்த வென்றெடுக்கலாமென எதிர்பார்க்கின்றீர்கள்? என்பதையேனும் தெளிவாகச் சொல்லுங்கள்? கூட்டமைப்புக் கும்பல்களின் நிலைப்பாட்டை விடுங்கள். சுயலாபத்திற்காக ஐஸ்கிறீம் விற்கும் கும்பல்கள்தானே அவர்கள். மக்களிடம் மாத்திரமே நாம் கேட்கும் நியாயமிது சொல்லுங்கள்..? தற்போது தெளிவாகத் தெரிகின்றதல்லவா... இமைகளைத் திறந்தால்தான் இனித் தமிழர்க்கு ஒளியென்று.

ஒளியிழந்த விழிகளைப்போல் எமது அரசியல் நகர்ந்தால் அடுத்த சந்ததிகூட இருளிற்குள்தான் இடர்படும். இதனை மக்களாகிய நாமென்றாலும் பொறுப்புடன் சிந்திக்கவேண்டும். பெரும்பான்மை நாடொன்றில் சிறுபான்மையினம் தனது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க பல வழிகள் உண்டு. ஒரு வழி தோற்றால் மறுவழி அதுதானே யதார்த்தம். மாற்று வழியில்லாத அரசியல் பக்கங்கள் என்று எதுவுமே உலக நாட்டில் இல்லையே...! நாம் மாறத் தயாரில்லை என்பதற்காக மாற்றமேயில்லையென்று வாதிடமுடியாது. எமது சந்ததியின் சரிவிற்கு எது தெரியுமா சாபக்கேடு...? யதார்த்தத்திற்குப் புறம்பாக நாம் போடும் வேலிகளும், மாற்றத்தை இழிவாகப் பார்க்கும் மனப்பாங்குகளும்தான். இன்று அபிவிருத்தியை நாம் அனுபவிக்கவில்லையா...? அதற்குத் தானே அன்று பொருள் சொன்னோம் அடிமை வாழ்க்கையென்று.

வாழ்வுரிமைகளை பெரும்பான்மை மத்தியில் சிறுபான்மை பெற்றெடுக்கும் வழிமுறைகளை அடிமைத்தனமென விமர்சிப்பது தப்பு. அதுதான் வழியென் றால் அதைச் சாதுரியமாகப் பெற்றெடுப்பது தான் சிறுபான்மையினத்தின் அரசியல் வெற்றி. தனித்தமிழன் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்று நாம் எட்டடி பாய்ந்தால் பெரும்பான்மை சிங்களம் இது பௌத்த தேசம் என பதினாறடி பாய்வதில் தப்பில்லையே.

இருவரும் எட்டின் மடங்காக எதிரெதிரே பாய்ந்தால் எங்கய்யா தீர்வு எமக்குக் கிடைக்கும். சுயநிர்ணயம் சுதந்திரமெனும் பெயரில் நாமும் இனவாதம் பேசுகின்றோம். சிங்களமும் இதை ஆதாரப்படுத்தி அதைவிட இனவாதம் பேசுகின்றது. இப்படியே தொடர்ந்தால் முடிவுதான் என்ன? அன்று சிங்களத் தலைவர்களை பிரித்தானியர் சிறையடைத்தபோது சேர்.பொன்.இராமநாதன் சீறினார். பிரித்தானியா சென்று குடியேற்ற ஆட்சியாளர்களிற்கெதிராக போராடி வெற்றியும் கண்டு சிறையெடுத்தார்.

அன்று இலங்கையில் இனவாதம் இருந்ததா...? பிரித்தானியர் சுதேசியர் களிடம் ஆட்சியை வழங்கும்போது இராமநாதன் இனவிகிதாசாரத்திற்கு ஏற்ப வழங்கக் கோரினார் அன்று இனவாதம் இருந்ததா...? என்று வந்தது இந்த இனவாதம்...? அதுதான் மாற்றம் அன்று இல்லாதது இன்று வந்திருக்கல்லவா...! இன்று இல்லாதது நாளை வரவேண்டும். அந்த மாற்றத்தை ஏற்ற நாம் இனிவரும் மாற்றங்களையும் ஏன் ஏற்கமுடியாது...? விழியிருந்தும் ஒளியிழந்த குருடர்களாய் எமது சந்ததி சாகக்கூடாது. மாற்றங்கள் தான் மனித வாழ்க்கையின் வெற்றி. மாற எத்தனிப்போம்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(18.02.2016 தொடக்கம் 24.02.2016 வரை)

### மேடம்

பேச்சைக் குறிக்கும் இரண்டாம் வீட்டுக்கு உரிய கிரகமான சுக்கிரனால் பேச்சில் கவர்ச்சி கூடும். பதினோராம் வீட்டில் அமர்ந்திருக்கும் கேதுவும், அந்த வீட்டைப் பார்க்கும் ராகுவும் நன்மைகளை அளிக்கத் தயாராக உள்ளனர். முதல் நன்மை நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த வெளிநாட்டு உத்தியோகம்! இந்த ராகு அமைப்பின் காரண-மாக நீங்கள் ஏகப்பட்ட பயணங்கள் மேற்கொள்ள வேண்டிவரும். ஒவ்வொரு பயணமும் ஒவ்வொரு வகையில் நன்மையளிக்கும். அலுவலகத்தில் உங்கள் நற்பெயரை அதிகரிக்கவும், வாய்ப்புகள் அதிகரிக்கவும் இவர்தான் உதவப் போகி-றார். பரிகாரம்: செவ்வாய்க்கிழமை முருகருக்கு அர்ச்சனை, அபிஷேகம் செய்யுங்கள்.

### இடபம்

இலாபத்தைக் குறிக்கும் பதி-னோராம் வீட்டிற்கு சந்திரன் வருவ தால் தாய்வழி உறவினரால் நன்மையும் லாப மும் கிடைக்கும். குளிர்ச்சியான பொருட்களை வியா-பாரம் செய்பவர்கள் அதிக இலாபம் பெறுவீர்கள். அல்லது குளிர்ச்சியான நாடுகளில் வேலை பார்ப்பவர்கள் அதிக நன்மை அடைவீர்கள். மூன்றாம் வீட்டை சுக்கிரன் பார்ப்பதால் சகோ தரவகையினர் புகழடைவார்கள் உங்களுக்கும் நன்மை செய்வார்கள். ராசியின்மீது சந்திரன் உச்சமாக வரவிருக்கிறார். நான்காம் வீட்டில் உள்ள குருபகவான் தாயாருக்கும், தாயாரால் உங்களுக்கும் நன்மை அளிப்பார். பரிகாரம்: திங்கட்கிழமை சிவபெருமானை வணங்குங்கள்.

### மிதுனம்

பதினோராம் வீட்டை குரு பார்ப்ப தால், நீங்கள் மிகவும் வற்புறுத்தியும் கிடைக் காத சம்பள உயர்வு, அமைதியாக வேலைபார்க்கும் போது தானாக வரும். மூன்றில் குரு இருப்பதால் சகோதரவகையினருக்கு நன்மை ஏற்படுவதோடு அவர்கள் உங்களுடன் சுமுகமாக இருப்பார்கள். ஆறாம் வீட்டில் பல கிரகங்கள் இருப்பதால் புதிய நண்பர்கள் சேருவார்கள். கடன்கள் அடைவதில் நிதானப் போக்கு இருக்கும். லாபத்தைக் குறிக்கும் 11ம் வீட்டுக்கு சந்திரன் வருவதால் தாய்க்கும் தாய்வழியில் உங்களுக்கும் லாபம் வரும். பரிகாரம்: புதன்கிழமைகளில் மாணவர்களுக்குப் பச்சை நிறப் பொருட்களை அன்பளிப்பாகக் கொடுக்கலாம். விஷ்ணுவுக்குத் துளசி மாலை சாத்துங்கள்.

### கடகம்

எட்டில் சூரியன் உஷ்ணாதிக்கப் பிரச்னைகள் ஏற்படக்கூடும் ஆரோக்யத் தில் முழுக்கவனம் செலுத்துங்கள். புதன் ராசியைப் பார்ப்பதால் புத்திசாலித்தனமும், அறிவாற்றலும் அதிகரிக்கும். இரண்டிலுள்ள குரு உங்களுக்கு உதவியாகவும், வழிகாட்டியாகவும் சிலரை அறிமுகப்படுத்திவைப்பார். குருபகவான் ஆறாம் வீட்டைப் பார்ப்பதால் நண்பர்களால் உங்க ளுக்கும் உங்களால் நண்பர்களுக்கும் நன்மைகள் ஏற்படும். கடன்கள் சீக்கிரம் அடையும். பேச்சைக் குறிக்கும் இரண்டாம் வீட்டில் ராகு இருப்பதால் கடுமையற்ற சொற்களால் நாசூக்காக எண்ணங்களை வெளிப்படுத்தவேண்டியது மிகவும் அவசியம். பரி-காரம்: செவ்வாய்க்கிழமை துர்க்கைக்கு சேலையும், மாலையும் சாத்தி வழிபடுங்கள்.

### சிங்கம்

வஞ்சப் புகழ்ச்சியால் சுற்றியிருப்பவர் களின் தவறுகளை சுட்டிக்காட்டும் நீங்கள், எப்போதும் நீதி நேர்மைக்கு குரல் கொடுப்பவர்கள். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளில் பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். 7ஆம் திகதி வரை 6ம் வீட்டிலேயே சுக்கிரனும் மறைந்திருப்பதால் குடும்பத்திலும் கணவன், மனைவிக்குள் வாக்கு வாதங்கள் வரும். சமையலறை சாதனங்கள், எலக்ட் ரோனிக் சாதனங்கள் பழுதாகும். சிறுசிறு விபத்துகள் வரக்கூடும். சாலை விதிகளை மீறாமல் வாகனத்தை இயக்குங்கள். சவாலான காரியங்களைக்கூட கையில் எடுத்து முடிக்க துணிவீர்கள். குடிநீரை காய்ச்சி அருந்துங்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளும் அதிகரிக்கும்.

### கன்னி

இராசியின்மீது அமர்ந்திருக்கும் குரு பகவான் ஐந்தாம் வீட்டைப் பார்ப்பதால் குழந்தைகள் படிப்பில் சிறக்கவோ, அவர்களுக்குத் திருமணம் ஆகவோ அல்லது அவர்கள் குழந்தைப் பேறு அடையவோ வாய்ப்பு உள்ளது. ராசி யின்மீது ராகு அமர்ந்திருப்பது இரண்டுவிதமான விளைவுகளை ஏற்படுத்தும். வெளிநாடு செல்லும் யோகம் ஏற்படும். மனதில் தேவையற்ற குழப்பங்களும் சஞ்சலங்களும் ஏற்படும் மனதை உறுதியாக வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் பயப்படுவதுபோல எதுவும் நடக்காது. பரிகாரம்: செவ்வாய், ஞாயிற்றுக்கிழமைகளில் ராகுகாலத்தில் விளக்கேற்றி துர்க்கையை வழிபடுவது மிகவும் நல்லது.

### துலாம்

எதிலும் உற்சாகத்தோடு செயல்படு வீர்கள். நினைத்த காரியங்கள் உட னுக்குடன் நடந்தேறும். வீட்டுக்கு தேவை யான அலங்கார பொருட்கள் வாங்குவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தார் தங்கள் தேவைக்கு உங்களையே பெரிதும் சார்ந்திருப்பர். செலவிற்கேற்ற வரவு தொடரும். பேச்சில் அடுத்தவர்களுக்கு அறிவுரை சொல்லும் கருத்துக்கள் இடம்பெறும். அண்டை அயலாருக்கு உதவி செய்வீர்கள். செல்போன் பராமரிப்பு செலவு கூடும். உறவினர் இல்ல விசேஷங்களில் முக்கியத்துவம் பெறுவீர்கள். பிள்ளைகளின் செயல் வேகத்தை கண்டு பெருமிதம் கொள்வீர்கள். பேச்சால் தர்மசங்கடத்திற்கு ஆளாவீர்கள். விருந்தினர்கள் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

### விருச்சிகம்

எந்த சூழலையும் தைரியத்துடன் எதிர்கொள்வீர்கள். சாமர்த்தியமான பேச்சால் இக்கட்டான சூழலை சமாளிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பேச்சில் நகைச் சுவை கலந்திருந்தாலும் காரிய சாதனை இருக்கும். சிறப்பான வரவு இருக்கும். உண-வில் எண்ணெய் பலகாரங்களை தவிர்க்கவும். அண்டை வீட்டார் உதவிகேட்டு உங்களை நாடி வருவர். பிள்ளைகளின் தைரியமான செயல்களைக் கண்டு பிரமிப்பீர்கள். அதேநேரத்தில் அவர்களை நல்வழிப்படுத்துவதில் சிரத்தை அவசியம். கண் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் உடல்நிலையில் சிரமம் தோன்றும். வாகனப்பயணத்தின்போது கூடு தல் கவனம் அவசியம். வாழ்க்கைத்துணையின் பணிச் சுமையை குறைக்க முக்கியப் பங்காற்றுவீர்கள். குடும்பப்பெரியவர்களின் ஆலோசனைகள் பயன்தரும்.

### தனுசு

எதிலும் உரிய அங்கீகாரம், மரி யாதை எதிர்பார்ப்பீர்கள். மனதில் தர்ம சிந்தனைகள் கூடும். எதையும் விதிமுறையின்படி செய்யவேண்டும் என்பதில் கவனம் கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தினர் உங்கள் பணிச்சுமையில் பங்கெடுத்துக் கொள்வர். சேமிப்பு உயர்வடையும். உடன்பிறந்தாரோடு இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். உணவில் ருசிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பீர்கள். நண்பர்களின் சந்திப்பால் கலகலப்பாக இருப்பீர்கள். வயதில் மூத்த உறவினர்கள் உதவி நாடிவருவர். பிள்ளைகளின் வாழ்க்கை தரம் உயரும். உங்கள் மதிப்பு உயரும். உடல்நிலையில் உண்டாகும் சில மாணவர்கள் தொழிற்முறைக் கல்வியில் நாட்டம் கொள்வர்.

### மகரம்

நினைத்ததை சாதிப்பீர்கள். சிரம மான காரியத்தையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். நிலுவையில் உள்ள காரியங்களை செய்துமுடிக்க சரியான தருணம் இது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப விவகாரங்களில் உங்கள் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறும். நீண்டநாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த தொகை ஒன்று வந்துசேரும். புதிய சொத்து வாங்க முற்படலாம். பயணத்தின்போது பால்ய சிநேகிதர் ஒருவரை சந்திப்பீர்கள். குடும்பப் பெரியவர்களின் துணையோடு சொத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வாழ்க்கைத்துணையின் எண்ண ஓட்டத்தை புரிந்துகொண்டு தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.

### கும்பம்

வேகத்தை விடுத்து நிதானித்து பணியாற்றுவீர்கள். அதிக சிரமமின்றி எளிதாகக் காரியமாற்றுவீர்கள். திட்டமிட்டுச் செயல்பட்டால் காரிய வெற்றி சாத்தியமாகும். குடும் பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப உறுப்பினர்களின் குறிப்பறிந்து அவர்களின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சீரான பணவரவு தொடரும். அடுத்தவர்களுக்கு அறிவுரை சொல்வீர்கள். புதிய முயற்சிகள் விரயம் தரும். சூடான பொருட்களை கையாளும்போது அதிக கவனம் தேவை. நண்பர்களோடு கலந்துரையாடுவதில் மகிழ்ச்சி காண்பீர்கள். உறவினர்களின் சந்திப்பு சந்தோஷம் தரும். வீட்டை அழகுபடுத்த அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் திறமை யைக் கண்டு வியப்பீர்கள்.

### மீனம்

எதிலும் பரபரப்பாக செயல்படுவீர்கள். எதிலும் போட்டிகளை சமாளிக்க வேண்டியிருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பதற்றத்தை தவிர்க்கவும். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பண வரவு சிறப்பாக இருக்கும். சேமிப்பு உயரும். தங்க, வெள்ளி நகைகள் சேரும். நகைச்சுவைக்காக பேசும் கிண்டலான பேச்சுக்கள் அடுத்தவர் மனதைப் புண்படுத்தக்கூடும். அண்டை வீட்டாரோடு அநா வசிய மனஸ்தாபம் தோன்றும். வயது முதிர்ந்த உறவினர் ஒருவர் உதவி கேட்டு உங்களை நாடி வருவார். பிள்ளைகளின் செயல்கள் மகிழ்ச்சி தரும். மருத்துவ செலவு ஏற்படும். ரத்த அழுத்தம், நீரிழிவு உள்ளவர்களுக்கு உடல்நிலையில் சிறப்பு கவனம் அவசியம்.

## பாம்பு, பல்லிகளுடன் விளையாடும் குழந்தைகளை பார்த்து ரசிக்கும் அதிசய தந்தை





அமெரிக்காவில் ஊர்வன விலங்குகள் வளர்ப்பில் அதிக ஆர்வம்கொண்ட தந்தை ஒருவர், அந்த விலங்குகளுடன் தனது குழந்தைகளையும் விளையாட விட்டு ரசித்துப் பார்த்துவருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வசித்துவரும் Eric LeBlanc என்பவர், நூற்றுக்கணக்கான பள்ளிகள் மற்றும் பாம்புகளை வளர்த்து வருகிறார்.

இவரது மூன்று குழந்தைகளும், பல்லிகள் மற்றும் பாம்புகளுடன் விளையாடுவதற்கு அனுமதித்துள்ளார். இதில் அச்சமூட்டும் விசயமாக 19ft அடிகொண்ட python என்ற விஷமில்லாத மலைப்பாம்புடன் குழந்தைகள் விளையாடுகின்றனர்.


## போராடும் துணைவர்கள்





சீனாவின் ஹெனான் மாகாணத்திலுள்ள வென்ஸியான் நகரில் தன் மனைவியை சுமந்துகொண்டு ஓடும் போட்டியொன்று அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்குபற்றிய சிலரை படங்களில் காணலாம்.

## போரின் வடுக்கள்...



போர் நாசத்தினால் அழிந்த நகரத்தின் மத்தியில் தங்கள் திருமணப்படங்களை எடுத்துள்ளனர் திருமண தம்பதியினர். போர் நாசத்தினால் அழிந்த நகரத்தின் பின்னணியில் திருமணப்படங்களை எடுத்துள்ளனர். "இறப்பைவிட வாழ்க்கை வலுவானது" என்பதை உணர்த்த இவ்வாறு செய்ததாக தெரிவித்துள்ளனர். சிரியாவின் ஹொம்ஸ் நகரில் இந்த நிகழ்வு நடந்துள்ளது.

அண்மையில் புதிதாக திருமணம் செய்து கொண்ட நாடா மெர்ஹி 18, மற்றும் ஹசன் யுசுவ் 27 இருவரும் தங்கள் திருமணப் படங்களை பெரிதும் சேதமடைந்து இடிந்துள்ள கட்டடங்களின் பின்னணியில் எடுத்துள்ளனர். காதலும் போரும் முற்றிலும் மாறுபட்டதென்பதை முன்னிலைப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



டைட்டானிக் படத்தில்வரும் காதல் காட்சிபோன்று வானத்தில் பறந்தநிலையில் ரொமான்ஸ் செய்யும் இரு ஆந்தைகளின் படம் இணையங்களில் இப்போது பிரபல்யமாகி உள்ளது. 1997 இல் வெளிவந்த டைட்டானிக் படத்தில் கப்பலின் முகப்பில் ரோஸ் கைகளை விரித்தநிலையில் நிற்க அவளின் பின்னால் இருந்து ஜாக் அணைப்பது போன்ற காட்சி பிரபல்யமானது.

இதேபோன்ற நிலையில் ஆந்தை இறக்கைகளை விரித்துப் பறந்தநிலையில் அதன் இணை பின்னால் பறந்தபடி தென்னாபிரிக்காவின் ஜொகன்னர்ஸ் பேர்க்கில் மார்க் ட்ரைஸ்டாலேவால் எடுக்கப்பட்ட இந்தப் படமும் அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது.

## காதல் ஜோடிகள்



## வெளி உலக தொடர்பில்லாமல் வாழ்ந்துவரும் ஆதிவாசிகள்...





மலேசியாவின் கெலண்டன் பகுதியை சேர்ந்தவர் முகமது சாலே பின் டோலாஹ். புகைப்படத்துறை ஆர்வமுடைய இவர். பல்வேறு பகுதிகளுக்கு சென்று அங்குள்ள மக்கள், சூழல் ஆகியவற்றை புகைப்படம் எடுத்துள்ளார். இந்நிலையில் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் வசிக்கும் மென்டாவை (Mentawai) ஆதிவாசிகள் தொடர்பான புகைப்படத் தொகுப்பை வெளியிட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் பூர்வக்குடிகளான மென்டாவை மக்கள் அவர்களின் பச்சைகளுக்காகவும்(Tattoos) மற்றும் மென்டாவை தீவுகளில் வாழ்ந்துவரும் அரை நாடோடி வாழ்க்கைக்காகவும் புகழ்பெற்றவர்கள். மேலும் தாங்கள் வசிக்கும் இடங்களை வேட்டையாடும் விலங்குகளின் மண்டையோடுமூலம் அமைத்து வாழ்பவர்கள் அவர்கள்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.